உ

சிவமயம்

யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணை கலட்டி

# வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

24.04.2014

www.kaladdyooraan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூல மூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணை கலட்டி

# வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

வெளியீடு :

**தேவஸ்தானம்**

24.04.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | : | மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் |
| உரிமை | : | யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் |
| காலம் | : | 24.04.2014 வியாழக்கிழமை |
| பக்கங்கள் | : | xxxvii + 79 |
| வெளியீடு | : | தேவஸ்தானம் |
| ஆக்கங்கள் | : | வி. பிரணவன் ஐயர் |
| பதிப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>681, கே.கே.எஸ். வீதி,<br>யாழ்ப்பாணம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்


# ம.ச.வேதாரணியக் குருக்கள்

முட்டிக் கொற்றாவத்தை பிள்ளையார் கோவில் பிரதமகுரு,
பண்டிதர்,
சோதிடமணி,
சித்தாந்த சைவப்புலவர்,
ஆகம ஆலய நிர்மாண வாதிரி

தம்பசிட்டி,
பருத்தித்துறை.


29/3/2014

[illegible]

வண்ணார் பண்ணை வடகிழக்கு கொட்டடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரண சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேக நிகழ்வினைத் தொடர்ந்து நிகழும் மண்டலாபிஷேகப் பூர்த்தியின் போது வழங்கிய ஆசியுரை.

வண்ணார் பண்ணை வடகிழக்கு கொட்டடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்ததையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றனம். இந்த ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யத் தேவையான நிதியை வழங்கி ஊக்கமளித்த அவ்வூர் மக்களுக்கும் இவ்வாலய வழிவழிப் பூசகர்களாக விளங்கும் திரையம்பா ஐயர் அவர்களின் குடும்பத்தாருக்கும், விநாயகப் பெருமானின் பாத கமலங்களைப் பணிந்து இன்றியமையாத வாய்ப்புகளைப் பெற்று வாழ்க வென வாழ்த்து நல்லாசிகளை வழங்கிக் கொள்கின்றனம்

ம.ச. வேதாரணியக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

விநாயகர் அடியார்களே!

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ (5) மஹா கும்பாபிஷேகம் *(19.03.2014)* அன்று நடைபெற்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது.

"வேண்டுவோர் வேண்டுவதை ஈவதற்கு உலகத்திற்கு முழுமுதல் நாயகனான விநாயகர் கலட்டியில் கோயில் கொண்டு எழுந்தருளி யிருந்து அருள்பாலிப்பது எல்லோருக்கும் புனிதத்தைத் தருவதாகும்". "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனும் முது மொழிக்கமைய "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் நித்தம் எம் பிரான் கோயில்புகுதல்" என்றும் நம் சமயம் உணர்த்துகின்ற நெறியை துரையப்பா ஐயர் குடும்பத்தினரின் ஆற்றுப்படுத்தலில் இவ்வாலயம் மேலோங்கி வருகின்றது.

இவ்வாலயத்தில் 1984ஆம், 1989ஆம் ஆண்டுகளில் கும்பாபி ஷேகங்களை அடியேன் செய்ததை இவ்விடத்தில் நினைவு கூறுகின் றேன். அந்த வகையில் எனது சிவாச்சாரியார்களில் முதன்மை யானவராக விளங்கும் சிவஸ்ரீ துரை. விவேகானந்தக் குருக்களின் தலைமையில் நடைபெற்ற இப்பெருஞ் சாந்தி விழா எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது. அனைவரும் " மண்ணில் நல்ல வண்ணம் வாழ" விநாயகரைப் பிரார்த்தித்து அமைகின்றோம்.

இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தியை முன்னிட்டு நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகமும் நிகழ்ந்து கும்பாபிஷேக மலர் வெளிவருவதும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மலர் என்றும் விழா மலராக மணம் கமழ வேண்டுமென விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க "

**சிவஸ்ரீ மா. சோமஸ்கந்த தண்டபாணி கதேசிகர்**

இந்துமத குருபீடாதிபதி,

பிரதமகுரு – வல்வை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,

வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

ஆசிச் செய்தி

28.1.03.2014

விநாயகர் அடியார்களுக்கு:-

யாழ்ப்பாணம் ... கட்டுப் பகுதியில் நீண்ட காலமாக கோயில் கொண்டிருந்த அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றமை அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. விநாயக அடியார் அனைத்து மக்களும் போற்றி வழிபடப்படுகின்ற விநாயகர். தமிழும், சைவமும், பண்பாட்டு கலாசார விழுமியங்களும் நிறைந்து உள்ள இப்பிரதேசத்தில் சிறந்த ஆலயங்களை கொண்டும் அறிஞர்களும் நிறைய பேர்களையும் கொண்டு விளங்கும் கட்டுப் பகுதி சைவ மக்களுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இங்கு நடைபெற்ற கும்பாபிஷேகம் அனைத்து மக்களுக்கும் நல்லொழுக்கமும் மனஅமைதியையும் நாட்டில் சுபீட்சமான செழிப்பையும் இறைவன் தந்தருள வேண்டும் என்றும் இறைவனை பிரார்த்திக்கின்றோம். இக் கும்பாபிஷேக மலர் வெளியீட்டு நிகழ்வினையும் ஆலய ஸ்ரீ நிர்வாகத்தினரையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம். ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை தரிசனம் செய்து அனைவரும் மனதில் நல்ல உணர்வை அடைவோமாக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபைச் செயலாளர் அவர்களின் ஆசியுரை



**இறைவன் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்கட்டும்**

இறைவனுடைய திருவருட்கடாட்சத்தை மிகைப்படுத்தவும் ஆலயத்தில் ஏற்பட்ட பழுதுகளைச் சீர்செய்து புதுப்பிக்கவும் அடியார் களின் வேண்டுதல்களை நிறைவு செய்வதற்காகவும் செய்யப்படுவது சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம். அந்த வகையில் யா/வண்ணை கலட்டியம்பதியில் பல்லாண்டு காலமாக வீரகத்தி விக்னேஸ்வரர் என்ற திருநாமம் கொண்டு கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இறையருளும் ஆலய ஆதீனகர்த்தாக்களின் பெருமுயற்சியும் கிராம மக்களும் ஒன்றுசேர்ந்து ஆலயத்தைப் புதுப்பித்து சம்புரோக்ஷணத் திருவருளோடு வீற்றிருந்து வேண்டுவோர் வேண்டுவதை வாரிவழங்கிக் கொண்டிருக்கின்றார்.

இக் கும்பாபிஷேகத்தைத் திறம்பட நடாத்திவைத்த துரையப்ப ஐயர் விவேகானந்தக் குருக்கள் குடும்பத்தினருக்கும் ஆதீனகர்த்தாக்களுக்கும் அடியவர்களுக்கும் வீரகத்தி விநாயகரின் பெருங்கருணை பரிபூரணமாகக் கிடைக்க வேண்டி எம் குலதெய்வம் அரசடி விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ ச. மகாலிங்கக் குருக்கள்**
சமாதான நீதிவான்
யா/ நாயன்மார்கட்டு,
அரசடிப் பிள்ளையார் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதீன கர்த்தாக்களின் ஆசியுரை

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வடகிழக்கு கலட்டியம் பதியில் 150 வருடங்களுக்கும் மேலாக வீரகத்தி விநாயகர் என்னும் திருநாமம் கொண்டு அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமானுக்கு எமது தந்தையாரான சிவஸ்ரீ துரையப்பா ஐயாவின் காலத்தில் 1949ஆம் ஆண்டு ஆவணி மாத உத்தர நட்சத்திரத்தில் சம்புரோக்ஷண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. பின்பு 1984ஆம் ஆண்டு ஆவணி மாத உத்தரட்டாதி நட்சத்திரத்தில் வல்வெட்டித் துறை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகரால் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகமும் 1989ஆம் வருட ஆனி மாத மூல நட்சத்திரத்தில் வசந்த மண்டப கும்பாபிஷேகமும் அவராலே நடாத்தப்பட்டது. மீண்டும் 1999ஆம் வருடம் ஆனி மாத சுவாதித் திருநாளில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்களால் மஹா கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது.

தற்போது ஆலயம் வடக்கு வீதி சுற்றுப் பிரகார வேலைகள் ஓரளவு பூர்த்தியாகி மூலஸ்தான துவிதள சுந்தர விமானத்தின் சிற்பங்கள் இந்தியா, கொள்ளிடம், சீர்காழியைச் சேர்ந்த திரு. க. புருஷோத்தமன் அவர்களால் புதிதாக வடிவமைக்கப்பட்டு ஆலயம் முற்று முழுதாக வர்ணம் தீட்டப்பட்டு சுவஸ்திஸ்ரீ விஜய வருடம் பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் (19.03.2014) புதன்கிழமை முற்பகல் 9.40 மணி முதல் 11.29 மணி வரையிலான இடப லக்கின சுப வேளையில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்களால் சம்புரோக்ஷண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது. தென்னிந்திய வேதாரணிய சைவக்குருமார் வழித்தோன்றலான சிவஸ்ரீ அ. வைத்திலிங்க ஐயரவர்களாலும் அவர்தம் புதல்வர் சிவஸ்ரீ வை. அருணாசலக் குருக்கள் அவர்களாலும் பின்னர் சிவஸ்ரீ அ. துரையப்பா ஐயரவர்களாலும் தொடர்ந்து உயர்திரு. து. வைத்திலிங்க ஐயா அவர்களால் ஆலயம் பராமரிக்கப்பட்டு வரும் வேளையில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் பிரதமகுருவாகக் கடமை யாற்றுகின்றார். 1989ஆம் ஆண்டு வரை அலங்கார உற்சவமே இவ்வாலயத்தில் நடைபெற்றது. எமது உறவினரும் திருநெல்வேலி முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுருவான சிவஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள் அவர்கள் அலங்கார உற்சவத்தின் போது கடமையாற்றியதை இப்போதும் மறக்க முடியாது. பின்னர் கட்டுவன் கணேசக் குருக்கள் என்று அழைக்கப்படும் சிவஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள், அவர் புதல்வர் சிவஸ்ரீ சி. ஆறுமுகக் குருக்கள் தொடர்ந்து நாயன்மார்கட்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சோ. பாலசுந்தரக் குருக்கள் போன்றோர் அலங்கார உற்சவத்தில் பிரதமகுருவாக கடமையாற்றியுள்ளார்கள். 1984ஆம் வருட மஹா கும்பாபிஷேகத்தின் போது சோ. பாலசுந்தரக் குருக்கள் ஐயா அவர்கள் தான் 45 நாட்கள் மண்டலாபிஷேகத்தினை நிறைவேற்றியவர். சில வருடங்கள் வண்காட்டுத்துறை அம்பலவாணப் பிள்ளையார் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் அவர்கள் அலங்கார உற்சவ பிரதம குருவாகப் பணிபுரிந்துள்ளார். 1985ஆம் வருடம் பங்குனி மாதத்தில் ஆலய அர்ச்சகரான விவேகானந்த ஐயாவுக்கு சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் குருக்களால் ஆச்சார்யாபிஷேகம் நடாத்தப்பட்ட பின்னர் விவேகானந்தக் குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா கிரியை முதல் உற்சவங்கள் யாவும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வீரகத்தி விநாயகரின் திருவருளாலும் ஆலய பிரதமகுருவின் விடாமுயற்சியாலும் அடியார்களின் உதவிகளினாலும் மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு 25 வருடங்கள் ஆகின்றன. தாவடியில் உயர்திரு த. கந்தையா அவர்களது காணியில் இருந்து தொண்டர் ஆ.க. மயில்வாகனமும் ஆலய பிரதமகுருவும் சேர்ந்து கறுப்பையா என்பவரது கைவண்டியில் உயர்தர தேக்கு மரம் எடுத்து வந்து வண் ஐயனார் கோயிலடியில் கந்தையா என்னும் ஆசாரியினால் கொடிமரம் வடிவமைக்கப்பட்டு 1989ஆம் ஆண்டு மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது. அதேசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுத்துறை பிள்ளையார் கோயில் கட்டுத்தேரில் விநாயகர் வீதிவலம் வருவார். 1993ஆம் வருடம் சிறிய கட்டுத்தேர் உருவாக்கப்பட்டு 2008ஆம் வருடம் வரை தேர் உற்சவம் நடை பெற்றது. 2009 ஆம் வருடம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தைச் சேர்ந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ திரு. தி. ஜெயப்பிரகாஷ் அவர்களால் புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு அத்தேரிலே விநாயகர் வீதியுலா வருகின்றார். இவ்வாலயத்தில் பிள்ளையார் கதை, நோன்பு, துரையப்பா ஐயா காலத்தில் இருந்து இன்றுவரை நியமம் தவறாமல் நடைபெற்று வருகின்றது. வளர்பிறை சதுர்த்தி, சங்கடஹரசதுர்த்தி, சித்திரை வருடப்பிறப்பு அபிஷேக உற்சவம், மானம்பூ, திருவாதிரை, வரலஷ்மி விரத வழிபாடு, கந்தஷஷ்டி, தீபாவளி, தைப்பொங்கல், சிவராத்திரி, பங்குனி மாத உத்தரத்தில் பஞ்சமுக விநாயகர், மணவாளக்கோலம், சித்திரைப் பூரணை விரதபூஜை இவை யாவும் சிறப்பான முறையில் நடைபெறும் வேளையில் உபயகாரர்களும் ஒத்துழைப்புத் தருகின்றார்கள்.

எம்பெருமானை வழிபடுபவர்கள் யாவரும் கல்வியில் உத்தியோகத்தில் வியாபாரத்தில் வெளிநாடுகளில் சிறப்பான முறையில் வாழ்கின்றார்கள். இங்கு மாணவச் செல்வங்கள் புலமைப்பரீட்சை மற்றும் உயர்வகுப்பு பரீட்சையின்போது விநாயகரின் திருப்பாதங்களில் தங்கள் பரீட்சை உபகரணங்களை வைத்து அர்ச்சனை செய்வித்து வழிபட்டு சித்தியெய்தியிருக்கின்றார்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு பெறும்போதும் விநாயகரை வழிபட்டு ஆசிகள் பெறுவார்கள். இவ்வாறு தொண்டு புரிந்தவர்கள் வெளிநாடு களில் வசித்தும் சிலர் திருமண பந்தத்திலும் இணைந் திருக்கின்றார்கள். இவ்விநாயகருக்கு தொண்டு புரிந்தோர் யாவரும் நல்வாழ்வு வாழ்கின்றார்கள். நடைபெற்ற திருப்பணிக்கு உதவிபுரிந் தோர்கள் சில திருப்பணிகளை தமது பொறுப்பாக எடுத்து நிறைவேற்றியவர்கள். குட முழுக்கு, நாள்குறித்த குருமார்கள், போதக, சாதக ஆசிரியர்கள், உபசாதகர்கள், பணியாற்றிய குருமார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகசம்ரட்சகர்கள், உதவி அர்ச்சகர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், சிற்ப ஆசாரிமார்கள், கலச யந்திர ஆசாரியார், வர்ணம் தீட்டியோர், மங்கள இசைக் குழுவினர்கள், சுவாமியை அலங்கரித்த குருமார்கள், வேத ஸ்தோத்திர விற்பன்னர்கள், பண் இசைத்தோர், ஆசிபுரிந்த குருமார், நல்லை ஆதீன சுவாமிகள், சமயப் பெரியோர்கள், ஒலி, ஒளி, வீடியோ அமைப்பாளர்கள், கூரை வேலை ஆசாரிமார், கட்டட, மரவேலைப் பொருட்கள் தந்தவர்கள் யாவர்க்கும் வீரகத்தி விநாயகர் நல்லருள் புரியவேண்டும்.

அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் திருப்பணிக்காக 2013ஆம் வருட மஹோற்சவத்தினை இடைநிறுத்தி அவ்வுற்சவத்திற்கான உபயப் பணத்தினைத் தந்த உபயகாரப் பெருமக்களுக்கும் ஏனைய உற்சவங்களான சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, பிள்ளையார் கதை, கந்தஷஷ்டி, திருவாதிரை, சிவராத்திரி விழாவிற்கான சகல உபயகாரர்களும் தங்களின் உபயப் பணத்தைத் தந்திருந்தார்கள். கலட்டி வாழ் மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அவர்கள் அனைவரும் விநாயகரின் திருப்பணிக்கு உதவி புரிந்துள்ளார்கள். எனவே எமது வேண்டுகோளை ஏற்று தங்கள் இயல்புகளுக்கு ஏற்ற விதத்தில் உதவிகள் புரிந்த அடியார்கள் அனைவருக்கும் வேழமுகத்து வீரகத்தி விநாயகப்பெருமான் எல்லாவிதமான அஷ்ட ஐஸ்வர்யங்களையும் வழங்க வேண்டுமென பிரார்த்தித்து இம் மஹா கும்பாபிஷேகப் பலனை அடியார்கள் பெற்று இம்மண்ணில் நல்வாழ்வு வாழவேண்டுமென ஆசி கூறுகின்றோம். வளரும் ஆலயத் திருப்பணிக்கு, மலரும் அன்புடன் நிதி தருக.

இம் மலர் வெளியீட்டிற்கு ஆசிகள், வாழ்த்துக்கள், சமயக்கருத்துக்கள் தந்தவர்களுக்கும், ஊக்கம் தந்தவர்கட்கும் விநாயகர் அருள்புரிவாராக. இம்மலர் என்றும் வாடாத மலராக மணம் வீச வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வசாதகாசிரியரின் ஆசியுரை

வேதாகமங்களிலே கூறப்படுகின்ற ஆகமக் கிரியைகளுடன் இசைவுறும் வகையில் அமைகின்றது. மஹா கும்பாபிஷேகம் அந்த வகையில் யாழ். வண்ணார் பண்ணை கலட்டி பிரதேசத்தில் இற்றைக்குப் பல நூற்றாண்டு காலமாக கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு 19.03.2014 அன்று புதன்கிழமை விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எங்கும் பரந்து இருக்கும் இறைவன் வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயும் பொருட்டு இவ்வாலயத்தில் விநாயகப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று இம்மலர் மண்டலாபிஷேகப் பூர்த்தி நன்நாளில் வெளிவருகின்றது. இக் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசனம் செய்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. புண்ணியச் செயலை ஆற்றும் ஆலய சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் ஊர் மக்களுக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து**


சிவாகம கிரியா கலாநிதி சிவாக வித்தகர்

**சிவஸ்ரீ. இ. பாலகிருஸ்ணக் குருக்கள்**

பிரதமகுரு,

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோவில்,

கொம்மந்தறை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாசியும் வாழ்த்தும்

சிறப்புக்கள் பல பெற்ற ஈழத் திரு மண்ணுக்கு மணிமகுடம் சூட்டி மகிழ்வன எண்ணற்ற திருக்கோயில்கள் . கோயிலில்லா ஊர் நீரில்லா குளத்தையும், நிலவில்லா வானத்தையும் போன்றதாகும். ஊருக்கு பெருமை கோவில். கோவிலுக்குப் பெருமை ஊர் நலம். இவ்வகையில் கலட்டியம்பதியில் எழுந்தருளி வீற்றிருந்து திருவருளனைத்தும் வழங்கும் அப்பனாக வீரகத்தி விக்னேஸ்வரர் விளங்குகின்றார். தொன்மைத் தன்மையும் பெருமையும் கமழும் இத்திருக்கோயிலைக் காண்போர் நலம் பெறுவர்.

அப்பனின் திருக்குடமுழுக்குப் பெருவிழா வெகு சிறப்பாக நடைபெற்று மண்டலாபிஷேகப் பூர்த்தி தினத்தில் நாளும் சிறந்து. கும்பாபிஷேகத் திருநாளையொட்டிய கும்பாபிஷேக மலர் தெய்வீகத் தன்மையோடும் பக்தி மணம் பரப்பி மலர்கின்றது. இவ் வேளையில் நாட்டில் சமாதான வாழ்வு மலர்வதற்கான அமைதிப் பொழுதும் பெருகிவருகிறது. எல்லாம் வல்ல வீரகத்தி விக்னேஸ்வரப் பெருமான் எல்லோருக்கும் நல்லருள் கடாட்சம் வழங்கி உய்விப்பாராக.

**சிவஸ்ரீ த. விசாகரத்தினக் குருக்கள்**
கலட்டி மகாமாரி
அம்மன் தேவஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

யாழ்ப்பாணம், வண்ணை, கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு து. விவேகானந்தக் குருக்களது பிரார்த்தனையாலும் முயற்சிகளினாலும் இன்றைய நாளின் பெருந்தோற்றப் பொலிவுடன் காட்சி தருகின்ற வீரகத்தி விநாயகரின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு மலர் வெளியிடுவதனைக் கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அமரர் துரையப்பா ஐயா அவர்கள் மேற்படி இவ்வாலயத்தில் தனது வாழ்க்கைக் காலம் முழுவதும் அயராத தொண்டுகளை மேற்கொண்டுள்ளார். பின்பு இவரின் பணியைத் தொடர்ந்து இவரது மகனும் எனது சிறிய தந்தையும் குருவுமான து. விவேகானந்தக் குருக்களும் இவ்வாலயத்திற்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித் துள்ளார். அன்றைய காலப் பகுதியில் சிறிய ஆலயமாகக் காட்சியளித்தது. அப்போது சதுர்த்தி, பெருங்கதை விரதம், திருவெம்பாவை, நவராத்திரி, ஆவணிச் சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி. வருடாந்த மஹோற்சவம் போன்ற விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன. அக்காலப்பகுதியில் விநாயக ரும், வைரவர், சந்தான கோபாலர், நாகதம்பிரான், சண்டேஸ்வரர் போன்ற தெய்வங்கள் மாத்திரமே காணப்பட்டன. பின்பு படிப்படியாக து.விவேகானந்தக் குருக்களின் அயராத முயற்சியினால் மஹாலட்சுமி, சனீஸ்வர பகவான், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியசுவாமி, பஞ்சமுகப் பிள்ளையார் போன்ற தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. கொன்றை மர நிழலில் அமைந்து வீரகத்தி விநாயகர் இன்றைய காலப்பகுதியில் அழகும் அருளும் நிறைந்த தோற்றப் பொலிவுடன் காணப்படுவதைக் கண்டு மிகவும் மகிழ்வடைகின்றேன்.

இவ்வாலயத்தில் 1990-1995 வரையான காலப் பகுதியில் அடியேன் தொண்டாற்றியதை எனது பாக்கியமாக எண்ணுகின்றேன். இக்காலத்தின் பின்பு நான் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தாலும் யாழ்ப்பாணம் வருகை தருகின்ற போதும் இவ்வாலயத்திற்கு வந்து எனது சேவையை மேற்கொண்டுள் ளேன். இது விநாயகப் பெருமான் எனக்குத் தந்துள்ள ஆசியாகும். மேலும் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளையும் மேற்கொண்டது எனது பாக்கியமாகும்.

அத்துடன் கும்பாபிஷேக தினத்தன்று வந்து பிள்ளையாருக்கு கும்பாபிஷேக உதவிகளையும் பிரதான கும்ப தரிசனமும், அலங்காரம் செய்ததையும் எனது பாக்கியம் என எண்ணி மகிழ்வடைகின்றேன். மேலும் கும்பாபிஷேக தினத்தன்று ஏனைய குருமார்கள் தங்களது தொண்டுகளையும் மேற்கொண்டுள்ளனர். இது மட்டு மல்லாது விநாயகரின் பக்தர்கள் தமது குறைகளையும் மனச் சஞ்சலங்களையும் கூறி விநாயகரின் கும்பாபிஷேகத்தை இரு கண்களினாலும் பார்த்து தமது வாழ்க்கையில் பெரும் புண்ணிய பலன்களைப் பெற்றுள்ளார்கள்.

மேலும் இவரது காலத்தைத் தொடர்ந்து இவரது மகனும் எனது அன்புச் சகோதரனுமான வி. பிரணவன் ஐயா அவர்களது காலப்பகுதியிலும் இப்பணிகள் தொடர வேண்டுமெனக் கூறி இம்மலர் சிறந்த வடிவமாக வெளிவர ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் பாதங்களைப் பணிந்து ஆசி கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

**சிவஸ்ரீ க. ஈ. விக்னேஸ்வரக் குருக்கள்**
வெள்ளவத்தை,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாசிகள் உரித்தாகுக

கலட்டியம்பதி வீரகத்தி விநாயகரின் பெருஞ்சாந்தி விழாவில் பங்குபற்றிய, உதவி புரிந்த அடியார்கள் அனைவருக்கும் எம்பெருமான் நல்லருள் புரிய வேண்டும். எமது தந்தையோடு சிவப் பணியாற்றிய மூத்த சிவாச்சாரியார்களும், ஏனைய சிவாச்சாரியார்கள் யாவரும், எமக்கும், அடியார்கட்கும் நல்லாசிகள் வழங்க வேண்டும். அத்துடன் இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தியும் மலர் வெளியீடு உற்சவமும் நடைபெறுகின்றது.

இவைகள் நல்லபடியாக நிகழவும் கும்பாபிஷேகத்திற்கு தேவையான உதவிகளை வழங்கிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களுக்கும், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் அவர்களுக்கும், மாநகர சபை ஆணையாளர் அவர்களுக்கும், இம்மலரினை அழகுற அச்சிட்டுத்தந்த யாழ்ப்பாணம் கரிகணன் தனியார் நிறுவனத்தினருக்கும், ஊழியர்களுக்கும், யாழ் மாவட்ட பொலிஸ் மா அதிபர், ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், யாழ். பிறவுண் வீதி மின்சாரசபை அதிகாரிகள், சிற்பவேலைகள் செய்த இந்தியாவைச் சேர்ந்த புருஷோத்தமன், மணிமாறன் குழுவினர், வர்ண வேலைகள் செய்த நிமலன் குழுவினர், கூரை வேலைகள் செய்த திரு. தேவராசா குழுவினர், திரு. அ. தருமராசா குழுவினர், திரு. ந. கிருஸ்ணகுமார் குழுவினர், கடையிற்சுவாமிகள் குருவார அன்னசத்திர சிவன் தேவஸ்தான ஆதீனகர்த்தாவிற்கும் அந்த ஆலயச் சூழலில் இருந்து வந்து தொண்டுகள் செய்த அடியவர்கள் அனைவருக்கும் எம்பெருமான் நல்லருள்புரிய வேண்டுமென கணநாதப் பெருமானைப் பிரார்த் தனை செய்கிறேன்.

**சிவஸ்ரீ வி. பிரணவன் ஐயர்**
ஆலய அர்ச்சகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வடகிழக்கு கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ (15), மஹா கும்பாபிஷேகம் 2014.03.19 அன்று மிகக் கோலாகலமாக நடைபெற்றதை அறிந்து உவகை அடைகின்றோம். இக் கும்பாபிஷேகம் இவ்வாலயத்தின் நான்காவது கும்பாபிஷேகம் ஆகும். இவ்வாலயத்திற்கும் அடியேனுக்கும் நெருக்கமான தொடர்புண்டு. இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தா அமரர் துரை. வைரகுலநாதன் குடும்பத்தினர் என்மீது ஆழ்ந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தவர்கள். அத்துடன் எனது மைத்துனரும் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவான சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P அவர்களும் 1984ஆம் ஆண்டு ஆவணி மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்திலும் 1984ஆம் ஆண்டு ஆனி மாதம் மூல நட்சத்திரத்திலும் நடைபெற்ற இரு கும்பாபிஷேகங்களையும் தலைமை தாங்கி நடாத்தி வைத்தார். மேலும் 1985ஆம் ஆண்டு பங்குனி மாதம் சிவத்துரை விவேகானந்தக் குருக்கள் 2001ஆம் ஆண்டு வைகாசி மாதம் சிவஸ்ரீ சி. தயாளக் குருக்கள் இருவருடைய குருப்பட்டாபிஷே கத்தையும் திறம்படச்செய்து தீட்சா குருவாக விளங்குகின்றார்.

1999ஆம் ஆண்டு ஆனிமாதம் சுவாதி நட்சத்திரத்தில் இவர் துரை. விவேகானந்தக் குருக்கள் அவர்களால் சுஷம்புரோக்ஷண கும்பாபிஷேகம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. தற்பொழுது மீண்டும் அவர் தலைமையில் 2014ஆம் ஆண்டு பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற்று இருக்கின்றது. பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறையேனும் நைமித்திய பூசைகளில் கும்பாபிஷேகக் கிரியைகளைக் காண வேண்டியது கட்டாயம் என்ற விதியை இவ்வாலயம் சார்ந்தவர்கள் கடைப்பிடிப்பது போற்றுதற்குரியது.

மேலும் இப்புண்ணிய கைங்கரியத்தில் தங்களை அர்ப்பணித்து சகலவிதத்திலும் உதவி புரிந்த அனைவருக்கும் திருவருட்கடாட்சம் கிட்டுவதாக. அத்துடன் மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழாவை நடாத்தி வைத்த மதிப்பான குருமார் அனைவருக்கும் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா பூரணமாக நடைபெற்று நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம், சுக வாழ்வு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று நாமும் வேழ முகத்து விநாயகரைப் பிரார்த்திப்பதோடு சிவஸ்ரீ துரை. விவேகானந்தக் குருக்கள் ஆற்றுப்படுத்தலால் மேலும் இவ்வால யம் சிறக்க ஆசி கூறி அமைகின்றோம்.

**" இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க "**

**" வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும் "**

**சிவத்திரு. தியாகசுவாமிக் குருக்கள்**
**நாகேஸ்வரன் ஐயா**
(நெடிய காட்டுப் பிள்ளையார் கோவில் வில்வை)

இல. 1, கிரிசலி இடம்,
டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள்**
සිවශ්‍රී තියාග කෙංගාතර කුරුක්කල්
SIVASRI THIYAGA KENGATHARA KURUKKAL


ராஜகிரி
பலாலி வீதி,
புன்னாலைக்கட்டுவன்,
கன்னாகம்.

குமரன் சோதிட ஆய்வகம்
ஈவினைப் பிள்ளையார் வீதி,
புன்னாலைக்கட்டுவன்,
கன்னாகம்.
தொ.பே. :- 0777 110146


---

யாழ்ப்பாணத்துப் புன்னாலைக் கட்டுவன் பதியிலே [illegible] ஆலயத்தைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரும் சிறப்பாக மேலோங்கி பெருவிழாக்கள் பொலிவோடு காட்சியளிக்கின்றது. இவ்வாலயமானது பெருமையோடு அமைந்திருக்கின்றது. உள்ளே நுழையும்போது பக்திமார்க்கத்தை ஊட்டுகின்றது. அங்கே விநாயகப்பெருமான் போல இருந்து எங்களுக்குக் காட்சி கொடுக்கின்றார். விநாயகப்பெருமானை உருவேற்றுவது போன்ற மனமாற்றம் ஏற்படுகின்றது.

இவ்வாலயம் [illegible] திருப்பணிகள் நிறைவேற்றி [illegible] கண்டு இன்று மண்டலாபிஷேகத்தை அடைந்துள்ளது.

இத்துடன் எல்லாம் [illegible] தொண்டர் [illegible] ஐயா அருளும். திருப்பணிகள் செய்தவர்கள் செய்வித்தவர்கள் நிதியுதவி செய்தவர்கள் மண்டலாபிஷேகம் செய்தவர்கள் எல்லோருக்கும் சித்தி விநாயகர் ஆசிகள் அருள்வார்.

இவ்வாலயம் மேன் மேலும் நற்செல்வமும் திருப்பணிகள் நிறைவு பெறவும் அங்கு நடைபெறும் கிரியைகள் எப்போதும் [illegible] போல பொங்கி சீர்த்தி பெறவும் எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகரைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

சிவஸ்ரீ. தியாக கெங்காதரக்குருக்கள்
அகில இலங்கை சமாதான நீதவான் JP
குமரன் சோதிட ஆய்வகம்
புன்னாலைக்கட்டுவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் மென்மேலும் முன்னேற்றம் அடைய வேண்டும்

காலத்திற்குக் காலம் ஆலயங்களில் சிவாகம மரபுக்கேற்றவாறு பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கும்பாபிஷேகங்கள் நடைபெறும். அதேபோல கலட்டியம்பதி விநாயகருக்கு இம்முறை விஜய வருடம் பங்குனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் புனரா வர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் ஆலயக் குருக்களின் தலைமையில் நடைபெற்றிருப்பது மிகவும் ஆனந்தமாகவுள்ளது. சிவஸ்ரீ துரையப்பா ஐயா விவேகானந்தக் குருக்களின் அயராத முயற்சியால் அவ்வூர் அடியார்களின் ஒத்துழைப்போடு ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வண்ணமயப்படுத்தி தலைசிறந்த குருமாரின் பக்கபலத்தோடு குருக்கள் பணியாற்றியுள்ளார்.

எமது மருமகன் ஐங்கரன் ஐயா திருவிழாக் காலத்தில் சாதகாசிரியராக இங்கு அரும்பணி புரிவார். குருக்கள் அவர்கள் இரண்டாவது தடவையாக நிறைவேற்றிய கும்பாபிஷேகம் நன்றாக இடம்பெற்றுள்ளது. அடியேன் ஸ்பரிசாகுதி அன்று ஆலயத்திற்கு வந்திருந்தேன். ஆலயத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். இன்னும் ஆலயம் வளர வேண்டும். அடியார்கள் வேண்டியதை எல்லாம் ஐங்கரப் பெருமான் கொடுத்தருள வேண்டும் என்று எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் இவ்வூர் அடியார்கட்கும் அருள்பாலிப்பாராக.

**சக்தி உபாசகர் சிவஸ்ரீ இ. குமாரசுவாமிக் குருக்கள்,**
பிரதம குரு,
அம்பாள் ஆலயம், சிட்டிவேரம்.
கொடிகாமம் அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

**தென்மராட்சி மிருசுவில் படித்த மகளிர் திட்டத்திலுள்ள அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் ஆலய தர்மகர்த்தா சிவத்திரு நவரத்தினம் மனோன்மணி அவர்களின் நல்லாசியுரை.**

ஈழமணித் திருநாட்டின் சிகரமென விளங்கும் வண்ணார் பண்ணை வடகிழக்கில் கலட்டி என்னும் பதியில் எழுந்தருளி அருள்புரியும் வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகமும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் சங்காபிஷேகமும் நடைபெறுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆலயங்களிலே நடைபெறும் சகல ஹோமம் முதலாய கிரியைகளினால் எம்பெருமானின் திருவருட்கடாட்சம் மேலோங்கப்படுகின்றது. நித்திய நைமித்திய பூசைகளில் ஏற்படும் குற்றம் குறைகள் யாவும் சீர்பெற மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று எம்பெருமானின் திருவருட் கடாட்சம் மேலோங்கப் பெறுகின்றது. இப்பெருங் கைங்கரியத்தை வண்ணை கலட்டி வாழ் மக்கள் மனமுவந்து நடாத்த எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது என்றால் மிகையாகாது.

தனக்கு மேலொரு நாயகன் இல்லாததால் விநாயகர் என்று போற்றப்படுகின்றவரும் கணங்களுக்கு அதிபதி என்பதால் கணபதி என்றும் சிவபெருமானின் மூத்த குமாரன் என்பதால் முன்னவன் என்றும் யாவர்க்கும் மூத்தவன் என்றும் நாமங்களைப் பெறுகின்றார்.

நாம் எக் காரியங்களைச் செய்யும் போதும் முன்ன வனைச் சிந்தித்து அவர் பாதம் பணிந்தேத்தி விக்னமின்றி எமது காரியத்தை நிறைவேற்றுகின்றோம். அதனால் செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும். அப்பொருள் யாவன் ஐயமின்றி உளதாகும். அந்தக் கரும்ப பயன்யாவன் உய்யும் விளையின் பயன் விளைவில் ஊட்டி விடுவிப்பான். எவன் அப் பொய்யில் இறையைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே நாமெல்லோரும் அவனது தாளை வணங்கிச் சரணடைந்து வாழ்வோமாக.

வானுலகும் மண்ணுலகும் வாழ
மறை வாழ
பான்மை தரு செய்ய தமிழ்
பார்மிசை விளங்க
யானை முக ஐந்துகர மூன்றுவிழி
நால்வாய்
யானை முகனைப் பரவி அஞ்சலி
செய்வோம்

இவ்வூரின் வடகிழக்குப் பதியில் எழுந்தருளி தன்னை நாடி வந்து நினைந்துருகிப் பணியும் அடியார்க்கும் தம்மாலியன்ற பொருளுதவி, நிதியுதவிகள் வழங்கிவரும் அன்பர்க்கும் ஏனைய பணிகள் தொண்டுகள் செய்த அனைவருக்கும் எதுவித பேதமுமின்றி எம்பெருமான் அருட்கடாட்சம் கிடைக்க வாழ்த்தி வணங்குகின்றோம்.

**சி. நவரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

அருள்மிகு கலட்டி வீரகத்தி விநாயகர் கோவில் மஹா கும்பாபி ஷேகத்தை நடாத்தி, அதன் நினைவாக ஒரு சிறப்பு மலர் வெளிவருவது குறித்து மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம். மேற்படி கோயிலுக்கு தேவையான திருத்த வேலைகளையும் செய்வித்து கும்பாபிஷே கத்தையும் நடாத்தி வைத்த ஆலய குரு, து. விவேகானந்தக் குருக்கள் அவர்கட்கும் மற்றும் விநாயக அடியார்கள் அனைவருக்கும் எம் பெருமானின் திருவருள் கிட்டுவதாக.

விநாயகப் பெருமான் அருளால் யாவரும் மனநிறைவான இன்ப வாழ்வைப் பெற வேண்டும் என்று எமது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**"சர்வே ஜனாஹா சுகினோபவந்து**
**சமஸ்த சன்மங்களானி பவந்து"**

**பிரம்மஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள்**
சந்தான கோபால சர்மா,
பிரதான சிவாசாரியார்,
வண். காட்டுத்துறை,
பிள்ளையார் கோயில்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் மென்மேலும் வளர்ச்சி பெறுக

யாழ்ப்பாணம் வண்ணைக் கலட்டியம்பதியுறை வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகத்தில் அடியேன் இத்துடன் மூன்றாவது தடவையாக கலந்து கொண்டுள்ளேன். இக்கலட்டியம் பதியில் புகழ்பூத்த ஆலயங்கள் அமைந்துள்ளன. சிவன், பெருமாள், அம்பாள் ஆலயங்கள் அதோடு விநாயகர் ஆலயம் என வண்ணார் பண்ணையை அலங்கரிக்கின்றன. 1984 ஆம் வருட மஹா கும்பாபிஷேகம் எமது குருநாதர் சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் தலைமையில் நடைபெற்றது மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. அவ்வேளையில் உயர்திரு வைத்திலிங்கம் அவர்கள் இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர் எம்மை அழைத்திருந்தது இன்றும் நினைவில் உள்ளது. மீண்டும் 1989ஆம் வருடம் வசந்தமண்டபத்திற்கும் கர்ப்பக் கிரக விநாயகருக்கும் சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்து. முதன் முறையாக அதே வருடம் ஆனி மாத உத்தர நட்சத்திரத்தைத் தீர்த்த தினமாக நிர்ணயம் செய்து மஹோற்சவம் ஆரம்பிக்கப்பட்டது. மீண்டும் 1999 ஆம் வருடம் ஆனி மாத சுவாதித் திருநாளில் மஹா கும்பாபி ஷேகம் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக் களால் பஞ்ச குண்ட பக்ஷமாக நடாத்தப்பட்டது. இப்போது பிரதம குருவின் அயராத முயற்சியால் அடியார்களின் உதவியோடும் ஆலயம் உள்வீதிக் கொட்டகை திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அவரது தலைமையில் மிகவும் ரம்மிய மான முறையில் சிவாகம பூர்வமாக பஞ்ச குண்ட பக்ஷ துவி தள சுந்தர விமான அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்துள்ளது.

ஆரம்ப காலத்தில் சிறி ஆலயமாக இருந்தது. படிப்படி யாக ஆலயம் வளர்ச்சி பெற்று வருவது எம்பெருமானின் திருப்பெருங் கருணையே என்றால் மிகையாகாது. எமது தந்தையார் சிவஸ்ரீ சு. வேதாரண்யக் குருக்கள் எமது சிறிய தந்தை சிவஸ்ரீ முத்துக்குமாரக் குருக்கள் போன்றோர் ஆற்றிய பணிகளை எமது மைத்துனர் விவேகானந்தக் குருக்கள் அடிக்கடி நினைவு கூருவார். அடியேனும் எனது மைத்துனர் சிவஸ்ரீ அ. திருஞானசம்பந்தக் குருக்கள், சிவஸ்ரீ சேவற் கொடியோன் குருக்கள் போன்றோர் இங்கு மஹோற்சவ குருவாகக் கடமையாற்றியுள்ளோம். எனவே இப்பெருமை கள் வாய்ந்த வீரகத்தி விநாயகரை வணங்கி அடியார்கள் யாவர்க்கும் சகல அஷ்ட ஐஸ்வர்யங்களும் கிடைக்க எம்பெருமானைப் பிரார்த்தித்து குருக்கள் அவர்களின் பணி மென்மேலும் தொடர விநாயகர் அருள்புரிய வேண்டுமென வேவிலம்பதி வீரகத்தி விக்னேஸ்வரப் பெருமானை வேண்டிக் கொண்டு நல்லாசிகளை வழங்கி அமைகிறேன்.

**சிவஸ்ரீ வே. பாலசந்திரக் குருக்கள்**
வேவில் விநாயகர் ஆலய பிரதம குரு,
வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பணிகள் மென்மேலும் வளரட்டும்

வண்ணைக் கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நல்லபடியாக நிகழ்ந்து, இன்று மண்டலாபிஷேகப் பூர்த்தியும், மஹா சங்காபிஷேகமும். மலர் வெளியீடும் வெளிவருவது விநாயகரின் பெருமையை மிகவும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. எமது அத்தான் விவேகானந்தக் குருக்கள் அடியேனை இவ்வாலயத்தில் மஹோற்சவ குருவாகப் பணியாற்ற நியமித்ததை என்னால் என்றும் மறக்க இயலாது.

மேற்படி குருக்கள், எமது மைத்துனர் பாலச்சந்திரக் குருக்கள். அடியேன் மூவரும் வல்வை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவிலில் 1995-1996 காலப் பகுதியில் பணியாற்றியதை இன்றும் நினைத்தாலும் மகிழ்ச்சியாக உள்ளது. இரண்டு வருடங்கள் நெடிய காட்டு விநாயகர் ஆலயத்தில் மஹோற்சவ குருவாக விவேகானந்தக் குருக்கள் பணியாற்றி, அவ்வூர் அடியார்கள் பரிபாலன சபையினரின் பாராட்டுதல்களைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலய தலைவர் தருமலிங்கம் அவர்கள் குருக்களைப் பிள்ளையார் என்றே குறிப்பிடுவார். இச்சிறப்புக்கள் கொண்ட குருக்களவர்கள் தனது ஆலயத்தை வளர்த்து எடுக்க வேண்டும் என்று அல்லும் பகலும் எப்போதும் அந்நினைவாக இருப்பார். அவருடைய விருப்பத்தின்படி அடியார்களின் பேருதவியோடு இவ்வாலயம் படிப்படியாக வளர்ந்து வருவது கண்டு மகிழ்ச்சி அடையும் அதேவேளை, அடியார்கள் அனைவரும் கேட்டதெல்லாம் விநாயகர் அள்ளி வழங்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து அடியேனின் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சிவஸ்ரீ அ. திருஞானசம்பந்தக் குருக்கள்**
பிரதம குரு – துவாளி விநாயகர் அம்மன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிற்பாசாரியார் க. புருஷோத்தமன் அவர்களின் வாழ்த்துரை

இலங்கை, யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய துவிதள சுந்தர விமானத்துக்கு திருவுருவங்கள் அமைத்துக் கொடுப்பதற்கு அடியேனை அணுகிய குருக்களின் புத்திரன் பிரணவன் ஐயா வேண்டிக் கொண்டபடி மிகக் குறுகிய காலத்தில் அவகாசம் தந்த விநாயகரின் அருளை எண்ணிப் புளங்காங்கிதம் அடைகிறேன்.

யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த ஆலயங்களில் பணிபுரிந் துள்ளேன். அதேபோல் ஐயா, ஐயாவின் புத்திரன் பிரணவன் ஐயா அடியார்களின் விருப்பத்தை நிறைவேற்றியுள்ளேன். பணியாற்றிய தொழிலாளர்களுக்கு ஸ்ரீ விநாயகர் அருள்புரிய வேண்டும். ஆலய வாசலில் கோபுரம் ஒன்றும் நிர்மாணிக்க பெருமான் அனுக்கிரகம் பண்ண வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**க. புருஷோத்தமன்**
கொள்ளிடம்,
சீர்காழி,
இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஸ்வப் பிரம்மஸ்ரீ பாஸ்கர ஆசாரியார் வழங்கிய வாழ்த்துரை

வண்ணை கிழக்கு, கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் ***19.03.2014*** புதன்கிழமை சிறப்பாக நிகழ்ந்து மண்டலாபிஷேகப் பூர்த்தியாகி இன்று சங்காபிஷேகமும் மலர் வெளியீடும் நடைபெறுவது சாலப் பொருந்துகின்றது. அடியேனுக்கும் இவ்வாலயத்திற்கும் இடையில் ஆன்மீகத் தொடர்பு நீண்ட காலமாக இருக்கின்றது. வைரவர், வீரபத்திரர், சந்தானகோபாலர், கொடித்தம்பம் தற்போது கர்ப்பக்கிரக கலசம், யந்திரங்கள் அனைத்தும் அடியேனால் அமைக்கப்பட்டது. அத்துடன் பஞ்சமுக விநாயகரையும் உருவாக்கிக் கொடுத்துள்ளேன்.

எமது அயலில் உள்ள ஆலயம் இந்த அளவுக்கு வளர குருக்களும், அடியார்களும் மிகுந்த பிரயாசைப்படுகிறார்கள். ஆகவே இப்பணிகள் ஆற்றும் எல்லோரும் நீண்டகாலம் வாழ வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து நல்வாழ்த்துக்களை வழங்கி நிறைவு செய்கிறேன்.

**பாஸ்கரன் ஆசாரியார்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

வண். வடகிழக்கில் கோயில் கொண்டெழுந்தருளி வேண்டுவோர்க்கெல்லாம் வேண்டும் வரம் தந்தருளும் விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேக மலர் வெளியிடப்படுவதும் எம்பெருமானின் அருட் செயலாகும். நாம் அறிந்தவகையில் எம் பெருமானுக்கு இது நான்காவது மஹா கும்பாபிஷேகம். எமது தந்தையாராகிய அமரர் அ. துரையப்பா ஐயர் காலத்தில் (1949) மஹா கும்பாபிஷேகம் நடை பெற்றதாக அறிய முடிகிறது.

1979இல் நடைபெற்ற பாலஸ்தாபன வைபவத்தின் போது அடியேன் தர்ப்பை அணிந்து கொண்டேன். இவ் வைபவத்திற்கு அமரர். க. சிவலோகநாதக் குருக்கள் குருவாகப் பணிபுரிந்தபோது தர்ப்பை அணிந்தால் மட்டும் போதாது முழுப்பணியையும் செய்து முடிக்க வேண்டும் என்றார். இது என் மனதில் நன்கு ஆழமாகப் பதிந்து கொண்டது. அன்றைய ஆலயம் காட்டுக் கல்லும் சுண்ணாம்பும் சேர்த்து கட்டப்பட்ட அகலமான சுவர்களைக் கொண்டதாகும். மூலஸ்தான தூபி நான்கு வைரக்கற்களின் மேல் அமைக்கப்பட்டிருந்தது.

மூலஸ்தானத்திலிருந்து பலிபீடம் வரை இடிக்கும் பணியில் அடியேனும் சகோதரர்களும் சில இளைஞர்களும் ஈடுபட்டிருந்தோம். இப்பணியில் ஈடுபட்டிருக்கும்போது எவருக்கும் சிறுகாயம் கூட ஏற்படவில்லை. அவர்கள் வாழ்க்கையும் சீரும் சிறப்புமாக இருக்கிறது. இப்பணி முடித்து நாங்கள் இரவு படுக்கச் சென்ற பின்பும் அலவாங்கு கொண்டு தொடர்ந்து இடித்த சத்தம் கேட்டதாக மறுநாள் காலையில் அயலவரான அமரர். ஒவசியர் கந்தையாவின் மனைவி (அமரர்) என்னிடம் சொன்னார். இச்செயல் எமக்கு விநாயகப் பெருமானின் மகிமையைப் புரிய வைத்தது. இத் திருப்பணியில் ஈடுபடும்போது "விநாயகரே உங்களது கும்பாபிஷேகத்திற்கு முன்பு எனக்கு ஒரு அரசபணி கிடைக்க வேண்டும்" என்று மனதார வேண்டிக் கொண்டேன். எனது எண்ணத்தையும் நிறைவேற்றிக் கொண்டார்.

இவை பற்றி இங்கு ஏன் குறிப்பிடப்படுகின்றதெனில் கலட்டி வீரகத்தி விநாயகரின் மகிமையைப் புரிய வைப்பதற் காக. தற்போதைய (2014) மஹா கும்பாபிஷேகம் விரைவில் சிறப்பாக ஒப்பேறியதும் எம் விநாயகப் பெருமானின் செயலும் பிரதமகுருவின் விடாமுயற்சியும் அடியார்களின் ஒத்துழைப் புமே ஆகும். நடைபெற்ற மஹா கும்பாபி ஷேகத்திற்கு தமது பங்களிப்பை நல்கிய விநாயகப் பெருமான் அடியார் கள் அனைவர்கட்கும் கலட்டி வீரகத்தி விநாயகரின் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம். 1984ஆம் ஆண்டும் 1999ஆம் ஆண்டும் சிறப்பான முறையில் மஹா கும்பாபி ஷேகங்கள் நடைபெற்றன.

**திரு. து. சுரேந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசியுரை

சி. தியாகராஜா (S.T.R)
திருக்கேதீஸ்வர ஆலய அறங்காவலர்
யாழ். செந்தில் கதிர்வேலாயுத சுவாமி கோயில் தலைவர்,
திருப்பணி தவமணி,
ராஜா திரையரங்கம்,
S. T. R. Film,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகத்தை ஒட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு எனது மனமகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த வைத்திலிங்கம் அவர்களின் அழைப்பின் பேரில் **1979**ஆம் ஆண்டு இவ்வாலயத்தின் மூலஸ்தான கல்நாட்டு விழாவில் கலந்து கொண்டது இன்னும் என் மனதில் பசுமையாக நினைவில் நிற்கின்றது. அது எனக்கு விநாயகர் தந்த ஆசீர்வாதம். இவ்வாலயம் தற்போது அயலவர்கள், அடியார்கள் மற்றும் அனைவரின் உதவியுடன் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வடகிழக்கு கலட்டி எனும் ஊரில் பிரமாண்டமான வளர்ச்சி அடைந்துள்ளது.

மேலும், அ. துரையப்பா ஐயர் குடும்பத்தினர் (ஆதீன கர்த்தா) பரம்பரை பரம்பரையாக இந்த ஆலயத்திற்குத் தொண்டாற்றி வருகிறார்கள். ஆலய பிரதமகுருவின் மகனான தம்பி பிரணவன் அவர்கள் என்னைத் தொடர்பு கொண்டு ஆலய கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ள வேண்டும் என அன்பான வேண்டுகோள் விடுத்தார். எனது உடல்நலம் மற்றும் வேலைச்சுமை காரணமாக எனக்கு விநாயகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகத்தைத் தரிசிக்க முடியவில்லை. அது எனக்கு மிகவும் கவலையை அளிக்கிறது. விநாயகப் பெருமான் தனது மஹா கும்பாபிஷேகச் சிறப்பு மலரிற்கு எனக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதற்கு சந்தர்ப்பம் வழங்கியது எனது வாழ்க்கையில் நான் செய்த புண்ணியமாகும்.

ஆலயத்தின் பிரதமகுருவாக இருக்கும் சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் அவர்களின் தலைமையில் பல சிவாச்சாரியார்கள் சேர்ந்து நடாத்திய கும்பாபிஷேகத்தின் மூலம் இந்த நாட்டுக்கும் வீட்டுக்கும் மக்களுக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்க எல்லாம் வல்ல ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானை வேண்டி வணங்குகின்றேன்.

**திரு. சி. தியாகராஜா (S.T.R)**
திருப்பணி தவமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දුරකථන අංක/ தொலைபேசி இல./ Telephone Nos.:

දිසා විනිසුරු / மாவட்ட நீதிபதி / DISTRICT JUDGE — 021-2263265

රෙජිස්ට්‍රාර් / பதிவாளர் / REGISTRAR — 021-2263058

ෆැක්ස් / பெக்ஸ் / FAX — 021-2263265

මගේ අංකය / எனது இல. / MY No.

ඔබේ අංකය / உமது இல. / YOUR No

දිනය / திகதி / DATE

**දිසා අධිකරණය, පේදුරුතුඩුව**
**மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை**
**DISTRICT COURT, POINT PEDRO**

# வாழ்த்துச் செய்தி

யாழ். மாவட்டத்தில் பெருமை வாய்ந்த ஆலயமாகவும் தனக்கெனப் பல தனிச்சிறப்புக்களையும் கொண்டு விளங்குவது வண்ணார் பண்ணை கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயமாகும். "உய்வாருதவு நிதிவாங்கித் திருப்பணி செய்வார் பெறுக சிவம்" என்ற சமயநெறி வாக்கு மரபுக்கு ஏற்ப அடியவர்களின் காணிக்கையினால் இவ்வாலயத்தின் திருப்பணி வேலைகள் யாவும் நிறைவுபெற்று மஹா கும்பாபிஷேக நிகழ்வு நடைபெற்றது. பெரும் மகிழ்வைத் தருகின்றது.

"செம்மலர் நோற்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே".

என்ற சைவசித்தாந்த தத்துவத்திற்கு ஏற்ப, பன்நெடுங்காலமாக அடியவர்களுக்கு அருள்பாலித்து அற்புதங்களை ஆற்றிவரும் விநாயகருக்கு நடாத்தப்பட்ட மஹா கும்பாபிஷேக நிகழ்வுகளை தொடர்ந்து நடைபெறும் கிரியைகளும், நிகழ்வுகளும் அனைத்தும் சிறப்புற நிகழ்வதற்கும் விநாயகப் பெருமானை வேண்டுவதோடு பேரருட்கடாட்சம் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டி இந்நன்னாளில் எம்பெருமானுடைய அருட் சிறப்புக்களையெல்லாம் தாங்கி வெளி வருகின்ற மஹா கும்பாபிஷேக மலர் சிறப்பாக அமைய வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

**திரு. ஜெ. கஜநிதிபாலன்**
நீதிபதி,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary
Telephone 021-222 2235
Fax 021-222 2355
E-mail: gajaffna@sltnet.lk
General Telephone 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

My No. GA/JF/VN/03 Your No. Date 10.04.2014



# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

திருமூலரால் சிவபூமி என அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் வடபால் தனிச்சிறப்புடன் விளங்கும் யாழ்ப்பாண மாநகருக்கு அணித்தாய் உள்ள வண்ணார்பண்ணைக் கிராமத்தில் கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் அமைந்தது அவ்வூர் மக்களின் போற்றுதற்குரியதாகின்றது.

"திருக்கோவில் இல்லா திருவிலூர் அடவிகாடே" என்னும் திருநாவுக்கரசரின் தேவாரப்பாடலடிகள் இங்கே குறிப்பிடத்தக்க தாகும். அந்தவகையில் விநாயகர் ஆலயம் பெரும் சிறப்போடு அருட்கடாட்சம் சிறப்புற அமைவதற்கு ஏதுவாக ஆலயத்திருப்பணி அவ்வூர் மக்களின் வேண்டுதல்களை நிறைவுசெய்வது மட்டுமன்றி எல்லோருக்கும் இன்பத்தைத் தரும் நிகழ்வும் ஆகும்.

மேற்படி மஹா கும்பாபிஷேக மலர் சிறப்புற அமைய வாழ்த்தி பெருமகிழ்வடைகின்றேன்.

நன்றி

**திரு. சுந்தரம் அருமைநாயகம்**
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය / தொலைபேசி / Telephone } 021-222 2235

ෆැක්ස් / பக்ஸ் / Fax } 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

සාමාන්‍ය දුරකථන / பொது தொலைபேசி / General Telephone } 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.**
**District Secretariat, Jaffna.**

මගේ අංකය / எனது இலக்கம் / My No. } GA/JF/VN/03 | ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. } | දිනය / திகதி / Date } 10.04.2014

# வாழ்த்துச் செய்தி

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்னும் உறுதி மொழிக்கு அடிப்படையாய் விளங்குவது கோயில்களாகும். இதனாலேயே "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்னும் ஔவையாரின் கூற்றிலிருந்தும் கோயில்களின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டிருப்பதனை நாம் காணலாம்.

கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் 150 ஆண்டு காலத்துக்கு மேல் இந்தியாவின் வேதாரணிய வழித்தோன்றலில் வந்த குரு பரம்பரையினரால் அர்ச்சிக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் திகழ்வது எம்மைப் பக்திப் பரவசத் தில் ஆழ்த்துகின்றது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நிகழும் மஹா கும்பாபி ஷேகம் மிகச் சிறப்புற இடம்பெற்றுள்ளது. இத்தகைய செய்திகளை, சிறப்புக்களையெல்லாம் தன்னகத்தே கொண்ட மையும் மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ் வடைகின்றேன்.

**திருமதி ரூபினி வரதலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

யாழ்/ வண்ணார்பண்ணை, வடகிழக்கு, கலட்டிப் பகுதியில் எழுந்தருளியிருந்து அருள் ஆட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை, சிறப்புச் செய்தி மலராக வெளியிடுவதை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். வேண்டுவோர் வேண்டுவதை ஈகின்ற விநாயகப் பெருமான் இவ்வாலயத்தில் ஸ்ரீ வீரகத்தி விநாயக ராக எழுந்தருளி உள்ளார். இவ்வாலயத்தின் தலவிருட்சம் கொன்றல் மரம். இவ்வாலயத்தின் சிறப்பு மேற்குத் திசைநோக்கி இருப்பது. பல அடியார்களின் துயர் தீர்த்தவர் ஔவைப்பாட்டியை கைலாயமலைக்குத் தூக்கிவிட்டது போல பல அடியார்களை ஆபத்தில் இருந்து தூக்கி விட்டார். ஆகவே முத்தமிழால் வையத்தாரையும் வாழவைக்கும் விநாயகப் பெருமான் ஞானநிலையில் எழுந்தருளி இருப்பது அடியார்கள் ஆகிய நமக்கு ஞானத்தை உணர்த்துவதாகும்.

விநாயகரை வழிபாடு செய்து இன்பம் பெற்ற அகத்தியர், ஔவையார் அனைவருக்கும் குருவாக இருந்து குறை நீக்கி இன்பத்தைக் கொடுத்தவர். இக் கும்பாபிஷேகம் ஊர்மக்களின் நன்மைக்காகவும் உலகமக்களின் நன்மைக் காகவும் நடாத்தப்படுகிறது. பல ஆலயங்களைக் கொண்ட பிரதேசத்தில் நீர்வளம், நிலவளம், சூழல் அமைதி, ஒற்றுமை அமைந்துள்ள இவ்விடத்தில் இவ்வாலயம் தனித்துவமான சிறப்பு உடையதாகும். நம் எல்லோரையும் சீரோடும் சிறப்போடும் வாழ வைப்பது விநாயக வழிபாடு ஆகும். மனிதனை மனித நேயத்தோடு வாழவைக்க ஆலய வழிபாடு. இதனையே நம் பெரியவர்கள் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும், நித்தம் எம்பிரானுடைய கோயில் பூ என்றும், கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும் நமக்கு எடுத்து இயம்புகின்றனர். ஆலயத்தில் நடைபெறும் பூஜையும், வழிபாடும் மனித மனத்தை ஒருமுகப்படுத்தி ஆன்ம ஈடேற்றத்தைத் தருவதாகும். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இக் கும்பாபிஷேகம் மக்களுக்குப் புனிதத்தை ஏற்படுத்துவதாகும். இக் கும்பாபிஷேகத்தைச் செய்த குருமார்களுக்கும், ஆதீனகர்த்தாக்களுக்கும், ஊர்மக் களுக்கும், கும்பாபிஷேகத்தை நிறைவேற்றிய ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ விவேகானந்தக் குருக்கள் அவர்களுக்கும் ஏனைய குருமார்களுக்கும், இறை இன்பம் கிடைப்பதாக. அனைவரும் இக் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இன்று வெளி வரும் மலர் அனைவருக்கும் மகிழ்வைத் தர வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**சிவஸ்ரீ A. P. பஞ்சலிங்க ஐயர்**
கௌரி அம்பாள் ஆலயம்,
நல்லூர், பண்டாரக்குளம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
**J/ KOKUVIL HINDU COLLEGE**
ESTD 1910
T.P : 021 222 2646
Fax : 021 205 2425
E.Mail : kokuvilhindu@yahoo.com
கொக்குவில்.
Kokuvil,
(Sri Lanka)
Principal :
V. Gnanakanthan M.Ed., SLPS 1
Deputy Principal :
T. Mohanathas B.Sc., SLTS 1

Date : .1.04.2014

# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் கும்பாபிஷேக சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாலயம் நான் முன்னர் அதிபராகக் கடமையாற்றிய யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அருகில் அமைந்ததாகும். ஆகையால் இயல் பாகவே இதன் பூர்வீக வரலாற்று அருள் பிரசாதத்தை அனுபவரீதி யாக உணர்ந்தும் கேட்டும், அறிந்தும் உள்ளேன். ஆரம்ப காலகட் டத்தில் மிகச் சிறிய ஆலயமாகவும் பின்னர் விரைவான வளர்ச்சி யுடன் மகோற்சவப் பெருவிழாக் காணும் தரிசனம் மிக்கதாகவும் மாற்றங்கண்டமைக்கு வீரகத்தி விநாயகரின் பேரருட்திறனே என்பது வெளிப்படையாகின்றது.

இச்சூழலில் வளர்ந்தவரும் யாழ்மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் இருந்து சமூகப் பணியாற்றிய அமரர் துரையப்பா ஐயர் வைத்திலிங்கம் அவர்களும் அவரது சகோதரர்களும் உள்ளடங்கலாக மூதாதையர் களின் வழிநின்று இவ்வாலய வளர்ச்சியில் ஆதீனகர்த்தாக்களாக இருந்து, இறைபணியாற்றி வருதல் பாராட்டுக்குரியதாகும். கலட்டி மாநகர் பிரமாண்டமான ஆலயச் சூழலில் மக்கள் நெருங்கி வாழும் பிரதேசமாகும். அப்பகுதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் திவ்விய பேரருட்கருணை எல்லோர் உள்ளங்களிலும் பொழிந்து மகிழ்வும் சிறப்பும் நலமும் பெருக பெருமானின் திருவடிகளை மனதில் இருத்தி இம்மலர் மூலம் ஆலயச் சிறப்புக்களும் பெருமைகளும் எல்லா மக்களிடையேயும் பரவச் செய்ய எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. ஞானகாந்தன்**
அதிபர்
கொக்குவில் இந்துக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, வடகிழக்கு கலட்டி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன். தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத விநாயகப் பெருமான் இந்தக் கலட்டிப் பதியில் எழுந்தருளி வீற்றிருந்து வீரகத்தி விநாயகராக அருள்பாலிக்கின்றார்.

இவருடைய திருவருள் மகிமை சொல்லில் அடங்காது. நம்பிக்கை கொண்டு வழிபடும் அடியார்களை இந்தத் தும்பிக்கை யான் ஒருபோதும் கைவிடமாட்டான். தம்மைச் சிந்தித்து வந்தித்துச் சேவிப்பவர்களுக்கு அருள் வழங்கும் ஆனைமுகப் பெருமானுடைய இந்த மஹா கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவுற விநாயகரின் திருவடிகளை உளமாரப் பிரார்த்தித்து வணங்கி வாழ்த்துகின்றேன்.

இந்த மஹா கும்பாபிஷேக பிரதமகுருவாக விளங்கும் சிவாச்சார்ய திலகம் கணேச உபாசகர் சிவஸ்ரீ துரை. விவேகானந்தக் குருக்களின் பணி அளப்பரியது. பார்ப்பதற்கு நல்ல விநாயகரின் அருள் தோற்றமுடைய இவரது இடைவிடாத பெருமுயற்சியின் பயனே இந்தக் குடமுழுக்காகும். அவரும் அவரைச் சார்ந்தோரும் முழு மூச்சுடன் செயற்பட்டு கும்பாபிஷேகம் நிகழும் பணியில் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியது. இக் கலட்டி வாழ் மக்களும் ஆலய திருப்பணிக்கு உதவி செய்திருக்கிறார்கள். ஆகவே அத்தனை அன்புள்ளங்களும் மங்கலகரமாக வாழ எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் அருள்புரிய வேண்டுமென்று பாதகமலங்களை வாழ்த்தி வணங்குகின்றேன்.

"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

இறைபணியன்பில் வாழும்
ஆன்மிக இசைச் சொற்பொழிவாளர் "கலாபூஷணம்"
"தெய்வத் தமிழ்ச் சுடர்"
**இராசையா ஸ்ரீதரன்**
நல்லை ஆதீன சமயப் பிரசாரகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகத்தில் பங்குபற்றிய குருமார்

| | | |
|---|---|---|
| சிவஸ்ரீ துரை. விவேகானந்தக் குருக்கள் | - | ஆதீனகர்த்தா |
| சிவஸ்ரீ ம. ச. வேதாரணியக் குருக்கள் | - | தம்பசிட்டி |
| சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் (J.P) | - | வல்வெட்டித்துறை |
| சிவஸ்ரீ சதா மகேஸ்வரக் குருக்கள் (J.P) | - | நாயன்மார்கட்டு |
| சிவஸ்ரீ சதா மகாலிங்கசிவக்குருக்கள் (J.P) | - | நாயன்மார்கட்டு |
| சிவஸ்ரீ இ. பாலகிருஷ்ணக் குருக்கள் | - | கொம்மந்தறை |
| சிவஸ்ரீ தியாக. கெங்காதரக் குருக்கள் | - | புன்னாலைக்கட்டுவன் |
| சிவஸ்ரீ வி. பிரணவன் ஐயர் | - | ஆலய அர்ச்சகர் |
| சிவஸ்ரீ க. ஈ. விக்னேஸ்வரக் குருக்கள் | - | வெள்ளவத்தை. |
| சிவஸ்ரீ க. விக்னேஸ்வரக் குருக்கள் | - | வல்வெட்டி, வேவில் |
| சிவஸ்ரீ த. தில்லையம்பலக் குருக்கள் | - | மிருசுவில் |
| சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்கள் | - | வண்ணை - நல்லூர் |
| சிவஸ்ரீ நா. சிவதர்சக் குருக்கள் | - | வண்ணை - நல்லூர் |
| சிவஸ்ரீ சி. நீலகண்டக் குருக்கள் | - | வரணி |
| சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் | - | திருநெல்வேலி |
| சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள் | - | அனுராதபுரம் |
| சிவஸ்ரீ பாபுஜி ஐயர் | - | நல்லூர் |
| சிவஸ்ரீ செல்வசேனக் குருக்கள் | - | இருபாலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிவஸ்ரீ சுந்தர ரங்கநாதக் குருக்கள் | - | வழக்கம்பரை |
| சிவஸ்ரீ தி. ஜெயராஜக் குருக்கள் | - | வில்லூன்றி |
| சிவஸ்ரீ சி. ஜதீஸ்வரக் குருக்கள் | - | நாயன்மார்கட்டு |
| சிவஸ்ரீ இ. கணேஸ்வரன் ஐயா | - | குரும்பசிட்டி |
| சிவஸ்ரீ ஐங்கரன் ஐயர் | - | சிட்டிவேரம் |
| சிவஸ்ரீ ச. ஐயப்பதாசக் குருக்கள் | - | கல்வியங்காடு |
| சிவஸ்ரீ வே. பாலச்சந்திரக் குருக்கள் | - | வல்வெட்டித்துறை |
| சிவஸ்ரீ சி. ஸ்ரீதயாளக் குருக்கள் | - | நல்லூர் |
| சிவஸ்ரீ க. வீரபத்திரக் குருக்கள் | - | சாவகச்சேரி |
| சிவஸ்ரீ இ. வீரசிங்கக் குருக்கள் | - | பருத்தித்துறை |
| சிவஸ்ரீ க. ஜெயக்குமாரக் குருக்கள் | - | வல்வெட்டித்துறை |
| சிவஸ்ரீ சி. மகேஸ்வரக் குருக்கள் | - | திருநெல்வேலி |
| சிவஸ்ரீ த. விசாகரத்தினக் குருக்கள் | - | கலட்டி |
| சிவஸ்ரீ சி. இந்திரராஜக் குருக்கள் | - | துன்னாலை |
| சிவஸ்ரீ பாலமனோன் குருக்கள் | - | ஏழாலை |
| சிவத்திரு இ. இரவீந்திரன் ஐயர் | - | புத்தூர் |
| சிவத்திரு சி. குகநேசன் ஐயர் | - | நல்லூர் |
| சிவத்திரு க. ஜீவானந்தம் ஐயர் | - | துவாளி |
| சிவத்திரு ச. கோபாலகிருஷ்ணன் ஐயர் | - | இருபாலை |
| சிவத்திரு பா. ஜெயந்தன் ஐயர் | - | கலட்டி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் இதழ்களாக....


| | | |
|---|---|---|
| 1. | ஆலய வரலாறு | 01 |
| 2. | அறுகம்புல்லின் மகிமை | 03 |
| 3. | கும்பாபிஷேகக் கிரியை விளக்கம் | 04 |
| 4. | திருஊஞ்சல் பாடல் | 08 |
| 5. | விநாயகரின் திருவுருவங்கள் | 14 |
| 6. | முதல் கடமை | 19 |
| 7. | வெற்றி தரும் பெருமாள் | 20 |
| 8. | தென்னை பனையானது பெண் ஆன ஆண் | 24 |
| 9. | அதிசய ஆஞ்சநேயர் | 28 |
| 10. | குழந்தைப் பாக்கியம் அருளும் அய்யப்பன் | 29 |
| 11. | அவதாரத்தின் நோக்கம் என்ன | 31 |
| 12. | கொதசி பிறந்தது எப்படி? | 32 |
| 13. | காவிரிக் கரையில் கங்கைக் குளியல் | 33 |
| 14. | சங்கரனுக்கே சங்காபிஷேகம் | 34 |
| 15. | ஒலிகள் தோன்றலும் ஒடுங்கலும் அவன் தாளில் | 35 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 16. | ஞானியில் பக்குவம் | 36 |
| 17. | நாக கன்னிகைகள் பாவம் தீர்த்த தலம் | 41 |
| 18. | சிதம்பர மகிமை | 42 |
| 19. | திருப்பதியில் மட்டும் தான் | 43 |
| 20. | சக்கர தீர்த்தத்தில் ஸ்நானம் புண்ணியம் | 44 |
| 21. | வெளிநாடுகளில் விநாயகர் | 45 |
| 22. | நரஹரி | 47 |
| 23. | மகாலட்சுமியும் நந்தி மங்கையும் | 51 |
| 24. | விநாயகரின் மகிமை | 55 |
| 25. | திருக்கோவிலூர் தபோவனம் | 60 |
| 26. | பாவம் பறக்கும் தோஷங்கள் அகலும் | 63 |
| 27. | அகத்தியர் அருள்வாக்கு | 64 |
| 28. | அபூர்வ கோலத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி | 68 |
| 29. | கும்பாபிஷேக மகத்துவம் | 70 |
| 30. | திருப்பம் தரும் தாருகாவனேஸ்வரர் | 76 |
| 31. | நிவாரணம் தரும் நாராயணன் | 78 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய பிரதம குரு



ஆலய அர்ச்சகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாறு

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, கிழக்கு கலட்டிப் பதியில் கொன்றை மர நிழலில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் வீரகத்தி விநாயகரின் பெருமைகள் சொல்லில் அடங்கா. அடியார்களின் வேண்டுதல்களை நிறைவேற்றுவதில் அருள்கூடிய பெருமான். அதுவும் வீரகத்தி விநாயகர் எனும் நாமம் பூண்டு மேற்குத் திசை நோக்கி அருள் பாலிப்பதால் ஒருமுறை ஆலய வளவில் இளநீர் பறித்துத் தருமாறு ஒருவரைக் கேட்க அவர் பிள்ளையார் என்றால் என்ன பெரிய கொம்பா? என ஏளனம் செய்தாராம். பின்னர் மனம் மாறி இளநீர் பிடுங்கி கொடுக்கும் போது துதிக்கையும் அங்குசமும் கொண்ட வடிவில் கொம்புத் தேங்காய் விழுந்ததாகவும் கூறுவார்கள். அருணாச்சலக் குருக்கள் பூசை ஆற்றும்போது திருமஞ்சனக் கிணறு இல்லாமல் இருந்தது. கலட்டியைச் சேர்ந்த ஒருவர்க்கு நீண்ட நாட்களாகத் திருமணம் ஆகாமல் இருந்தது. குருக்களவர்கள் ஆலயத்திற்கு திருமஞ்சனக் கிணறு அமைத்துத் தருமாறு கேட்க அவ்வடியவரும் **1893**ஆம் அளவில் இக் கிணற்றினை அமைத்துக் கொடுத்ததாகவும் உடன் அப் பெண்ணிற்கு திருமணம் கைகூடியதாகவும் எமது தாயார் கூறுவார்கள். இன்றும் கிணற்றுக்கட்டில் இவ்விடயம் பொறித் திருப்பதையும் காணலாம். அத்துடன் பிள்ளையார் கதை நோன்பை நோற்பதற்காக இக்காணியில் சிறிய கொட்டிலில் பசுஞ்சாணத்தில் பிள்ளையார் பிடித்து கதை கேட்டதாகவும் பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம். மேலும் இவ்வாலயத்தில் ஓமந்தையைச் சேர்ந்த சிவஸ்ரீ. செல்லையாக் குருக்கள் என்பவர் கந்தபுராணம் ஏடு வாசிப்பதற்கு அருணாச்சலக் குருக்கள் பயன்சொல்லி வந்துள்ளார். இன்றும் அக் கந்தபுராண ஏடு எமது பாதுகாப்பில் இருக்கின்றது.


சுன்னாகம் கதிரித்தம்பிப்புலவர் என்பவரால் திருவூஞ்சல் பாடல் பாடப்பட்டுள்ளது. "ஏராரும் வண்ணையினெல் வேலி மேவும்" வீரகத்தி விநாயகர் என்ற காப்புடன் இவ்வூஞ்சல் பாடப்பட்டுள்ளது. எமது அறிவுக்கெட்டிய வகையில் 4 மஹாகும்பாபிஷேகங்கள் இங்கு நிகழ்ந்துள்ளன. முறையே **1984, 1989, 1999** தற்போது **2014**ஆம் ஆண்டு பங்குனி மாத சித்திரை நட்சத்திரத்தில் நடைபெற்றுள்ளது. மூத்த சிவாச்சாரியப் பெருமக்களால் நாள் குறிக்கப்பட்டு பாலஸ்தாபனம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம் என்பன சிவாகம பூர்வமாக நடைபெற்றுள்ளன. சிறந்த சாதகாசிரியர்கள், குருமார்கள், யாக சம்ரட்சகர்கள், உதவி அர்ச்சகர்கள், ஆசிகள், வாழ்த்துரை வழங்கியவர்கள் இப் பெருந்தகைகளை எம்மால் என்றும் மறக்க முடியாது.

இவ்வாலயத்தில் 1999ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்திற்குப் பின்னர் உயர்திரு. வைத்திலிங்கம் ஐயா அவர்கள் அரச உதவி பெற்று கொடித்தம்ப மண்டபத்தை புனரமைப்புச் செய்துள்ளார்கள். 1999ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தையும் அரச உதவி பெற்று நடாத்தியுள்ளார்கள். தற்போது ஆலய பிரதமகுருவின் பெருமுயற்சி யால் அடியார்களின் உதவி பெற்று ஆலயம் புனரமைக்கப்பட்டு வண்ணமயமாக்கி பெருஞ்சாந்தி விழா நடைபெற்று மண்டலாபிஷேகப் பூர்த்தியாகிய இன்று மஹா கும்பாபிஷேக மலர் வெளியீடு நடைபெறுவது மனமகிழ்ச்சியைத் தருகின்றது. எனவே இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் எம்பெருமான் அருள் பாலிக்க பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.




**கணபதியின் ஆயுதங்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுகம் புல்லின் மகிமை

இமையனுக்கும், திலோத்தமைக்கும் மகனாகப் பிறந்தான் அனலகன். பெயருக்கு ஏற்ற பெரும் நெருப்பாக இருந்தான் அனலகன். அவனை எவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. அனலகனின் வடிவம் எப்படியாயின் கலப்பை போன்ற பெரிய கோரப்பற்கள் உடையவன் ஆவன் கறுத்தபெரிய உருவம். எரிமலை போன்ற உயிர் பெற்று உலாவி வருவது போல் உலகத்தைத் தசித்தான்.

அவனது எரியை போன்று நெருப்பாகத் தகித்ததைத் தாங்க முடியாமல் தேவர்கள் ஐங்கரனிடம் ஓடிச்சென்று முறையிட்டனர். அனலசுரனைக் கொன்று தங்களைக் காப்பாற்றுமாறு ஐங்கரனை வேண்டினார்கள். ஐங்கரன் புன்முறுவல் செய்தார். அக்கினி மலையாக உலாவரும் அனலாக, அதனால் உலகத்திற்கு ஆபத்து எனக்கருதி அவனைப் பிடித்து விழுங்கிவிட்டார். ஐங்கரனின் அருள்தான் என தேவர்கள் ஆளாக்கப்பட்டனர்.

அனலாகசூரனை ஐங்கரன் விழுங்கியதால் பெருமான் உடம் பெல்லாம் நெருப்பாகத் தகித்தது தேவர்கள் அனைவரும் திகைத்தனர். அனலாகரன் இருந்தும் கெடுத்தான் இறந்தும் கெடுத்தான் எனக் கூறி விநாயகரை குளிர்விக்க வேண்டும் என புனிதநதி தீர்த்தங்களால் எல்லாம் அபிஷேகம் செய்தனர். குளிர்மையான சந்திரனை எம்பெருமான் திருமடியில் கூட்டினார்கள். அமிர்தத்தால் அபிஷேகம் செய்தார்கள்.

லாமிச்சம்வேர், வெட்டிவேர், விஷ்ணு தாமரை மலர்களால் கொண்டு வந்து ஒத்தடம் கொடுத்தார்கள். ஆதிஷேகன் விசாமிர்தத்தால் பெருமானைக் குளிப்பாட்டினார்கள் எனினும் விநாயகப் பெருமான் நெருப்பாகவே தகித்தார்.

அப்போது எண்பத்தெண்ணாயிரம் முனிவர்கள் வந்து ஒவ் வொருவராக இருபத்தொரு அறுகம்புல்லால் அர்ச்சனை செய்தார்கள். விநாயகப் பெருமானை மனமுருகி வேண்டினார்கள். அப்பொழுது நெருப்பு தகிந்து முன்புபோல் குளிர்ந்து விட்டார். விநாயகப் பெருமானுக்கு அன்று முதல் அறுகம்புல் தனக்கு குளிர்ச்சியான பத்திரம் என்று தேவர்களுக்கு திருவாய் மலர்ந்தருளினார்.

அறுகம்புல் பற்றி சித்தமருத்துவத்துறையில் சிறந்த வகையில் சொல்லப்பட்டுள்ளது. அறுகுக்கு இணையாக எதுவுமே இல்லை. பிராணிகள் கூட தமக்கு ஏற்படும் வயிற்று உபாதைக்கு அறுகம்புல் சாப்பிடுவதை நாம் நேரிடையாகக் காணலாம்.

தொகுப்பு:
**சிவஸ்ரீ இ. பாலகிருஸ்ணக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகக் கிரியை விளக்கம்

கும்பாபிஷேகம் என்பது குடமுழுக்கு நன்நீராட்டு பெருஞ்சாந்தி விழா எனறும் கூறுவார்கள். கிரியைகளிலே முதலில் விநாயகரை வேண்டி விக்னங்களைப் போக்க விநாயகர் வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து,

| | |
|---|---|
| **அநுஞ்ஞை** | பெருமான் இடத்தில் குறித்த சுபமுகூர்த்த நன்னாளிலே மகத்துவமான கும்பாபிஷேகத்தினைச் செய்ய இறைவனிடம் உத்தரவு கேட்டல். |
| **திரவியசுத்தி** | நேரடித் திரவியங்களைச் சுத்தம் செய்தல். |
| **திரவியவிபாகம்** | சேகரித்த திரவியங்களை ஆகம ஒழுங்கு முறைக்குப் பிரித்து, வகுத்து உபயோகிப்பது. |
| **கணபதி ஹோமம்** | மஹா கும்பாபிஷேகம், இடையூறு இன்றி நிறைவேற விநாயகப் பெருமானை வேண்டி விஷேட ஹோமம், அபிஷேகம் என்பன பிரதம சிவாச்சாரியரே செய்து வழிபடுதல். |
| **நவக்கிரக ஹோமம்** | மஹா கும்பாபிஷேகத்தால் உலகிற்கு அதிக மழையினாலும், மழை இன்மையினாலும் விரோதிகளாலும், துஷ்டர்களாலும் வரும் துன்பம் நீங்க எல்லாப் பிராணிகளின் பயம். நோய் பிணி நீங்கவும் சூரியன் முதலான நவநாயகர்களைப் பூஜித்து ஹோமம் செய்தலாகும். |
| **கிராம சாந்தி** | எல்லா விதமான சுகத்திற்கும் கிராமங்களில் உள்ள அசுர இராட்சத பிரம்மராட்சத பிசாசர்களைத் திருப்தி செய்து சந்தோஷப்படுத்தி கிராம அதி தேவதையான வைரவரைப் பூஜித்து செய்யும் சாந்தியாகும். |
| **பிரவேச பலி** | நாம் பிரவேசம் செய்து கும்பாபிஷேகம் செய்யும் இடத்தில் உள்ள எட்டுத் திக்கிலும் வசிக்கின்ற இயக்ஷர், இராட்சதர், பிசாசர், பிரம்மராட்சதர், பூதர் காளி, சரளி வைரவர் முதலிய தேவதை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் பலியிட்டு எழுப்பி அவர்களைக் கடல் மலை, வனம், நதி, மயானம் முதலிய இடங்களுக்குச் சென்று சுகமாய் வீற்றிருங்கள். இது இறைவன் கட்டளை எனக் கூறி திருப்தி செய்தல்.

**ரக்கோஷாக்ன ஹோமம்** அசுர, இராட்சதர்களின் தொல்லை நீங்குவதற்கு செய்யும் கிரியையாகும். கும்ப நீரை ஆலயம் பூராகவும் தெளித்தலாகும்.

**திசா ஹோமம்** நான்கு(திசை) திக்குகளிலும் பாசுபதாஸ்திரம், அகோராஸ்திரம் பிரத்தியங்கிராஸ்திரம், சிவாஸ்திரம் முதலான அஸ்திரங்கள் பூஜித்து காவல் செய்யும் படி கட்டளை இடுதல்.

**வாஸ்த்து சாந்தி** பூமி அசத்தான ஜட சம்பந்தம் உள்ளதனால் அதை நோக்கி சத்பாவம் உண்டாவதற்கு செய்வது அசத்த சொரூபமான பூமியை பாலாக்கினியால் தகித்து பின் பூமிக்கு அதிபதியான பிரம்மாவின் மூச்சுக் காற்றினால் சோதிரூபமாக்கி சுத்தம் செய்வதாம். நீற்றுப்பூசனிக்காயைப் பூமியின் வடிவமாகவும் விதைகளை அண்டங்களாக நினைத்து ஹோமம் செய்து பூமிக்கு அதிபதியான பிரம்மாவின் கட்டளைகளினால் பரிசுத்தமான தாகப் பாவித்தல் வாஸ்த்து சாந்தியாகும்.

**மிருத்சங்கிரகணம்** கிராமத்துக்கு சாந்தியையும் தேசம் நன்மையடையவும் நினைந்து பூமாதேவியைப் பிரார்த்தித்து கண்டத்துக்கு பூஜை செய்து மண் வெட்டியை சிவாஸ்திரமாகப் பூஜித்து பூமிதேவியின் வயிற்றில் மூன்று அல்லது ஐந்து முறை மண்ணை வெட்டி எடுத்தலாகும். எடுத்த தோஷம் நீங்க வேறு மண்போட்டு சப்த வாரிது கும்பத்தால் அபிஷேகம் செய்தலாகும்.

**அங்குரார்ப்பணம்** முளையிடுதல் முன்பு அமிர்தத்தால் சுத்தம் ஆனது உலக சேமத்தின் பொருட்டு நெல் முதலான 9 தானியங்களைப் பாலில் ஊறப் போட்டு சந்திரனை வணங்கி முளையிடுதல்.

**ரக்ஷாபந்தனம்** காப்புக்கட்டுதல் குருவானவர் உலக சேமித்திற்காக எடுத்த காரியம் செவ்வனே நிறைவேற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையூறுகள் தடுக்கா வண்ணம் 8 நாகங்களைப் பூஜித்து நூல் கட்டுதல்.

**கடஸ்தாபனம்**

குடத்தை சுத்தமாக்கி சப்த தாதுக்களும் ஜீவனும் உண்டாக்குவதற்காக கும்பத்திலேயே நூல் சுற்றி நூலில் சரஸ்வதியையும் இலக்குமி, துர்க்கை ஆகியோரையும் தூபம் குடத்தில் பிடிப்பதால் அக்னி சக்தியையும் தீர்த்தத்தில் கங்கை புண்ணிய நதிகளையும் மத்தியில் வருணனையும் நவரத்தி னங்களில் நவசக்தியையும் த்கத்தில் சதாசிவத்தை யும் வாசனைத் திரவியங்களில் சப்த மாதுருக் களையும் குடத்தில் இட்டு மாவிலையை சடையாகவும் தேங்காயை சிரசாகவும் சடாச்சரத்தை முடியாகவும் வஸ்திரம் தோலா கவும் பூநூலை பஞ்ச பிரம மந்திரமாகவும் பூஜிப்பதால் கும்பம் ஆனது. இது கடஸ்தாபனம்.

**கலாகர்சணம்**

கலைகளை இழுத்து கும்பத்தில் விடுதல் சக்தியின் இடத்திலிருந்து கலையும் கலையில் இருந்து தத்துவமும் தத்துவத்திலிருந்து புவனமும், புவனத்தி லிருந்து வர்ணமும் வர்ணத்திலிருந்து பதமும் பதத்திலிருந்து மந்திரமும் உண்டாயின. கலையில் தத்துவம் அடங்கி உள்ளதினால் தத்துவம் முதல் மந்திரம் இறுதியாக ஒன்றில் ஒன்று அடங்கி இருந்து திரும்பத் திரும்ப வந்ததால் இந்த சடத்துவாக்களை செய்ய வேண்டும் நியாசத்தால் ஆனந்த சகதித்துவமும் சித்திக்கின்றமையினால் அவசியம் செய்ய வேண்டும். தொடர்ந்து யாகபூஜை இடம்பெற்று கும்பாபி ஷேகம் நிகழும்.

## இவ் ஆலயத்தில் நிகழ்ந்த மஹா கும்பாபிஷேகங்கள்

1. சம்புரோஷண மஹா கும்பாபிஷேகம் 1949ஆம் ஆண்டு ஆவணி மாத உத்தர நட்சத்திரம்.
2. ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்
3. இரத்தாக்ஷி வருடம் 27ஆம் நாள் (12-09-1984) புதன்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரம் பிரதமகுரு:- சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் (வல்வை)
4. புதிய வசந்த மண்டபம் அமைத்து கொடியேற்றம் நடாத்துவதற்காக சுக்கில வருடம் ஆனிமாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை மூல நட்சத்திர நாளில் சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பிரமாதி வருடம் ஆனி மாத சுவாதி நட்சத்திரத் திருநாளில் (24-06-1999) ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. ஆலய பிரதம குரு:- சிவஸ்ரீ. து. விவேகானந்தாக் குருக்கள்.

**இவ்வாலயத்தில் நிகழ்ந்த பாலஸ்தாபன அபிஷேகங்கள்**

1. சர்வசித்து வருடம் மாசி மாதம் 3ஆம் திகதி (13.06.47) ஞாயிற்றுக்கிழமை.
2. 1979ஆம் ஆண்டு வைகாசி மாதம் 30ஆம் திகதி (13.06.79) புதன்கிழமை. பிரதம குரு:- திருநெல்வேலி சிவஸ்ரீ க. சிவலோகநாதக் குருக்கள்
3. வெகுதானிய வருடம் ஆனி மாதம் (19.06.1998) வெள்ளிக் கிழமை ரேவதி நன்னாளில் பிரதமகுரு:- வல்வெட்டித்துறை சிவஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர்

**விநாயகருக்குப் பிரியமான நிவேதனங்கள்**

அப்பம், மோதகம், அவல், எள்ளுருண்டை, அதிரசம், கொழுக்கட்டை

**விநாயகருக்குப் பூஜை செய்ய உகந்த மலர்கள்**

தாமரைப் பூ, முல்லைப்பூ, செவ்வந்திப்பூ, செண்பகப்பூ, வெள்ளெருக்கம் பூ, கடப்ப மலர், நொச்சி, வில்வம், அறுகம்புல்லு, வன்னி, பாதிரி, வில்வம்

**விநாயகருக்குரிய விரதங்கள்**

1. விநாயகர் சதுர்த்தி
2. பிள்ளையார் நோன்பு
3. விநாயகர் சஷ்டி
4. ஆவணி ஞாயிறு
5. சங்கடகர சதுர்த்தி
6. சங்கடகர கணபதி விரதம்

**விநாயகரை மிகச் சுலபமாக ஆவாகனம் செய்து வணங்கும் முறை**

மஞ்சள், அட்சதை, பசுஞ்சாணம், வெல்லம், புஷ்பம், இவைகளில் எதனிலும் அவரை வருவித்து வணங்கலாம்.

**விநாயகரின் அருள் கிடைக்கப் பெற்றவர்கள்**

1. ஔவையார்
2. நளமகாராசா
3. தமயந்தி
4. விக்கிரமாதித்த அரசன்
5. இலக்கண சுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஊஞ்சல் பாடல்

**காப்பு**

ஏராரும் வண்ணையிநெல்
வேலி மேவும்
இணையில்வீர கத்திவிநா
யகன்சீ ரேத்திப்
பேராரு மமுர்தமிர்து
வசன ராகம்
பிறங்கவதி மதுரமா
மூஞ்சல் பாட,
வாராருங் கலசமுலை
யுமையாளோடு
மதிமலிசெஞ் சடைப்பரமன்
மகிழ்ந்து வாழும்,
காராருங் கெதௌத
வரையின் ஞானக்
கணபதிபொன் னடிக்கமலங்
காப்ப தாமே

வேதமொரு நான்குமே
கால்க ளாக
வேதாந்த மேநேர்ந்த
விட்ட மாக,
ஏதமிலெண் ணெண்கலையே
வடம தாக
எண்ணரிய பிரணவமே
பலகை யாக,
போதமுட னினிதமைத்த
வூஞ்சன் மீதே
பொலிந்திடவீற் றிருந்துபூ
தலத்தோர் வாழ்த்த,
மேதகைமை மின்னார்பொன்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதமிகு மறையவர்சொல்
லாசி பொங்கப்
பொங்கொளிசேர் கதிரவன்பொற்
கவிகை தாங்க,
சீதமதி யூதையிணைக்
கவரி வீசச்
சித்திரவித் தகமடவார்
நடனமாட,
மாதனதன் மரகதப்பொன்
னடைப்பை தாங்க
வலாறிவடி வாள்பிடித்து
வாகா நிற்க,
வேதமா தவர் மகளிர்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.

மலரயனு மாலுமா
தவரு மேத்த
வானவர்கற் பகதருவின்
மாலை சாத்த
குலுவுபர வைக்கரசு
பனிநீர் தூவக்
குறைவிலடி யவர்களிரு
பாத நீவ,
கலவைகொள்சந் தனமுறிய
கணத்தோர் பூசக்
காமருசாந் தாற்றிகாந்
தருவர் வீச,
விலகியொளி பொழிபூணார்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயரே
யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொம்புசின்ன மெக்காளம்
பூத ரார்ப்பக்
குடமுழவு துந்துபிநெல்
வேவிபோர்ப்ப,
பம்பைதுடி கரடிதூ
ரியங்க ளேங்கப்
பங்கமில்மங் கலநல்லார்
பல்லாண்டு தேங்க,
அம்புவியோர் யாருமடி
பணிந்து வாழ்ந்த
அமரர்குழா மன்புடனஞ்
சலிசெய் தேத்த,
விம்பதி முகமின்னார்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.

நித்திலவித் தாரமணி
மாலை யாட
நிலவுபொழி தருதங்கக்
கவரி தூங்க,
உத்தமமாம் வித்துரும
மாலை யாட
யுயரியவுத் தரியமுமங்
கதமு மாடச்,
சுத்தவருண் மதஞ்சொரியுந்
துதிக்கை யாட
சொன்னவட முடனுதரா
பரண மாட
வித்தகச்சித் திரமின்னார்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையரசன் மகளீன்ற
மகனே தேனே
மலையமுனி கரசிரகங்
கவிழ்த்த கோனே,
தலைமுனுமா யவன்சாபந்
தவிர்த்த தீரா
தந்திமுக வனைப்போறிற்
சயித்த வீரா
மலைமுலைநூ லிடைவலவை
மகிழ்ம ணாளா
வரகுணபூ ஷணகணநா
தாவென் றோதி,
விலையுயர்கற் புடைமடவார்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.

அன்னையுமா தேவிநன்னீ
ராட்டி யூட்டி
யடியிணையிற் பொற்சதங்கை
கொலுசு பூட்டி,
பன்னுபரம் பரனிடத்திற்
கொடுக்க நீட்டிப்
பரமனிமம் புலிகாட்டிக்
கைத்தா லாட்டிப்,
பொன்னுலகுக் கிறையொடுபோ
கெனப் போந்தன்றே
பொருகயமா முகனைவென்ற
புகழ்கொண் டாடி,
வின்னமிலா மின்னார்பொன்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்புளநா வுடையரவா
பரண னீன்ற
காரணனே யாரணனே
கவின்சேர் ஞான்ற
ஒப்பிறுதிக் கைம்முகனே
குகற்கு மூத்த
வுத்தமனே பிரணவபூ,
ரணனே யென்னா.
அப்பமவல் முப்பழமுஞ்சர்க்
கரைநெய் தேன்பா
லதிரசமோ தகம்வடைநை
வேதித் தேத்தி,
விப்பிரமின் னார்பொன்வின்
வடந்தொட் டாட்ட
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.

ஐங்கரனே போற்றியன்பர்க்
கெளியாய் போற்றி
யாருவா கனபோற்றி
யமல போற்றி,
கங்கைவே ணியனீன்ற
களிறே போற்றி
கந்தனுக்காத் திணைப்புனத்தில்
வந்தாய் போற்றி,
துங்கமிகு நிராமயநிர்க்
குணனே போற்றி
சுருதிகுரு சுபானுபவந்
தருவாய் போற்றி,
வெங்கயமா முகவவிநா
யகனே போற்றி
வீரகத்தி விநாயகரே
யாடீ ரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாரு மக்குமணி
பூதி வாழி
பொருளாரு மைந்தெழுந்துந்
தவமும் வாழி,
தென்னாரும் வேதசிவா
கமங்கள் வாழி
தெருளாரு மறையவரோ
டரசர் வாழி,
கொன்னாருங் கற்புடைய
மடவார் வாழி,
குணமாரும் பசுவினமு
முகிலும் வாழி,
மின்னாரு மணிசெறிநெல்
வேலி வாழும்
வீரகத்தி விநாயகரும்
வாழி வாழி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் திருவுருவங்கள்

**1. பாலகணபதி**

நான்கு திருக்கரங்களும், யானை முகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.

**2. தருண கணபதி**

எட்டுத் திருக்கரங்களையும் யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு, சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.

**3. பக்தி கணபதி**

சரத் காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயச பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி யானை முகமும் உடையவராக விளங்குபவர்.

**4. வீர கணபதி**

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம். நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களிலும் சிவந்த திருமேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

**5. சித்தி கணபதி**

செவ்வந்தி வானம் போன்ற நிறமுடையவராக பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக் கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக் கொண்டிருப்பது தனியழகு. பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயமும் உடையவர்.

**6. துவிஜ கணபதி**

நான்கு திருக்கரங்களிலும் முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன்போல் வெண்மையானவர். நான்கு யானை முகங்களை உடையவர்.

**7. சக்தி கணபதி**

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுட்பட ஐந்து கரங்களில் தரித்தவரும் பொன் கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.

**8. உச்சிஷ்ட கணபதி**

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்ச மாலை இவற்றைத் தரித்தவரும் நீல நிறத் திருமேனி உடையவருமாக விளங்குபவர்.

**9. விக்ன கணபதி**

சங்கு, கரும்புவில், புஸ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களை உடையவரும் ஆபரணங்களை நிரம்பத் தரித்தவரும் பொன் மேனியருமாக விளங்குபவர்.

**10. க்ஷிப்ர கணபதி**

தந்தம், கற்பகக் கொடி, பாசம். ரத்ன கும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம்பூப் போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.

**11. ஏரம்ப கணபதி**

அபயம் வரதமாகிய கைகளையுடையவர். பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு. சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்க வாகனத்தில் ஏறியவர். யானை முகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமைநிறம் உடையவர்.

**12. லட்சுமி கணபதி**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்ணிறத்தோடு நீலத் தாமரைப் பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

**13. மஹா கணபதி**

மாதுளம்பழம், கதை, கரும்புவில், சக்கரம், தாமரை, பாசம். நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர். பிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கின்ற தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப் பெற்றவர்.

**14. விஜய கணபதி**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

**15. நிருத்த கணபதி**

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப் பெறுவர். மோதிரங் களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவைகளைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

**16. ஊர்த்துவ கணபதி**

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன் வண்ண வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

**17. ஏகாட்சர கணபதி**

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையு டையவர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களை யுடையவர், யானை முகவர், பதுமாசனத்திருப்பவர், பெருச்சாளி வாகனர்.

**18. வர கணபதி**

செவ்வண்ணர், யானை முகவர், முக்கண்ணர், பாசம், அங்கு சங்களைத் தரித்தவர், தேன் நிறைந்த மண்டையையுடையவர், பிறை முடியர்.

**19. திரயாக்ஷர கணபதி**

அசைகின்ற செவிகளில் சாமரையணிந்தவர், பொன்னிறமானவர், நான்கு கரங்களையுடையவர், பாசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர், துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

**20. க்ஷிப்ரபிரசாத கணபதி**

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விஷ்டரம் இவற்றைத் தரித்தவர், திருவாபரணங்களை அணிந்தவர், பேழை வயிற்றையுடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21. ஹரித்திரா கணபதி**

மஞ்சள் நிறமானவர், நான்கு கரங்களையுடையவர், அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.

**22. ஏகந்த கணபதி**

பேழை வயிற்றுடன் நீலமேனியர், கோடாரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

**23. சிருஷ்டி கணபதி**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்திய வர், மூஷிக வாகனத்தையுடையவர், சிவந்த மேனியையுடையவர்.

**24. உத்தண்ட கணபதி**

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக் கைகளையுடையவர். அழகிய தாமரைப் பூவை ஏந்திய பச்சை மேனியளாகிய தேவியால் தழுவப் பெற்றவர்.

**25. ரணமோசன கணபதி**

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர், வெண் பளிங்கு போன்ற மேனியர், செந்நிறப் பட்டையுடுத்தியவர்.

**26. துண்டி கணபதி**

அட்சமாலை, கோடாரி, ரத்ன கலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

**27. துவி முக கணபதி**

தந்தம், பாசம், அங்குசம், ரத்னா பாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர், பசு நீல மேனியர். செம்பட்டாடையும் ரத்தின கிரீடமும் அணிந்தவர், இருமுகம் உடையவர்.

**28. மும்முக கணபதி**

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரை ஆஸனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புவரசம்பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29. சிங்க கணபதி**

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர், வெண்ணிறமான மேனியர். யானை முகவர், சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

**30. யோக கணபதி**

யோக நிலையில் யோக பட்டம் தரித்துக் கொண்டு இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இந்திர நீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு பாசம், அக்ஷமாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

**31. துர்க்கா கணபதி**

சுட்ட பசும் பொன்னிறம், எட்டுக்கை பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர், செந்நிற ஆடையர்.

**32. சங்கடஹர கணபதி**

இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசிய மேனியளாக நீலப்பூவை ஏந்தியவளாக இருப்பவள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயாச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீல நிறமான ஆடையணிந்தவர்.

**சிவஸ்ரீ மு. சசிதரக் குருக்கள்**
நாயன்மார்கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகப் பெருமானின் 32 தோற்றங்கள்

வழிபாடு மனிதனை நெறிப்படுத்துவது. காலங்காலமாக வழிபாடு மக்களை வழிநடத்திச் செல்கிறது. பிள்ளையாரை வழிபட்டுத் தொடங்கும் செயல்கள் யாவும் இனிதே நிறைவேறும் என்ற நம்பிக்கையும் எம்மிடையே நிலைத்துள்ளது. விநாயகர், விக்கினேஸ்வரர், கணபதி எனப் பொதுவாக அழைக்கப்படும் பிள்ளையார் 32 தோற்றங்களுடையவர். பின்வரும் அட்டவணைகள் அத்தோற்றங்களை மனக்கண்ணில் காண்பதற்கு வழிவகுக்கும்.

### பால கணபதி
### *Bala Ganapathi*




வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவற்றை வைத்திருப்பவர். பால சூரியனைப் போல சரீர காந்தியுடையவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்.

### தருண கணபதி
### *Tharuna Ganapathi*



கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவற்பழம், தன்னுடைய ஒரு தந்தம், நெற்கதிர், கரும்பு என்பவற்றை வைத்திருப்பவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் எட்டுக்கைகள்.

### பக்தி கணபதி
### *Bakthi Ganapathi*



தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயாசம் என்பவற்றை வைத்திருப்பவர். சரத்கால சந்திரனின் வெண்ணிறமான சரீரமுடையவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்

### வீர கணபதி
### *Veera Ganapathi*



வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில், சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், முத்கரம்கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தம், மழு, த்வஜம் என்பவற்றை வைத்திருப்பவர். துதிக்கையுடன் பதினாறுகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி கணபதி
## Sakthi Ganapathi



பாசம் அங்குசம் வைத்திருப்பவர். சக்தியை அருகில் வைத்திருப்பவர். சந்தியா காலத்தைப் போல சிவந்த நிறமுடையவர். பயத்தைப் போக்குபவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்.

## த்விஜ கணபதி
## Dhvija Ganapathi



புத்தகம், ஜெபமாலை, தண்டம், கமண்டலம் உடையவர். கங்கணம் அணிந்திருப்பவர். சந்திரனின் வெண்ணிற முடையவர். நான்கு முகமுடையவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்குகைகள்.

## சித்தி கணபதி
## Siddhi Ganapathi



மாம்பழம் பூக்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு உடையவர். பொன்கலந்த பசுமை நிறமுடையவர். துதிக்கையுடன் நான்கு கைகள், இருக்கும் தோற்றம்.


## உச்சிஷ்ட கணபதி
## Uchishta Ganapathi



விஜய கணபதி என்றழைக்கப்படுவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிருத்த கணபதி
## Nirutha Ganapathi



பாசம், அங்குசம், அதிரசம், கோடரி ஏந்தியவர். கற்பக விருட்சத்தினடியில் நர்த்தனம் செய்பவர். துதிக்கையுடன் ஆறு கைகள்.

## ஏகாட்சர கணபதி
## Ehakshara Ganapathi



செந்நிறமுடையவர். செம்பட்டாடை அணிந்தவர். செம்மலர் மாலையுடையவர். பிறைமுடியர். முக்கண்ணர். குறுந்தாளர், மாதுளை, பாசம், அங்குசம், வரதம் என்பவற்றைத் தாங்கியவர்.

## ஊர்த்துவ கணபதி
## Urduva Ganapathi



செங்கழநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு, வில், அம்பு, தந்தம் என்பவற்றை உடையவர். தங்கநிறம் உடையவர். இருக்கும் தோற்றம். சக்தி இடப்பாகம். துதிக்கையுடன் ஆறுகைகள்.

## வரத கணபதி
## Varatha Ganapathi



செவ்வண்ணர். யானைமுகத்தர். முக்கண்ணர். பிறைமுடியர். பாசம், அங்குசம் தரித்தவர். தேன் நிறைந்த கபாலபாத்திரத்தை ஏந்தியவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துவிமுக கணபதி
## Duvi Muka Ganapathi



தந்தம், பாசம், அங்குசம், ரத்ன பாத்திரம் உடையவர். நீல மேனியர். செம்பாட்டை அணிந்தவர். ரத்ன கிரீடம் தரித்தவர். இருமுகமுடையவர். இருக்கும் தோற்றம். இருதுதிக்கை நான்கு கைகள்.

## மும் முக கணபதி
## Mum Muka Ganapathi




வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சரமாலை வரதம் உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம் உடையவர். மும்முகம் இருக்கும் தோற்றம். மூன்று துதிக்கை. ஆறு கைகள்.

## சிங்க கணபதி
## Singha Ganapathi



வீணை கற்பகக் கொடி, சிங்கம், வரதம் என்பவற்றை வலது கைகளிலும் தாமரை, ரத்னகலசம், பூங்கொத்து, அபயம் இடது கைகளிலும் உடையவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் எட்டுக்கைகள்.

## யோக கணபதி
## Yoga Ganapathi



யோக நிலையில் யோகபட்டம் தரித்திருப்பவர். இளஞ்சூரியனது நிறமுடையவர். பாசம், அட்சமாலை, யோகதண்டம், கரும்பு கொண்டவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரயாக்ஷர கணபதி
## Thrayakshara Ganapathi



பொன்னிறமானவர். பாசம். அங்குசம். தந்தம். மாம்பழம் கொண்டவர். துதிக்கையின் நுனியில் மோதகம். இருக்கும் தோற்றம். நான்கு கைகள்.

## க்ஷிப்பிர பிரசாத கணபதி
## Kshipra Prasadha Ganapathi



பாசம். அங்குசம். கற்பகக் கொடியின் சுவைதரும் மாதுளம்பழம். துதிக்கையில் தாமரைமொட்டு. பேழைவயிறு. இருக்கும் தோற்றம். ஆறு கைகள்.

## ஹரித்திர கணபதி
## Harithira Ganapathi



மஞ்சள் நிறமானவர். பாசம். அங்குசம். தந்தம். மோதகம் கொண்டவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்.

## ஏக தந்த கணபதி
## Ekadhanta Ganapathi



கோடரி. அட்சமாலை. லட்டு. தந்தம் இவற்றை உடையவர். பேழை வயிற்றையுடையவர். நீல மேனியர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் நான்கு கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிருஷ்டி கணபதி
## Shristi Ganapathi



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் உடையவர். பெருச்சாளி வாகனத்தில் இருப்பவர். சிவந்த திருமேனியர். துதிக்கையுடன் நான்கு கைகள்.

## உத்தண்ட கணபதி
## Uthanda Ganapathi



நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்பு, வில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை உடையவர். சக்தியுடன் இருக்கும் தோற்றம், சிவந்தமேனி, துதிக்கையுடன் பத்துக் கைகள்.

## ரணமோச்சன கணபதி
## Renamochana Ganapathi



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் உடையவர். வெண்பளிங்கு நிற மேனியர். செந்நிறப்பட்டாடை அணிந்தவர். இருக்கும் தோற்றம், துதிக்கையுடன் நான்கு கைகள்.

## துண்டி கணபதி
## Dhundi Ganapathi



அட்சமாலை, கோடரி, ரத்ன கலசம், தந்தம் ஏந்தியவர் நின்ற தோற்றம், துதிக்கையுடன் நான்கு கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க்ஷிப்ர கணபதி
## *Kshipra Ganapathi*



தந்தம், கற்பகவிருட்சத்தின்கிளை, பாசம், ரத்னகலசம், அங்குசம் உடையவர். அழகான சிவந்த சரீரம். துதிக்கையுடன் நான்கு கைகள்.

## விக்ன கணபதி
## *Vigna Ganapathi*



சங்கு, கரும்பு, வில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், தந்தம், பூங்கொத்துப் போலச்சுருட்டியமாலை கொண்டவர் பொன்மேனியர், இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் எட்டுக்கைகள்.

## ஹேரம்ப கணபதி
## *Heramba Ganapathi*



அபய வரதமுத்திரைகளுடன், பாசம், தந்தம், ஜபமாலை, கோடரி, முத்கரம், மோதகம், பழம் கொண்டவர். சிம்மவாகனத்தில் ஐந்து முகங்களுடன் இருப்பவர். துதிக்கையுடன் பத்துக்கைகள்.

## லக்ஷ்மி கணபதி
## *Lakshmi Ganapathi*



வரதஹஸ்தமுடையவர். பிரகாசிக்கின்ற ஜோதி போன்றவர். கையில் நீலோற்பலம் உடையவர். இருதேவிக்களை இரு பக்கத்திலும் கொண்டவர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் இருகைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்கா கணபதி
## Durga Ganapathi



எட்டுக்கை, அங்குசம், பானம், அட்சமாலை, தந்தம், பாசம், வில், கொடி, நாவற்பழம் கொண்டவர். பொன்னிற மேனியர். துதிக்கையுடன் எட்டுக் கைகள். இருக்கும் தோற்றம்.

## சங்கடஹர கணபதி
## Sankatakara Ganapathi




இளஞ்சூரியனின் நிறமுடையவர். இடது தொடையில் அம்மையை உடையவர். நீல நிறமேலாடை அணிந்தவர். இருக்கும் தோற்றம் துதிக்கையுடன் நான்கு கைகள்.

## மகா கணபதி
## Maha Ganapathi




மாதுளை, கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகவசம் ஏந்தியவர். செங்கதிர் நிறமுடையவர். முக்கண்ணர். பிறை முடியர். இருக்கும் தோற்றம். துதிக்கையுடன் பத்துக்கைகள்.

## விஜய கணபதி
## Vijaya Ganapathi




பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம், உடையவர். செந்நிறமானவர். பெருச்சாளி வாகனத்தில் இருப்பவர். துதிக்கையுடன் நான்கு கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னாள் ஆலய பிரதமகுருவும், ஆதீன கர்த்தாவுமான
**சிவஸ்ரீ அருணாச்சலக் குருக்கள் துரையப்பா ஐயர்**



முன்னாள் ஆலய ஆதீன கர்த்தாவும்,
யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருமான
**உயர்திரு. துரையப்பா ஐயர் வைத்திலிங்கம் ஐயா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் கடமை

உலகில் தோன்றியுள்ள பெருமக்கள் எல்லோரும் அஹிம்சையைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றனர். 'அஹிம்ஸா பரமோ தர்ம' என்பது அவர்களின் போதனை. கொல்லா விரதமே குவலயமெல்லாம் ஓங்கியிருக்க வேண்டும் என்பது அவர்களின் துணிபு. எவ்வுயிர்க்கும் ஒரு தீங்கும் செய்யலாகாது என்பது அதன் கருத்து அக்கோட்பாடு கேட்பவர்கள் அனைவருக்கும் உடன்பாடானதே. இது மனதுக்குகந்த கோட்பாடெனினும் இதை முற்றிலும் பழக்கத்தில் கொண்டு வருவது சாத்தியப்படாது. ஒரு சிறு கூட்டத்தார் அஹிம்சா தர்மத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிக்கத் தீர்மானித்து விட்டார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதன் விளைவாக சமுதாய அமைப்பே சின்னாபின்னமாகிவிடும். அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்கின்ற மக்கள் உலகில் யாருக்கும் ஒரு தீங்கும் செய்ய மாட்டார்கள் என்ற கயவர்கள் கேள்விப்பட்டால் அவர்கள் அஹிம்சா மூர்த்திகளின் வீடுகளில் புகுந்து அங்கு இருக்கும் பொருட்களை எல்லாம் பகிரங்கமாகத் தூக்கிக் கொண்டு போக ஆரம்பித்து விடுவார்கள். தீங்கு செய்யாது செயலற்றிருக்கும் மக்களை அவர்கள் வேண்டுமென்றே துன்புறுத்துவார்கள். அமைதியற்றிருக்கும் மக்களின் உயிரையே வாங்கிவிட அவர்கள் முயற்சி செய்வார்களானால் அதில் வியப்பொன்றுமில்லை. அல்லது இந்த அஹிம்சா மூர்த்திகளை உயிரோடு வைத்துக் கொண்டு அவர்களைச் சித்திரவதை செய்யவும் அந்தப் பொல்லாதவர்கள் முன்வந்து விடுவார்கள்.

அப்படியிருந்தும் நம்மனதின் உள்ளே குடிகொண்டுள்ள மேலாம் இயல்பு ஒன்று "எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதே" என்னும் கோட்பாட்டை நமக்குப் புகட்டிக் கொண்டிருக்கிறது. எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாதிருப்பது மக்களால் அனுஷ்டிப்பதற்குரிய உயர்ந்ததொரு லட்சியமாகும். ஆனால் உயிர் வாழ்ந்து வரும் நாம் ஏதேனும் ஒரு விதத்தில் பிற உயிர்களுக்கு இன்னாதது செய்கின்றோம். நம்மை முன்னிட்டு தாவரங்களாக அல்லது ஜன்மங்களாக இருக்கின்ற மற்ற உயிர்கள் மடிந்து கொண்டே இருக்கின்றன.

ஆதலால் கொல்லா விரதத்தில் நாம் முற்றிலும் நிலை நின்றவர்கள் அல்லர். அதைமுன்னிட்டு நம்மை நாம் வெறுத்துக் கொள்ளலாகாது. நம்மையே நாம் நொந்து கொள்ளாதிருப்பது நமது முதல் கடமையாகும். வாழ்க்கையில் முன்னேற்றமடைவது நமது குறிக்கோள். நம் மீது நாம் விசுவாசம் வைக்காவிட்டால் நாம் ஒருபோதும் முன்னேற முடியாது. நம்மையே நாம் நம்பியிருப்பது நமது முதல் கடமை. கடவுளை நம்பியிருப்பது அடுத்த கடமை. "சூரியனுக்கு முன் எழுந்து கொள் மனிதா நீ சூரியனையே ஜெயிப்பாய்" (சுவாமி சித்பவானந்தர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி தரும் பெருமாள்

பாண்டிய மன்னன் வல்லப தேவன் ஒருநாள் இரவு மாறு வேடம் பூண்டு நகர் சோதனைக்குச் சென்றான். ஒரு வீட்டின் திண்ணையில் வயதான அந்தணர் ஒருவர் உறங்கிக் கொண்டிருந்தார். மன்னன் அவரை எழுப்பி 'ஐயா நீங்கள் யார்? ஏன் இங்கே படுத்துள்ளீர்கள்? என்று வினவினான். அதற்கு அவர், வடதேச யாத்திரை செய்து, கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிவிட்டு ராமசேது தரிசனத்துக்காகச் செல்ல இருப்பதால், இரவு திண்ணையில் உறங்குவதாகச் சொல்லி ஒரு சுலோகத்தைக் கூறினார்.

"வர்ஷார்த்தம் அஷ்டெென ப்ரதேத மாஸான்
நிஷார்த்தம் அர்த்தம் திவஸம் யதேதே
வார்த்தக்ய ஹேதோர் வயஸா நவேந
பரத்ர ஹேதோரிஹ ஜன்ம நாச"

மழைக்காலத்துக்கு வேண்டிய பொருள்களை மற்ற எட்டு மாதங்களில் சேகரிக்க வேண்டும். இரவுக்கு வேண்டியவற்றை பகலிலேயே தேடி வைக்க வேண்டும். முதுமைக்கு வேண்டியவற்றை இம்மையிலேயே தேட வேண்டும்.

இதைக்கேட்ட மன்னன் தாம் மறுமைக்கு இதுவரை ஒன்றும் செய்யாமல் காலம் கழித்தோமே என்று வருந்தினான். கவலை அவன் மனத்தை அறுத்தது. வைணவப் பெரியாரான செல்வ நம்பிகள் என்பவரிடம் வல்லபதேவன் தன் வருத்தத்தைக் கூறினான். செல்வ நம்பிகளும் நாடெங்கும் பறை அறிவித்து, வித்வான்களைத் திரட்டி, வேத அர்த்தங்களைக் கொண்டு பரம்பொருளைப் பற்றி நிர்ணயித்து, அவ்வழியாலேயே பெறலாம் என்றார். அதன்படி அரசனும் தங்கக் காசுகளை துணியில் முடிந்து, அப்பொற்கிழியை சபை நடுவே கட்டி வைக்க ஏற்பாடு செய்தான். நாடெங்கும் பறை அடித்து அறிவிக்கவும் செய்தான்.

செய்தி திருவில்லிப்புத்தூரையும் சேர்ந்தது. அங்கே கோயில் கொண்ட பெருமான் வடபெருங் கோயிலுடையான் தனக்கு மாலை கட்டி அழகு பார்த்த வைணவர் விஷ்ணுசித்தரின் கனவில் தோன்றி, 'நீர் போய் பொற்கிழியை அறுத்து வாரும்' என்று கட்டளையிட்டான். விஷ்ணு சித்தரோ, 'அது சகல சாத்திரங் களும் கற்ற பண்டிதர்கள் செய்ய வேண்டியது,. நானோ சாத்திரம் முழுதும் கற்றவன் அல்லேன். சக்லகலாவல்லவர்களான அந்த மாயாவாத பண்டிதர்கள் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் எப்படி நான் பரதத்துவ நிர்ணயம் செய்யப் போகிறேன்?" என்று கேள்வி எழுப்பினார். "அதற்கு இறைவன் அதைப்பற்றி உமக்கு என்ன கவலை? செய்யப் போவது நாமே.... நீர் செல்லும் " என்று கட்டளையிட்டான்.

விஷ்ணுசித்தரும் அதை ஏற்று கூடல்நகருக்குப் பயண மானார். செய்தி மன்னனுக்குக் கிடைக்க, செல்வ நம்பியோடு சேர்ந்து அவரை எதிர்கொண்டு அழைத்தான் மன்னன். வேதத்தின் விழுப்பொருளான பரதத்துவத்தை நிச்சயித்து அருள் வேண்டும் என்று பிரார்த்தித்தான்.

விஷ்ணு சித்தரும் மடை திறந்த வெள்ளம் போல வேதத்தின் விழுப்பொருளை உரைக்கலானார். 'இந்த உலகுக்குக் காரணமான வஸ்து எவனோ அவனே தியானத்துக்குரியவன்.'

எவனிடத்திலிருந்து அனைத்துப் பொருளும் உண்டாகின் றனவோ, எவனால் இவை யாவையும் நிலை பெற்றிருக்கின்றனவோ, முடிவில் எவனிடத்தில் இவையனைத்தும் வயமாகின்றனவோ அவனே பரப்பிரம்மம்.

சிலந்திப் பூச்சியானது எவ்வாறு நூலை உருவாக்கிக் கொண்டு, உணவாகிற பூச்சிகளைப் பிடித்துக்கொள்ளுமோ அவ்வாறே சகல உயிர்களையும் பொருள்களையும் அந்தப் பரன் படைத்தான்.

அந்தப் பரன் விஷ்ணு என்னும் பெயருடையவனாய் சாத்விகனாய், அனைவராலும் தொழப்படுகின்றவனாய் இருக்கின்றான் என்றும்,

ஓங்கார வடிவினனான அந்த விஷ்ணு ஒருவனே என்றும், வேத வசனங்களுக்கும் நாயகன் அவனே என்றும் ஜீவர்கள் அந்த ஓங்காரத்தை உச்சரித்த மாத்திரத்திலேயே நலன் அடைகின்றார்கள் என்றும், அந்த நாராயணன் ஒருவனே பாபங்களைக் களைபவன் என்றும், ஸ்ரீமத் நாராயணனிடத்திலிருந்து பிரம்மா, ருத்ரன் முதலாய முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தார்கள் என்றும், நாராயணனே பரப் பிரம்மம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவான் வியாசரும், எந்தக் காலங்களிலும் நாராயணனுக்கு மிஞ்சிய பர தெய்வமில்லை என்று வேதங்களும், புராணங்களும், சத்ய பூர்வமாகச் சொல்லி இருப்பதை ரிஷிகளாகிய உங்கள் மத்தியில் பிரமாண பூர்வமாகச் சொல்ல விழைகின்றேன் என்றும் கையை மேலே உயர்த்தி சத்தியம் செய்து, நாராயணன் ஒருவனே பரனாயிருப்பது போல, சர்வ மந்திரங்களில் அஷ்டாட்சரம் ஒன்றே பரதத்வ நிர்ணயம் செய்யவும் உயர்ந்த மந்திரமாக இருக்கிறது என்றும் அருளிச் செய்தார்.

வேத வாக்கியம் கொண்டும், ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம் முதலான பிரமாணங்களைக் கொண்டும் அனைத்து வித்வான்களும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் ஸ்ரீமத் நாராயணனே பரம்பொருள் என்று நிர்ணயம் செய்தார்.

உடனே பொற்கிழி கட்டியிருந்த கம்பம் வளைய விஷ்ணு சித்தரும் பொற்கிழியை அறுத்துக் கொண்டார். பின்னர் மன்னன் விஷ்ணு சித்தருக்கு பட்டர்பிரான் என்னும் பட்டம் வழங்கி பட்டத்து யானையின் மீது அவரை ஏற்றி நகர் உலா வரச் செய்தான்.

அப்போது திருமால், அயன், அரன், இந்திரன் புடைசூழ கருடன் மீதேறி வந்து விஷ்ணு சித்தருக்கும் அரசனுக்கும் காட்சி அளித்தார்.

ஆனால், பரந்தாமன் எழில் கண்ட விஷ்ணுசித்தர் பரமனுக்குக் கண் எச்சில் படுமோ என்று கவலையுற்று அவன் எழில் என்றும் திகழ பல்லாண்டு பாடி வாழ்த்தினார்.

இவ்வாறு பெரியாழ்வார் பரதத்துவ நிர்ணயம் செய்த விழா வரும் டிசம்பர் 13 இல் மதுரை கூடல்அழகர் திருக்கோயிலில் பெரும் உற்சவமாகக் கொண்டாடப்படுகின்றது.

பிரம்ம புத்திரரான சனத்குமாரர் விரும்பியபடி பெருமான் இங்கே அர்ச்சாவதார வடிவில் ஸ்ரீதேவி, பூதேவியுடன் காட்சி தந்தார். பின்பு சனத்குமாரர் விஸ்வகர்மாவிடம் தான் கண்ட காட்சியைக் கூறி சிலை வடிவமைக்கச் செய்தார். அழகிய அஷ்டாங்க விமானத்தின் கீழ் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். அவரே கூடலழகர். இத்தலம் கிருத், திரேதா, துவாரா, கலி என நான்கு யுகங்களிலும் சிறப்புற்றதால் பெருமாள் யுகம் கண்ட பெருமாள் எனப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை இங்கே தொடர்ந்து மழை பெய்தது. மக்கள் பெரிதும் சிரமப்பட்டனர். தங்களைக் காக்க வேண்டினர். பெருமாள் நான்கு மேகங்களை ஏவினார். அவை மதுரையைச் சுற்றி நான்கு மாடங்களாகக் கூடி மக்களைக் காத்தன. இவ்வாறு மேகங்கள் கூடியதால் நான் மாடக்கூடல் என்றும், கூடல் மாநகர் என்றும் பெயர் பெற்றது. பெருமாளும் கூடலழகர் ஆனார்.

பஞ்ச பூத தத்துவம் உணர்த்தும் ஐந்து கலசத்துடன் கூடிய ஐந்து நிரை ராஜ கோபுரம், எட்டெழுத்து மந்திரத்தை உணர்த்தும்படி, எட்டு பிரகாரங்களுடன் அமைந்த கோயில். ஆண்டாள், சக்கரத்தாழ்வார், நவக்கிரகாதிபர், ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள், மணவாள மாமுனிகள், விஸ்வக்சேனர், ராமர், கிருஷ்ணர், லட்சுமி நாராயணர், கருடன், ஆஞ்சநேயர், லட்சுமி நரசிம்மர் எனச் சந்நிதிகள் நிறைந்த பெரிய கோயில். உற்சவர் வியூகசுந்தர்ராஜன் எந்தச் செயலையும் வியூகம் அமைத்து செயற்பட்டால் வெற்றி கிட்டும் பெருமாள் இங்கே எதிலும் வெற்றி தரும் அழகர். எனவே இப்பெயர்.

பாண்டியர்களின் சின்னமாக மீன் அமைய, இப்பெருமானே காரணமானார். இங்கே வைகை நதி, கிருதுமால் நதி இரண்டும் மாலை போல நகரைச் சுற்றி ஓடின. பாண்டிய மன்னன் சத்தியவிரதன் ஒரு முறை கிருதுமால் நதியில் நீராடியபோது பெருமான் மீன் வடிவில் தோன்றி அவனுக்கு அருள் புரிந்தார். மத்ஸயாவதாரம் நிகழ்ந்த தலம் ஆதலால் மீன் சின்னத்தைப் பாண்டியன் வைத்துக் கொண்டான் என்பர்.

இங்கே அஷ்டாங்க விமானத்தின் கீழ் தளத்தில் கூடலழகர் ஸ்ரீதேவி, பூதேவி சகிதராக அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இரண்டாவது தளத்தில், சூரிய நாராயணர் தேவியருடன் நின்றகோலம் மூன்றாவது தளத்தில் பள்ளி கொண்ட கோலத்தில் பாற்கடல் நாதராக அருள்கிறார். இவ்வாறு பெருமாள் நின்ற, அமர்ந்த, கிடந்த என மூன்று கோலங்களிலும் காட்சி தருகிறார். இங்கே பக்தர்கள் இந்த விமானத்தை கிரிவலம் வருவதுபோல வலம்வந்து அருள் பெறுகிறார்கள். பெருமாளின் **108** திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. மார்கழி மாதத்தில் இத்தலத்தை தரிசிப்பது சிறப்பு.

**பிரார்த்தனை:**

திருமணத்தடை, குழந்தைப் பாக்கியம், கல்வியறிவு பெற பிரார்த்தனை செய்து, தாயாருக்குப் பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர் பக்தர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னை பனையானது...
# பெண் ஆன ஆண்...!

மதுரை மாநகரில் இருந்த பாண்டிய மன்னனது அரண்மனையின் அந்தப்புரத்து நந்தவனத்தில் அன்றைய தினம் வழக்கத்திற்கு மாறாக உற்சாகம் பொங்கி வழிந்தது. மன்னன் அபிஷேகப் பாண்டியன் தன் காதல் மனைவியரோடு ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் திடீரென்று ஒரு அற்புதம் நிகழ்ந்தது. நந்தவனத்தில் இருந்த தென்னை மரங்கள் சட்டென்று பனை மரங்களாக மாறின. பின்னர் தென்னை மரமாக பழைய வடிவத்திற்கே வந்தன. பறவைகள் விலங்காகவும், விலங்குகள் பறவைகளாகவும் மாறி மாறி அதிசயம் செய்தன. ஒன்று மற்றொன்றாக மாறிக் கொண்டிருந்தது. மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை.

மறுநாள் அரசவையைக் கூட்டினான். "அமைச்சரே! அந்தப் புரத்து நந்தவனத்தில் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் என்னைக் குழப்பம் அடையச் செய்துள்ளன. இதற்கு என்ன காரணம்?"

"மன்னா! நந்தவனம் என்றில்லை. நாடு முழுவதுமே இந்த அதிசய நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. நீண்ட சடையும், நெற்றி நிறைய விபூதியும், அதன் மீது திலகமும், இரண்டு செவிகளில் குண்டலங்களும், படிக மாலையும், புலித்தோல் ஆடையும் அணிந்து, ஆண்மை வடிவம் கொண்ட ஒரு மனிதன் பல அற்புதங்களைச் செய்து வருகிறார். பருவப் பெண்கள் அவரைப் பார்த்த மாத்திரத்தில் மையல் கொள்கிறார்கள். இளைஞர்களோ தாங்கள் பெண்ணாகப் பிறக்கவில்லையே... என்று ஏக்கம் கொள்கிறார்கள்.

அந்த மனிதர் திடீரென்று ஓரிடத்தில் இருந்து மறைந்து வேறு இடத்தில் காட்சியளிக்கிறார். அருகில் இருக்கும் மலையை தூரத்தில் மாற்றி அமைக்கிறார். மழலை மொழி பேசும் குழந்தைகளை முதியவர்களாக மாற்றிக் காட்டுகிறார். ஆணைப் பெண்ணாக்குகிறார், பெண்ணை ஆணாக்குகிறார். மலட்டுப் பெண்ணுக்கு மகப்பேறு தருகிறார். கூன், குருடு, செவிடு, ஊமை போன்ற குறைகளைப் போக்குகிறார்."

அதுமட்டுமல்ல; வைகை ஆற்றில் வெள்ளம் நிரம்பி ஓடச் செய்கிறார். மீண்டும் ஆற்றை வற்ற வைக்கிறார். சுவையான நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பொய்கையை உப்பு நீராக மாற்றுகிறார். தூரத்தில் இருக்கும் மலையைப் பக்கத்தில் கொண்டு வருகிறார். கடல் நீரை நன்னீராக்கு கிறார். மந்திரக் கோலை அந்தரங்கத்தில் மிதக்க வைத்து, அதன் மீது ஒரு ஊசியை நிலை நிறுத்தி, அந்த ஊசி மீது கால் பெருவிரலை ஊன்றி நர்த்தனம் புரிகிறார். சூரியனை இரவில் வர வைக்கிறார். சந்திரனை பகலில் தோன்றச் செய்கிறார்..." என்று, அந்த அமைச்சர் நீண்ட பட்டியல் போட்டுச் சொல்லச் சொல்ல... அபிஷேகப் பாண்டியனுக்கு அந்த அற்புத மனிதனைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் பெருக்கெடுத்தது.

உடனே அரண்மனைக் காவலர்களை அழைத்து, "அந்த வித்தக மனிதரை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்" என்று ஆணையிட்டு அனுப்பி வைத்தான். அவர்களும் அந்த மாமனிதரைப் பார்க்க வேண்டும் என்று அடக்க முடியாத ஆவலோடு சென்றனர். அதிசய மனிதரை தேடிச் சென்றவர்கள் வெகுநேரம் கடந்தும் வராததைக் கண்ட பாண்டிய மன்னன் சில அமைச்சர்களை அனுப்பி வைத்தான். அமைச்சர்கள் அவரைத் தேடி வந்த போதுதான் தெரிந்தது; அந்த மனிதரை அழைக்க வந்த காவலர்கள், அவரின் திருவிளையாடலில் தங்களை மறந்து நின்றுவிட்டனர் என்று!

அமைச்சர்கள் அந்த மனிதரை சந்தித்து வணங்கினர். "தங்களைக் காண மன்னர் மிகவும் ஆர்வமுடன் இருக்கிறார். தாங்கள் மன்னர் இருப்பிடம் வரவேண்டும்" என்றனர். "எனக்கு மன்னரிடத்தில் ஆக வேண்டிய காரியம் ஒன்றுமில்லையே...! நான் ஏன் மன்னரைப் பார்க்க வேண்டும?" என்று கூறி வர மறுத்துவிட்டார்.

அமைச்சர்கள் சோகத்தோடு மன்னனிடம் சென்றனர். நடந்த தைக் கூறினர். "உண்மைதான் இறைவனின் திருவருளைப் பெற்றவர்கள் இந்திரன், பிரம்மன், திருமால் போன்றவர்களையே மதிக்க மாட்டார்கள். அப்படி இருக்கையில் சாதாரணமாக மண்ணாளும் இந்த மன்னனையா மதிக்கப் போகிறார்கள்?" நான் அது தெரியாமல் அவரை அவமதித்து விட்டேன். இது என் அறியாமையால் நேர்ந்துவிட்டது. நானே அவரை நாடிச் சென்று காண்கிறேன்" என்று மனதில் நினைத்த அபிஷேகப் பாண்டியன் நேராக கோவிலுக்குச் சென்றான்.

மதுரையின் நாயகனாகிய சோமசுந்தரக் கடவுளை வணங்கி னான். தொடர்ந்து இறைவனை வலம் வந்தான். அந்தப் பாதையில் புலித்தோல் ஆசனத்தில் ஐம்புலன்களையும் வென்ற அந்த மனிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுமாப்புடன் அமர்ந்திருந்தார். அரசன் அருகில் வரவர... வழியில் இருந்தவர்கள் விலகி வழிவிட்டனர். அந்த மனிதர் மட்டும் சிறிதும் அச்சமின்றி மரியாதை கூடக் கொடுக்காமல் அமர்ந்திருந்தார். காவலர்கள் அவரை அகன்று போகும் படி கூறினர். அவர் சிரித்துக் கொண்டு அங்கேயே அமர்ந்திருந்தார்.

அவரது புன்னகை பாண்டிய மன்னனை சிந்திக்கத் தூண்டியது. மெதுவாக அவர் அருகில் வந்த மன்னன், "உமது பெயர் என்ன? எதற்கு இங்கு வந்திருக்கிறீர்? உமது நாடு எது? ஊர் பெயர் என்ன?" என்று அதிகாரமாகக் கேட்டான்.

"அப்பா! யாம் எந்த நாட்டிலும் இருப்போம். எந்த நகரிலும் திரிவோம். எல்லா ஊரும் நம் ஊரே. எல்லா மக்களும் நம் மக்களே! ஆனாலும், இப்போது யாம் இருக்கும் தலம் காசி மாநகரமாகும். வாழ்வில் எந்தப் பற்றும் இல்லாமல் பிச்சை வாழ்வு மேற்கொள்ளும் அடியார்களே எமது சொந்த பந்தங்கள். வித்தைகள் பல செய்து சித்து வேலை காட்டித் திரியும் சித்தர் யாம். இங்குள்ள சிவத்தலங்களைத் தரிசிக்கவே வந்தோம்" என்று கூறி புன்னகைத்தார்.

அந்த மனிதனின் செருக்கும், இறுமாப்பும், பெருமிதமும் அபிஷேகப் பாண்டியனை சினம் கொள்ளச் செய்தது. அந்த நேரம் பார்த்து கிராமத்து விவசாயி ஒருவர் நன்கு விளைந்த ஒரு கரும்பினைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்து வணங்கி நின்றான் (நல்ல விளைச்சல் கண்ட பொருளை மன்னனுக்குக் கொடுத்து பரிசு பெறுவது அந்தக் கால மரபு. அதற்காகவே அந்த விவசாயியும் வந்திருந்தான்.)

அடுத்த நொடியே, தன்னை சித்தர் என்று குறிப்பிட்ட மனிதரைப் பார்த்த மன்னன், "உலகில் உள்ள தெய்வங்கள் அனைத்தையும் விட நானே உயர்ந்தவன் என்பது போல் பேசும் மனிதனே! உனக்கு வல்லமை இருந்தால், இந்தத் தூணில் இருக்கும் கல்லால் ஆன யானையிடம் இந்தக் கரும்பினைக் கொடுத்து உண்ணச் செய் பார்ப்போம். அவ்வாறு நீ செய்தால் உன்னை எல்லாம் வல்ல சித்தர் என்று நான் ஒத்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, மதுரையை அருளாட்சி செய்து வரும் சோமசுந்தரக் கடவுளும் நீயே என்பதை ஒப்புக் கொண்டு நீ விரும்பியவை எல்லாம் தருகிறேன்" என்றான்.

அடுத்த நொடியே, பாண்டிய மன்னன் சுட்டிக்காட்டிய கல் யானையைக் கடைக்கண்ணால் பார்த்தார் அந்த சித்தர். மறுகணமே எல்லோரும் வியக்கும் வண்ணம் அந்தக் கல் யானையின் கண் திறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபமே அதிரும் வண்ணம் வாய் திறந்து பிளிறியது. துதிக்கையை மேலே நீட்டி பாண்டியன் கையில் இருந்த கரும்பினை பிடித்து இழுத்து, கடைவாயில் இட்டு, சாறு ஒழுகுமாறு கடித்து மென்று தின்றது.

கரும்பினை முழுவதுமாக தின்றதும், பாண்டியன் கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலையை எட்டிப் பிடித்து இழுத்தது. இதனைக் கண்டு கோபம் கொண்ட காவலர்கள் யானையை அடிப்பதற்காக வந்தனர். அதற்குள் யானை முத்துமாலையை வாயில்ப் போட்டு விழுங்கி விட்டது. மன்னன் அந்த மனிதர் மீது கோபம் கொண்டான். மன்னனின் மெய்க்காப்பாளர்கள் அந்த மனிதரை அடிக்க ஓடி வந்தார்கள். மென்மையான புன்னகை புரிந்த அவர் தன் கையை மேலே தூக்கி, "நில்லுங்கள்.!" என்று ஆணையிட்டார். ஓடி வந்த வீரர்கள் அப்படியே சிலையாகிப் போனார்கள்.

பாண்டிய நெடுஞ்சாண் கிடையாக அந்த மனிதரின் காலில் விழுந்து, "அறியாமல் நான் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று மன்றாடினான். அன்புக்கு அடிபணியும் கருணைக் கடவுளாகிய அந்த அதிசய மனிதர், சித்தர்களுக்கு எல்லாம் முதன்மைச் சித்தரான - சித்தர்களின் தலைவரான சிவபெருமான் என்பது அப்போது யாருக்கும் தெரியவில்லை.

பாண்டியனைப் பார்த்து, முதல் சித்தரான அவர், "வேண்டும் வரம் கேள்!" என்றார். உடனே அபிஷேகப் பாண்டியன், "நல்ல புத்திரர்கள் கிடைக்க வரம் தர வேண்டும்" என்று வேண்டினான். சித்தரும் அவ்வாறே அருள் புரிந்தார். அடுத்த நிமிடமே தனது கரத்தை யானை மீது வைக்க... உடனே அந்த யானை தனது துதிக்கையை நீட்டி முத்துமாலையைப் பாண்டியனிடம் கொடுத்தது. பாண்டியனும் அதைப் பெற்றுக் கொண்டான். அப்படி பெறும்பேறு, அவ்வளவு நேரமும் அங்கிருந்த சித்தரைக் காணவில்லை. மாலையைப் பெற்றுக் கொண்டதும் யானையும் கல்லாக மாறியது. சிலையாகிப் போன காவலர்களும் சுய உருவத்திற்கு வந்தனர்.

"முற்றும் உணர்ந்த முதல்வனே! அறியாமையால் உம்முடைய திருவிளையாடலை நான் அளந்தறியத் தொடங்கினேன். நான் எவ்வளவு பெரிய முட்டாள்" என்று மனமுருக மன்னிப்புப் கேட்டு வணங்கினான் அபிஷேகப் பாண்டியன். சித்தரின் அருளால் அவன், விக்கிரமன் என்ற மகனைப் பெற்றெடுத்தான். உரிய காலம் வந்ததும் விக்கிரமனுக்கு முடிசூட்டி, அரசாட்சியை அளித்து, இறைவன் சிவபெருமானின் திருவருளில் கலந்து பேரின்பம் அடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசய ஆஞ்சநேயர்

பொதுவாக கோவில்களில் ஆஞ்சநேயர் தனது வாலை தலைக்கு மேலோ அல்லது தனது இருபாதங்களுக்கு நடுவிலோ வைத்தபடிதான் காட்சி தருவார்.

ஆனால் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் தட்டொளிக்கு அருகில் உள்ள தூணில் ஆஞ்சநேயர் சஞ்சீவி மலையைத் தூக்கியபடி, வாலை தன்னை வட்டமாகச் சுற்றி வைத்தவாறு வித்தியாசமான கோலத்தில் காட்சி தருகின்றார். இது ஆண்டாள் கோவிலில் சிற்பக்கலைக்குச் சான்றாக அமைந்த சிற்பமாகும். மேலும், ஆஞ்சநேயரின் தோள் மீது ராமர் கைபோட்டு அணைத்தபடி, அவரைத் தனது தோழனாகப் பாவித்து நிற்கும் வகையிலும் இது அமைக்கப் பட்டுள்ளது தனிச்சிறப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடி ஏற்றுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகுண்ட பூஜை, மகா பூரணாகுதி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைப் பாக்கியம் அருளும் அய்யப்பன்

வால்பாறை அருகே உள்ள சோலையார் அணை பகுதிக்கு அருகில் தமிழக - கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள மயிலாடும்பாறை என்ற இடத்தில் சபரிமலை அய்யப்ப சுவாமி கோவிலைப் போன்று வழிபாடு நடத்தக்கூடிய அய்யப்ப சுவாமி கோவில் அமைந்துள்ளது.

மளுக்கப்பாறை பகுதியைச் சேர்ந்தவர்கள் 1970ஆம் ஆண்டு இந்தக் கோவிலை உருவாக்கி உள்ளனர். அன்றிலிருந்து சோலையார் அணை, உருளிக்கல், மளுக்கப்பாறை, மயிலாடும்பாறை மற்றும் மளுக்கப் பாறையிலிருந்து சாலக்குடி செல்லும் வழியில் இருக்கும் ஆதிவாசி பழங்குடியின் மக்கள் இந்த கோவிலுக்கு வந்து மாலை அணிந்து இருமுடி கட்டுகின்றனர். பின்னர் சபரிமலை அய்யப்பன் கோவிலுக்குப் புறப்பட்டுச் சென்று வழிபாடு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ள னர்.

சபரிமலையைப் போன்றே அடர்ந்த வனப்பகுதியில் மலைமீது இக்கோவில் அமைந்துள்ளது. சபரிமலையைப் போன்றே எரிமேலி என்ற இடத்தில் பாபர் சாமிக்கு பேட்டைத் துள்ளல் நடைபெறும் இடம், 18ஆம் படி, கோவிலின் அடிவாரத்தில் பம்பை நதி போன்ற ஆறு ஒன்றும் அமைந்துள்ளது. இன்னும் சிறப்பம்பசம்.

சில பக்தர்கள் பல்வேறு ஊர்களில் இருந்து இருமுடி கட்டி வந்து இந்த அய்யப்ப சுவாமி கோவிலிலும் கட்டுநிறை இறக்குகின்றார்கள்.

இந்தக் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் மண்டல பூஜை சிறப்பாக நடைபெறுவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம்25ஆந் தேதி 18ஆம் படி பூஜை, நெய் அபிஷேக பூஜை மற்றும் பல்வேறு சிறப்பு பூஜைகள் சபரிமலையில் நடைபெறுவதைப் போன்றே நடாத்தப்பட்டு மூவாயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இந்த அன்னதானம் வழங்கப்படுவதற்கு முன் கருடன் கோவிலின் முன்புறம் பறந்து செல்வது வழக்கம். இந்த ஆண்டும் இதேபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடன் பறந்தபின் அன்னதானம் தொடங்கப்பட்டது. அன்னதானம் சாப்பிட்ட பின்பு சாப்பிட்டவர்களின் இலைகளை எடுத்து வேண்டுதல் செய்தால் தங்களுக்கு வேண்டியதை அய்யப்பன் அருள்வார் என்பது ஐதீகம். அதனால் அன்னதானம் தொடங்குவதற்கு முன்பாகவே வேண்டுதல் நிறைவேற்ற விருப்பம் உள்ளவர்கள் தயார் நிலையில் இருப்பார்கள்.

அதேபோல் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் விரதம் இருந்து 18 படி பூஜை செய்து அய்யப்பனை வேண்டினால் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்கிறார்கள்.

மேலும் இந்தப் பகுதியில் யாரையும் இதுவரை எந்த வனவிலங்குகளும் தாக்கியது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடி ஏற்றுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சகுண்ட பூஜை, மகா பூரணாகுதி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதாரத்தின் நோக்கம் என்ன?

அவதாரா " என்ற சொல்லுக்கு இறங்குவது என்று பெயர். தெய்வீக நிலையிலிருந்து கடவுள் மனிதனைக் கைதூக்கிவிட புனித உலகுக்கு இறங்கி வருவதே அவதாரம் எனப்படும். இதனால் கடவுளின் நிலை குறைவதில்லை; ஆனால் மனிதனின் நிலை உயர்த்தப்படுகிறது. கடவுள் அவதாரம் எடுப்பது புதிய ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காகத்தான். அப்படி அவர் அவதாரம் செய்யும் போது, ஒரு மனிதன் எப்படித் தர்மம் தவறாமல் வாழ முடியும் என்பதைக் காட்டி இருக்கிறார். அதர்மம் எவ்வளவு தூரத்துக்குப் போக முடியும் என்பதையும், அதிலிருந்து நல்லவர்களை எப்படி மீட்க முடியும் என்பதையும் நாம் அவதார மகிமையைப் பற்றிப் படிக்கும்போது காண்கிறோம்.

அன்பும் கருணையும்; வெறுப்பையும், கொடூரத்தையும் விட உயர்ந்தது என்பதையே நாம் அதிலிருந்து தெரிந்து கொள்கிறோம். தர்மம் அதர்மத்தை வெல்லும் என்றும், உண்மையே கடைசியில் நிலைக்கும் என்பதையும் புரிந்து கொள்கிறோம். இதற்கு மாறாகச் செயல்கள் நடைபெறும் போது, இன்றும் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதில்லை. அதற்குரிய தண்டனைகள் வழங்கப்பட்டு விடுகின்றன.

தர்மம் என்பது அவரவர்க்குரிய பண்பைப் பாதுகாத்துக் கொண்டு நெறியுடன் வாழ்வதேயாகும். இதில் இருந்து யார் பிசகினாலும் இயற்கையின் நிலை மாறிவிடுகிறது. கடவுள் அப்போது சும்மா இருப்பதில்லை. இயற்கையின் நிலையை மீண்டும் சரிப்படுத்தி விடுகிறார். அப்போது மனித உலகின் தர்மமும் சுயநிலைக்கே திரும்பிவிடுகிறது. கடவுள் உலகை சிருஷ்டி செய்து சும்மா ஓட விட்டுவிடவில்லை. அதன் இயக்கம் தர்மம் தவறாமல் நடக்கிறதா என்பதை ஒவ்வொரு நிலையிலும் கவனித்துக் கொண்டிருக்கிறார். அந்த நிலை தவறும் பொழுதெல்லாம் குறுக்கிட்டு சரிசெய்து விடுகிறார். இன்றும் உலகியலில் நடக்கும் பெரிய நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பொழுது நாம் இந்த உண்மையை உணரமுடியும். அவருடைய கருணை மிகுந்த கரங்கள்தாம் நம்மையெல்லாம் வழிநடாத்திச் செல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதசி பிறந்தது எப்படி?

காலங்களைக் கணக்கிடும் புராணங்கள், நான்கு யுகங்களைச் சொல்லியிருக்கின்றன. அவற்றுள் ஒன்று திரேதா யுகம், அந்த திரேதா யுகத்தில் "முரன்" என்று ஒரு அரசன் இருந்தான். அவன் பெரிய தவசாலி. தன்னுடைய தவத்தின் காரணமாகப் பல்வேறு வரங்களைப் பெற்றவன். தான் பெற்ற வரங்களை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தாமல் தேவர்களுக்குத் துன்பம் இழைக்கத் தொடங்கினான். அவனுடைய தொல்லைகளைத் தாங்க முடியாமல் தேவர்கள் தவித்தனர். இறுதியில், அவர்கள் பெருமாளைச் சரணடைந்தனர். தேவர்களைக் காப்பதற்காக ஸ்ரீ மகாவிஷ்ணு முரனுடன் போரிட புறப்பட்டார். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் மகாவிஷ்ணு விற்கும், முரனுக்கும் கொடூரமான சண்டை நடந்தது. முரன் சளைக்காமல் போரிட்டான். காலையில் யுத்தம் தொடங்கும். யுத்தம் தர்மப்படி மாலையில் முடியும். அதன்பின் மகாவிஷ்ணு "பத்ரிகாஸ்ரம"த்தில் உள்ள ஒரு குகையில் தங்கி அறிதுயில்" கொள்வார்.

அப்போது ஒருநாள் மகாவிஷ்ணுவின் உறக்கத்தைக் கெடுக்கும் நோக்கத்துடன் முரன் அங்கு வந்தான். அவர் துயிலும் இடத்துக்கு அருகில் சென்று நின்று, மகாவிஷ்ணுவைப் போருக்கு அழைத்தான். தன்னுடைய திருஷ்டியினால் முரன் போருக்கு அழைப்பதை அறிந்த மகாவிஷ்ணு தன்னுடைய திருவருளை அழகிய பெண் உருவத்தில் அனுப்பினார். வெளியில் கோபத்துடன் நின்று கொண்டிருந்த முரன் வெளியில் வந்த பெண்ணைப் பார்த்தான்.

மிகவும் அழகாக இருந்த அப்பெண்ணைப் பார்த்தவுடன் பரவசப்பட்டான். காதல் கொண்டான். இன்பநோக்குடன் அவள் அருகில் சென்றான். மகாவிஷ்ணுவுடைய சக்தியின் வடிவமான அவள் பலத்த ஓசை எழுப்பினாள். அவளுடைய முழக்கத்தைக் கேட்டு முரன் சாம்பலானான். அந்த நாள்தான் "வைகுண்ட ஏகாதசி" இதனை ஞானப்பார்வையால் அறிந்த மகாவிஷ்ணு, அவளுக்குக் காட்சி தந்தார். "முரனை அழித்து முராரி என்னும் பெயரை எனக்குப் பெற்றுத் தந்த பெண்ணே! நீ ஏகாதசி எனப்படுவாய். உனக்குரிய இந்த நாளில் அதாவது மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியில் என்னை விரதம் இருந்து வழிபடுபவர்களுக்கு நான் பரமபதத்தை அளிப்பேன்" என்று வரம் தந்தார். இதுதான் "ஏகாதசி விரதம்" பிறந்த கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான கும்ப பூஜை







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்தூபி அபிஷேகம், பஞ்சாராத்தி தரிசனம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிரிக் கரையில் கங்கைக் குளியல்!

தனது பக்தியினாலும், கருணையினாலும் தூய உள்ளத்தாலும் கங்கையைத் தனது வீட்டிற்கே வர வைத்திருக்கிறார் ஒரு மகான். பஜனை சம்பிரதாயத்தில் மும்மூர்த்திகளாய்த் திகழ்ந்த மகாபுருஷர்கள் ஸ்ரீ போதேந்திர சுவாமிகள், ஸ்ரீதர ஐயாவாள், ஸ்ரீ வேங்கடராம சத்குரு சுவாமிகள் . இவர்களே பாகவதர்களால் பஜனாரம்பத்தில் பாடப்படும் குருமார்கள்.

இதில் ஐயாவாள் என்று போற்றப்படும் மகான் ஸ்ரீதரவேங்கடேசாரியார் மைசூர் ராஜ்ஜியத்தில் தனது தகப்பனாருக்குப் பிறகு கிடைத்த திவான் பதவியைத் தியாகம் செய்தார். உஞ்சவிருத்தி பாகவ தராக ஆனார். சிறந்த சிவ பக்தர். தினந்தோறும் லட்சம் சிவ நாம ஜபம் செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர். தனது மனைவியுடன் காவிரிக் கரையில் உள்ள பல தலங்களைத் தரிசித்தவர். நிரந்தரமாக வாழ் வதற்கு மகான்கள் வாழ்ந்த திருவிசலூர் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார். சிவனைப் பற்றி பல ஸ்தோத்திரங்களும், பாடல்களும், இயற்றினார். தாம் ஹரிஹர பேதம் அற்றவர் என்பதை நிரூபிக்கும் வண்ணம் கிருஷ்ணரைப் பற்றிய ஸ்தோத்திரங்களும் இயற்றியுள்ளார்.

திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமியின் தீவிர பக்தராய்த் திகழ்ந்து, பல அதிசயங்களை நிகழ்த்திய ஐயாவாள் வாழ்க்கையில் கங்கையை வரவழைத்தது சிகரமாக உள்ளது. இந்நிகழ்வு நடந்தது ஒரு கார்த்திகை அமாவாசை நன்னாள். இந்தத் தினம் கங்காவதரண மகோற்சவம் என்ற பெயரில் 10 நாட்களுக்கு திருவிசலூர் கிராமத்தில் நடைபெறுகிறது. அப்போது பஜனைகள், உபன்யாசங்கள், கர்நாடகக் கச்சேரிகள் நடைபெறும். புண்ணிய கங்காஸ்நானத்துடன் முடிவ டையும். இவ்வாண்டு உற்சவம் கடந்த டிசம்பர் 4ஆம் தேதி தொடங் கியது. டிசெம்பர் 13ஆம் தேதியன்று (வியாழன்) கார்த்திகை அமாவாசை அன்று ஐயாவாள் இல்லக் கிணற்றில் கங்கை பொங்கி வருவதாக ஐதீகம். அன்று கங்காபூஜை, ஐயாவாள் இயற்றிய கங்காஷ்டக ஸ்தோத்திர பாராயணம் முடிந்தவுடன் பக்தர்கள் நாள் முழுவதும் கங்கா ஸ்நானம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அன்று ஸ்ரீ குருநாதர் ஆராதனையும் நடைபெறும். பக்தர்கள் பங்கேற்று காசியில் கங்கா ஸ்நானம் செய்த பலனைப் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கரனுக்கே சங்காபிஷேகம்!

"கலங்கினேன் கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக்குன்றிலே"

என்கிறார் மாணிக்கவாசகர். எத்தகைய சோதனைகள், வேதனைகள் என்றாலும் சரி, திருக்கழுக்குன்றம் வந்து, அங்கு அருள்பாலிக்கும் சிவபெருமானை வணங்கித் தொழுதால் நம் வினைகள் தவிடு பொடியாகும். மலை மேலுள்ள மலைக்கோயிலில் வேதகிரீஸ்வரர் அருள் பாலிக்கிறார். மூலவரின் பின்புறம் ஈசனின் திருமணக் கோலச் சிற்பம் உள்ளது. பார்வதிதேவி சொக்கநாயகி என்ற திருப்பெயரில் அருள் பாலிக்கிறாள். இங்கு மலைக்கோயில் ஈசனை இந்திரன் நந்தி கிடையாது. இடி" வழிபாடு செய்து வழிபடுகிறான். அதை நிரூபிக்கும் வகையில் "இடி வழிபாடு மறுநாள் ஆலயக் கருவறையில் கடுமையான அனல் இருக்குமாம்.

மார்க்கண்டேயர் இத்தல வேதகிரீஸ்வரரை வழிபட வந்தபோது அபிஷேகம் செய்ய விரும்பினார். அபிஷேகம் செய்ய தீர்த்தக் குளத்திலிருந்து நீர் எடுத்து வர முயன்றபோது மார்க்கண்டேயரிடம் பாத்திரம் இல்லை. அப்போது மார்க்கண்டேயர் ஈசனை வேண்ட அந்த தீர்த்தக் குளத்தில் வலம்புரிச் சங்கு தோன்றியது. பிறகு மார்க்கண்டேயரும் வேதகிரீஸ்வரரை வலம்புரிச் சங்கால் அபிஷேகித்து வழிபட்டார். அன்று முதல் குளமும் சங்கு தீர்த்தக் குளம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் குளத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வலம்புரிச் சங்கு தோன்றுகிறது. இந்தச் சங்குகள் இத்தலத்தில் "தாழக்கோயில்" என்று அழைக்கப்படும் ஸ்ரீ திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீ பக்த வசலேஸ்வரர் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன. குளத்தின் தென்கிழக்கில் ஸ்ரீ அபிராமி அம்மன் சமேத ஸ்ரீ ருத்ரகோடீஸ்வரர் ஆலயம் உள்ளது. சங்கு தீர்த்தக் குளத்தின் மேற்கே மார்க்கண்டேயர் வழிபட்ட "தீர்த்தக் கிரீஸ்வரர்" ஆலயம் அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் கடைசி சோமவாரத்தில், கார்த்திகை மாத கடைசித் திங்களன்று வேதகிரீஸ்வரருக்கு **1008** சங்காபிஷேகம் நடைபெறும். அப்போது சங்கு தீர்த்தக் குளத்தில் கிடைத்த சங்குகளே முதன்மை பெறும். அவ்வகையில் **10.12.12** அன்று ஈசனுக்கு **1008** சங்காபிஷேகம் நடைபெற்றது. சங்கரனுக்கு நிகழும் சங்காபிஷேகத்தைத் தரிசித்தால் சங்கடங்கள் தீருமன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்ப வீதிப் பிரதட்சணம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்ப வீதிப் பிரதட்சணம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிகள் தோன்றலும் ஒடுங்கலும் அவன் தாளில்...

தமிழ்ச் சொல்லும் வட சொல்லுமாகிய ஒலிகள் எல்லாம் அவன் தாளில் ஒடுங்கி மாலையாகின்றன என்று சிவபெருமானின் சிறப்பைப் பாடுகிறார். திருஞானசம்பந்தர் முதல் திருமுறையில் வரும் அச்சிறு பாக்கம் தலம் குறித்த பாடலில், சிவபெருமானின் தன்மைகளை அவன் அடியவர் எவ்வாறு போற்றித் துதிக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறார்.

"மைம்மலர்க் கோதை மார்பினர் எனவும்,
மலைமகள் அவளொடு மருவினர் எனவும்,
செம்மலர்ப் பிறையும் சிறை அணி புனலும்
சென்னிமேல் உடையர், எம் சென்னிமேல் உறைவார்
தம் மலர் அடி ஒன்று அடியவர் பரவ,
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள் நிழல் சேர,
அம் மலர்க் கொன்றை அணிந்த எம் அடிகள்
அச்சிறுபாக்கம் அது ஆட்சி கொண்டாரே".

அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவன், குவளை மலர்களால் ஆன மாலையைச் சூடிய மார்பினர் எனவும், மலை மகளாகிய பார்வதி தேவியை இடப் பாகமாகக் கொண்டுள்ளவர் எனவும், சிவந்த மலர் போன்ற பிறையையும், தேங்கியுள்ள கங்கை நீரையும் தம் சடைமுடி மீது உடையவர் எனவும் போற்றித் துதித்து வழிபடுகிறார்கள். அடியவர்கள் எம் சென்னி மேல் உறைபவர் அவர், மலர் போன்ற அவரின் திருவடிகளை மனத்தால் துதித்து, மனம் ஒன்றி நின்று அடியவர்கள் அவரைப் பரவுகிறார்கள்.

அவ்வாறு அடியவர் துதித்துப் போற்றும் தமிழ்ச்சொல், வடசொற்களால் ஆன தோத்திரங்கள் அனைத்தும் அவரின் திருவடியில் சேர்கின்றன. அத்தகைய சிறப்பு மிக்க பெருமான். அழகிய கொன்றை மலர் மாலையை அணிந்தவராய் விளங்குகிறார் என்கிறார். இறைவனின் தன்மையைப் பாடப் புகுந்த திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனின் பெருமைகளை, தமிழ்ச்சொல்லும் வடசொல்லும் கலந்து தம் திருவடியைச் சார இருக்கும் அடிகளாவார் சிவபெருமான் என்பது உணரத் தக்கது. ஒலி வடிவான சொற்கள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றின. அவை அடையும் இடமும் அவன் அடியே ஆயிற்று என்பது சம்பந்தரால் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானியின் பக்குவம்

இறைவனை நெருங்கிவிட்ட ஞானிக்கு அரசனும் துரும்பாகி விடுகிறான். கனபரிமாணத்தில் அளவிட முடியாததாக இருக்கும் ஆலமரத்தைக் கண்ணுக்குத் தெரியாத காற்றும் சாய்த்து விடுகிறது. துறவிக்கு வேந்தன் துரும்பு. சொத்து சுகங்களில் எவனுக்குப் பற்றில்லையோ, அவனுக்கு இவை எல்லாமே துச்சம்.

'நான், நான்' என்னும் ஆணவத்தைப் பற்றி, 'அர்த்தமுள்ள இந்து மதம்' முதல் பாகத்தில் எழுதியிருக்கிறேன். அந்த ஆணவம் போகிக்கு வரும்; யோகிக்கு வராது. எல்லாவற்றையும் கடந்த நிலை ஞானியின் நிலை. 'என்னுடையது' என்று சொல்ல இறைவனைத் தவிர அவனுக்கு எதுவும் இல்லை. கடவுள் ஒரு நாள் பூமிக்கு வந்தார். அந்த மிராசுதார் ஒரு பெரிய நஞ்சை நிலப்பரப்பைக்காட்டி, 'இவையெல்லாம் என்னுடையவை', என்றார். தன்னுடைய சொத்துக்களை ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டி, 'இது எனக்குச் சொந்தம்', என்றார். கடவுள் அமைதியாக அவருடைய உடம்பைச் சுட்டிக்காட்டி, 'இது எனக்குச் சொந்தம்', என்றார். எவ்வளவு பெரிய ஆணவக்காரனும் இறுதியில், இறைவன் என்னும் நெருப்புக்கே சொந்தமாகி விடுகிறான்.

ஆனால், பற்றற்ற துறவியின் சடலம் எரியும்போதுகூட அந்த நெருப்பு அவர்கள் ஊனுடலை எரிப்பதோடு நின்று விடுவதில்லை; ஞான ஒளியையும் பரப்புகிறது. புறப்பட்ட இடம் எவனுக்குத் தெரிகிறதோ, அவனுக்கே தான் போய்ச் சேர வேண்டிய இடமும் தெரியும். ஜனநாயகத்தில் ஐந்து வருட காலம் என்று சொல்லிக் கொண்டு பதவிக்கு வருகிறவனே, அந்தப் பதவி நிரந்தரமானது என்பது போல் ஆடத் தொடங்கி விடுகிறான்.

அவன் மந்திரியான உடனே அரசாங்கக் கார்கள் ஓடி வருகின்றன. அதிகாரிகள் 'சலாம்' போடுகிறார்கள்; போலீஸ்காரர்கள் 'சல்யூட்' அடிக்கிறார்கள். அதே போலீஸ்காரன் ஒரு சமயத்தில் அதே மந்திரியை கைதுசெய்கிறான். தான் நியமித்த நீதிபதியாலே அவன் விசாரிக்கப் படுகிறான். தான் நிர்வகித்த சிறைச்சாலைக்குள்ளேயே அவன் குடியேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். மற்றவர்களை அவன் எப்படி நடாத்தினானோ, அப்படியே அவனும் நடாத்தப்படுகிறான். ஆனால், பற்றற்ற துறவிக்கோ, இந்தச் சிக்கல்கள் எவையும் இல்லை. தன் உடலுக்காக ஒரு 'சோப்பு'க் கூட அவன் வாங்குவதில்லை. கங்கையில் தண்ணீர் ஓடினால் அவன் குளிக்கிறான்; அது வற்றிவிட்டால் அவன் கிணற்றுத் தண்ணீரை நாடுகிறான். ஆனால், பதவி மோகக்காரனோ, ஒரு புதிய கங்கையை உற்பத்தி செய்ய விரும்புகிறான். 'விட்டுவிடப் போகுதுயிர், விட்டவுடனே உடலை சுட்டுவிடப் போகின்றனர். சுற்றத்தார்,' என்றார் பட்டினத்தார். 'மேல் விழுந்து உற்றார் அழுமுன்னே ஊரார் சுடும் முன்னே குற்றாலத்தானையே கூறு' என்றார். மரணம் நிச்சயம் என்று தெரிந்தும், மனிதன் ஆசையாலும் ஆணவத்தாலும் அலைமோதுகிறான். ஆனால், ஞானிக்கு ஒருவகை ஆணவம் வருகிறது. அந்த ஆணவம் வென்றும் விடுகிறது.

'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என்றாரே அப்பர் சுவாமிகள். அவர் கடைசி வரையிலே தன்னை ஒரு இறைவனின் குடிமகனாகக் கருதினாரே தவிர, ஒரு அரசனின் குடிமகனாகக் கருதியதில்லை. ஒரு பஞ்சப் பரதேசி, துறவி, சொத்து சுகம் ஏதுமற்ற ஞானி. குளிர்காலத்தில் வெயில் காய்வதற்காக ஆற்று மணலிலே துண்டை விரித்து அவர் படுத்திருந்தார். உலகத்தையே வெல்லப் புறப்பட்ட மகா அலெக்சாண்டர் அவன் அருகிலே வந்தான். ஞானி அவனைக் கவனிக்கவில்லை. கால்மேல் கால் போட்டபடி சூரிய கிரணங்களில் குளித்துக் கொண்டிருந்தார். 'நான் அலெக்சாண்டர் வந்திருக்கிறேன்! என்றான் அவன். அப்படியா? என்று சாதாரணமாகச் சொன்னார் ஞானி.

'ஏ, ஞானியே! உனக்கு என்ன வேண்டும், கேள்; நான் தருகிறேன்! என்றான் அலெக்சாண்டர். 'எனக்கு ஒரு உதவி வேண்டும்,' என்றார் ஞானி. 'என்ன வேண்டும்? பொன் வோண்டுமா? பொருள் வேண்டுமா, மாளிகை வேண்டுமா?' என்று கோட்டான். 'ஒன்றும் வேண்டாம். நீ கொஞ்சம் விலகி இருக்க வேண்டும். உன் நிழல் வெயிலை மறைக்கிறது' என்கிறார் ஞானி. அலெக்சாண்டர் என்றால் உலகமே நடுங்கும்; ஞானி நடுங்கவில்லை. அலெக்சாண்டரின் ஆணவத்தை, ஞானியின் ஆணவம் தோற்கடித்தது. காரணம் ஞானிக்குத் தேவை என்று எதுவுமில்லை. யாரிடமிருந்தும் எதையும் எதிர்பாராத ஆணவம், தன்னம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை வயப்பட்ட ஆணவம், திமிர் ஒரு ஞானியிடம் ஒரு பணக்காரன் போனான். 'இதோ பார்! நான் வந்திருக்கிறேன்' என்றான். ஞானி அமைதியாக அவனைப் போகும்படி கை அசைத்தார். "பின் எப்பொழுது வருவது? என்று அவன் கேட்டான். 'நான் செத்த பிறகு வா' என்றார் அவர். 'நீ செத்த பிறகு நான் வந்து என்ன செய்வது?' என்றான் அவன். 'நான் என்றால், நான் அல்லடா! 'நான் வந்திருக்கிறேன்' என்றாயே, அதிலுள்ள 'நான்' என்ற ஆணவம் செத்த பிறகு வா! என்றார் அவர்.

மனிதர்களுக்கு வெற்றி வரும்போது, இந்த ஆணவம் கூடவே வரும். அடி விழும்போது அதுவும் நாய்க்குட்டிபோல் அடங்கி விடும். ஆனால், ஞானியின் ஆணவம், இறைவனைச் சந்திக்கின்ற வரை நீடிக்கும். காரணம் அந்த ஆணவம் தன்னை அறிந்து கொண்டதற்கான தத்துவ விளக்கம். 'மனிதர்களைப் பார்த்து இறைவன் இரண்டு முறை சிரிக்கின்றான்' என்றார், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்.

'இது என் சொத்து! இது என் சொத்து!, என்று பங்காளிகள் சண்டையிடும் போது ஒருமுறை சிரிக்கிறானாம்! 'நோயாளியைப் பார்த்து மருத்துவர்; கவலைப்படாதே, 'நான்' குணப்படுத்திவிடுகிறேன்' என்று சொல்லும் போது ஒரு முறை சிரிக்கிறானாம்!

உலகத்தில் தலைசிறந்த முடிவான டாக்டர் ஆண்டவனே! மற்றவர்களெல்லாம் தற்காலிகமானவர்களே! வாழ்க்கை அரங்கில் எவனுடைய ஆணவமும் செல்லும்படியாகாது. ஆனால், ஞானியின் ஆணவம் உலகத்தையே ஆட்டுவிக்கும். சொல்லப்போனால் அதற்குப் பெயர் ஆணவமல்ல; தெய்வீக உணர்ச்சியின் திரட்சி. ஞானி இறைவனுடைய காலாக நிற்க விரும்புகிறான். மனிதனோ இறைவனுடைய தலையே தானென்று எண்ணுகிறான்.

"ஆனாத செல்வத்தை தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்
தேனார் சோலைத் திருவேங்க டச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே!"

என்று இறைஞ்சினார், குலசேகர ஆழ்வார், மன்னாதி மன்னன், மகுடம் தாங்கிய தலைவன், வேங்கடத்தானின் பாதத்தில் அவன் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோதிற்று. இறை நம்பிக்கை என்பது சாதாரண மனிதனையே அரச பதவிக்கு உயர்த்தி விடுகிறது. அரசனுக்குப் பூமியிலே வைகுந்த பதவியைத் தருகிறது. அரசு பதவி என்றால், எல்லோரையும் ஆட்டிப் படைக்கின்ற சக்தி. இன்னும் நம் நாட்டில் கோடீஸ்வரர்கள் இருக்கிறார்கள்; நிலப்பிரபுக்கள் இருக்கிறார்கள்; தொழில் அதிபர்கள் இருக்கிறார்கள்; ஆனால் காஞ்சிபுரத்து சந்நியாசியின் காலைத்தான் உலகம் தொட்டு வணங்குகிறதே தவிர, கோடீஸ்வரனின் காலை அவனிடம் பணம் பெற்றுக் கொண்டவன்கூடத் தொடுவதில்லை. பெறுதலைவிட, துறத்தலுக்குரிய மரியாதை அதுதான். வரவு - செலவு எழுதுகின்ற செட்டியாரைவிட, துறவு கொண்டு விட்ட ஞானிக்குத்தான் மரியாதை அதிகம்.

ஆசையும் தேவையும் இல்லாதவன் எவனுமே தலைநிமிர்ந்து நிற்க முடியும். எனக்கு ஒரு பணக்காரரைரைத் தெரியும். கோடி ரூபாய் அவருக்குச் சொத்து உண்டு. இப்பொழுது அவரிடம் போய், 'கொத்தவால் சாவடியில் கத்தரிக்காய் வாங்கி ஜாம்பஜாரில், கொண்டு வந்து விற்றால் பத்து ரூபாய் கிடைக்கும்' என்று சொல்லுங்கள்; வருவார். நம்மிடந்தான் கோடி இருக்கிறதே, பத்து எதற்கு என்று கருதமாட்டார்.

அக்காளை மணந்தவனுக்குத் தங்கையும் தேவைப்படுகிறது. சென்னையில் புதுநகர் வந்தால் ஆங்காங்கே புதுபங்களா சிலருக்குத் தேவைப்படுகிறது! இவனையெல்லாம் வருமானவரி அலுவலகக் குமாஸ்தா கூட மிரட்டுவான். ஆசை வளர்வதும், ஆணவம் பெருகுவதும் மனிதனது அழிவுக்கே அறிகுறி. இன்றைய அறிவு எனக்கு ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்திருக்குமானால், நான் ஒரு துறவியாகவே இருந்திருப்பேன்.

லௌகீகத்தில் இறங்கிவிட்ட மனிதனது நிலைமைதான் என்ன? நாய்க்குட்டி வளர்க்கிறான்; அதற்குப் பால் வேண்டுமே என்று பசுமாடு வாங்குகிறான். பசுவைப் பாதுகாக்க வேண்டுமே என்று வேலைக்கு ஆளை வைக்கிறான்; வேலைக்காரனைக் கண்காணிக்க வேண்டுமே என்று வீட்டுக்காரியைக் கொண்டு வருகிறான். வீட்டுக்காரி வந்த பின் சும்மா இருக்கமுடியவில்லை; பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறான். பிள்ளைகளுக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று ஆசை வயப்பட்டு அலைகிறான். நினைத்தது கிடைக்கவில்லை என்றால் தலையில் அடித்துக் கொண்டு அழுகிறான்; நினைத்ததெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்து விட்டால் 'நான் யார் தெரியுமா? என்கிறான். ஒன்று அவலம், மற்றொன்று ஆணவம். இந்த இரண்டுமற்ற நிலையில் ஒரு மனிதனுக்குத் தேவையானது லௌகீக வாழ்விலும் ஒரு ஞானியின் பக்குவம். அப்படிப்பட்டவனை, 'இல்லறத் துறவி' என்பார்கள். 'வெள்ளை வேட்டி சந்நியாசி' என்பார்கள். அவன், வருவதைக் கடவுள் பெயராலே செலவு எழுதுகிறான். லௌகீகத்தில் இருந்து கொண்டே ஞான மார்க்கத்தைக் கடைப்பிடிப்பவனும், எந்தக் காலத்திலும் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை.

நமது தலைமுறையில் காந்திஜி ஒரு உதாரணம். அவர் நீட்டிய கையில் கொட்டிக் கொடுத்தது நாடு. கொட்டிக் கொடுத்ததை அப்படியே குவித்துக் கொடுத்தார் நாட்டுக்கு. தேவதாஸ் காந்திக்குக் கொடுத்தாரா, தேறாத பிள்ளைக்கு ஒதுக்கினாரா? குடும்பத்தில் இருங்கள். ஞானியாகத் திகழுங்கள். பசி எவ்வளவோ அவ்வளவுக்கு உணவு தேடுங்கள். பறவைக் குக் கூடு போதும்; சிங்கத்தின் குகை தேவை இல்லை. சிங்கத்தின் குகை அதற்குத் தேவைப்பட்டால், சிங்கத்திற்கு அது தேவைப்படும்.

## குணத்தை மாற்றும் உணவு

மனிதனுக்கு குணங்கள் மூன்று. சத்துவ, ராஜஸ, தாமத குணங்கள்தான் அவை. இந்த மூன்று குணங்களும் உணவினாலேயே அமைகின்றன.

அவல், பொரி, அப்பம், பழம், பால், தேன் போன்ற உணவுகள் சத்துவ குணத்தை வளர்க்கின்றன. சாந்தம், அன்பு, அடக்கம், பொறுமை, கருணை போன்றவை சத்துவ குணத்தால் வருகின்றன.

காரம், புளி, ஈருள்ளி, வெங்காயம், முள்ளங்கி போன்ற உணவுகள் ராஜஸ குணத்தை வளர்க்கின்றன. கோபம், டம்பம், வீண் பெருமை, அகங்காரம் போன்றவை இந்த ராஜஸ குணத்தால் வருகின்றன.

பழையது, புண்ணக்கு, மாமிசம் போன்ற உணவுகள் தாமத குணத்தை வளர்க்கின்றன. தூக்கம், சோம்பல், மயக்கம் போன்றவை தாமத குணத்தால் வருகின்றன என்கிறார் திருமுருக கிருபானந்தவாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலஸ்தான மகா கும்பாபிஷேகம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச மங்களம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக கன்னிகைகள் பாவம் தீர்த்த தலம்

முன்னொரு காலத்தில் பாதாள லோகத்தில் இருந்த நாக கன்னிகைகள் பூலோகத்தின் அழகைப் பார்க்க ஆசைப்பட்டு, அதற்காக நாகராஜனிடம் அனுமதி கேட்டனர். அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. பின்னர் நாகராணியிடம் எடுத்துக் கூறி, நாகராஜனின் அனுமதியுடன் சூரியன் மறைவதற்குள் வந்துவிடுகின்றோம் என்று கூறி நாக கன்னிகைகள் பூலோகம் வந்தனர்.

கோவை மாவட்டத்தில் உள்ள வெள்ளியங்கிரி அடிவார அழகில் பூலோக இயற்கை அழகைக் கண்டு ரசித்தனர். அப்போது வெள்ளியங்கிரி மலையின் அழகில் சூரியன் மறைவதை அவர்கள் கவனிக்க மறந்து விட்டார்கள். வானில் பிரகாசித்த சூரியன் மறைந்து விட்டது. இதைக் கவனித்த நாககன்னிகைகள் பாதாள லோகத்திற்குள் செல்ல முயன்றனர். வாக்குத் தவறியதால் அவர்களால் செல்ல முடியவில்லை. இதனால் நாகராஜனின் கோபத்துக்கு ஆளாகி அவர்கள் நாகதோஷத்துக்கு ஆளானார்கள்.

இதைத் தொடர்ந்து சாப விமோசனம் பெறுவதற்காக வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் ஓடும் காஞ்சிமாநதியின் கரையில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து தினமும் புனிதநீர் ஊற்றி வழிபாடு செய்து வந்தனர். இவர்களின் பூஜையில் மனம் இரங்கிய சிவபெருமான் அங்கு தோன்றி நாககன்னிகைகளுக்கு பாவவிமோசனம் அளித்து மறைந்தார். அதன் பின்னர்தான் நாககன்னிகைகள் பாதாளலோகம் புறப்பட்டுச் சென்றனர்.

இந்த அற்புதம் நிகழ்ந்த நாகேசுவரர் கோவில் கோவையில் இருந்து பூண்டி செல்லும் சாலையில் செம்மேடு அருகே கோட்டைக் காடு என்ற ஊரில் அமைந்துள்ளது. இங்கு வந்து வழிபாடு செய்தால் நாகதோஷம் நீங்கும் என்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதம்பர மகிமை!

தரிசிக்க முக்தி தரும் திருத்தலம்... சிதம்பரம். இங்கு சிவபெருமான், நடராஜப் பெருமானாக ஆனந்த தாண்டவம் ஆடுகிறார். இந்தக் கோவிலுக்குப் பல சிறப்புகள் உண்டு.

மூலவரே உற்சவராக வலம்வரும் கோவில் அநேகமாக இது மட்டுமே. பஞ்சபூதத் தலங்களுள் ஆகாயத் தலமாக விளங்கும் இக் கோவில் சமயக்குரவர்கள் நால்வராலும் பாடல் பெற்றது.

சேக்கிழார் பெருமான் இயற்றிய சிவனடியார்களின் வரலாற்றுத் தொகுப்பான பெரியபுராணம் இங்கு தான் அரங்கேற்றம் செய்யப் பட்டது.

மாணிக்கவாசகரின் திருவாசகத்தை இங்குள்ள இறைவனே எழுதி, படியெடுத்துக் கொடுத்திருக்கிறார். அனைத்துத் தெய்வங்களின் சக்தியும் தினந்தோறும் நடராஜப்பெருமானிடம் ஒடுங்கி, பின்பு அந்த தெய்வங்களிடமே செல்லும் தன்மை மிக்கது இத்தலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கதவு திறத்தல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச மங்களம்







tion.

# திருப்பதியில் மட்டும் தான்

வைணவ ஆலயங்கள் எல்லாவற்றிலும் வைகுண்ட ஏகாதசியின் அடுத்த நாளான முக்கோடி துவாதசி விசேஷம். திருப்பதியில் மகாவிசேஷம் ஒன்று உண்டு. திருப்பதி ஏழுமலையானைத் தரிசித்த பின் வெளியில் வருகிறோம். வெளியில் வந்தவுடன் இருக்கும் பிரகாரத்துக்கு " விமானப் பிரதட்சணம் " என்று பெயர். இந்தப் பிரகாரத்துக்கும், வெங்கடாசலபதி எழுந்தருளி இருக்கும் கருவறைக்கும் நடுவில் ஒரு பிரதட்சணப்பிரகாரம் இருக்கிறது. இது திருப்பதி திருமலையில் மட்டுமே இருக்கும் அபூர்வமான பிரகாரம் ஆகும். இதை வலம் வந்தால் மகா புண்ணியம் கிடைக்கும்.

நாம் வெங்கடாசலபதியைத் தரிசிக்கப் "பங்காரு" (பொன்) வாயிலைக் கடக்க வேண்டும். கடந்தவுடன் இருப்பது " ஸ்நயன மண்டபம் " இதனை அடுத்து இருக்கும் பகுதியில் நமக்கு இடது பக்கம் தென்கிழக்கு மூலையில் " ராமர் மேடை" என்ற பகுதி இருக்கிறது. இந்த ராமர் மேடைக்கு இடது பக்கம் ஆரம்பித்து மூலவரான வெங்கடேசரை வலம் வந்து உண்டியல் இருக்கும் இடத்துக்கு அருகில் வெளிவருவது " முக்கோடிப் பிரதட்சணம் " எனப்படும். வருடம் 365 நாட்களில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டுக் கிடைக்கும் வரப்பிரசாதமான வாய்ப்பு இது. மார்கழி மாத வைகுண்ட ஏகாதசிக்கு முதல் நாள் (தசமி) அன்று முக்கோடி பிரதட்சண வாயிலைத் திறப்பார்கள். அன்றும், ஏகாத சிக்கு மறு நாளான துவாதசி அன்றும் இந்த வாயில் திறந்திருக்கும். இது ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

எல்லாக் கோயில்களிலும் அபிஷேக நீர் வெளியில் வந்து விழுமல்லவா? ஆனால், திருமலையில் மட்டும் திருமஞ்சன நீர் வெளியில் விழாது. அது முக்கோடி பிரதட்சணத்தில் உள்ள ஒரு தொட்டியில் விழும். அதை மொண்டு போய் வெளியில் கொட்டு வார்கள். இதனால் , ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்த திருமஞ்சன நீரை நாம் தாண்டும் குற்றம் இந்தப் பிரதட்சணத்தால் வருவதில்லை. முக்கோடிப்பிரதட்சணம் செய்து எக்காலமும் நலம் பெற முயற்சிக்கலாமே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்கர தீர்த்தத்தில் ஸ்நானம் புண்ணியம்

திருமலையில் மிகப்பல புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன. பெருமாள் தரிசனத்திற்குச் செல்வோர் கோயிலின் வெளிப்புற வீதியில் வட கிழக்கு மூலையில் உள்ள " சுவாமி புஷ்கரணி " என்றும் " குமார தீர்த்தம் என்றும்" சொல்லப்படும் தீர்த்தத்தில் நீராடி வராகப் பெருமாளைத் தரிசித்து, வெங்கடாசலபதியைத் தரிசிக்க வேண்டும்.

வைகுண்ட ஏகாதசி அன்று திருமலையில் உள்ள சக்கரத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வது மிகவும் புண்ணியம் தரும். எல்லா வகையான சங்கடங்களும் சட்டென விலகும். இத்தீர்த்தம் கோயிலுக்கு வட மேற்கே 2 மைல் தொலைவில் இருக்கிறது. இங்கு சென்று நீராட வசதிகள் உண்டு.

சக்கர தீர்த்தக்கரையில் லட்சுமி நரசிம்மரும், சுதர்சன சக்கரமும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. "பத்மநாபன்" என்ற பக்தன் 12 ஆண்டுகள் கடும் தவம் புரிந்தான். பக்தனுக்குப் பெருமாள் காட்சி தந்தார். அவனுக்குத் துன்பம் இழைத்த அசுரனை அழிக்கச் சக்கராயுதம் ஏவினார் பெருமாள். அதுவே சக்கரதீர்த்தம் என்று சொல்லப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் விநாயகர்!

நம்ம ஊரில் ஆற்றங்கரையிலும் அரச மரத்தடியிலும் அமர்ந்து காட்சியளிக்கும் விநாயகர் வெளிநாடுகள் பலவற்றிலும் வீற்றிருந்து வினைகளைத் தீர்த்து வருகின்றார். விநாயகர், நம் முன்னோர் சென்ற இடமெல்லாம் சென்று உலகம் முழுவதும் பரவியுள்ள இந்து சமயக் கடவுளில் முதலிடம் பெற்றுள்ளார்.

எல்லோரும் விநாயகரை வழிபடத் தொடங்கியதால் விநாயகர் பொதுத் தெய்வமாக உயர்ந்துள்ளார். வெளிநாடு சென்ற கணபதி தென்கிழக்கு ஆசியாவில் வைதீகக் கடவுளாகவும், தூரக்கிழக்கு நாடுகளில் பௌத்த சமயக் கடவுளாகவும் கருதி வழிபடப்பட்டுள்ளார். காலமும் தூரமும் கடந்து வழிபடப்பட்ட இந்துக்கடவுளான விநாயகர் உலக நாடுகள் பலவற்றிலும் பரவியுள்ளார்.

**ஆப்கானிஸ்தான் :-** இங்கு சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு விநாயகர் சிலை " கார்டெஸ்" என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டு காபூலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்குள்ள இந்துக்களால் வழிபடப்படுகிறது.

**நேபாளம் :-** இங்கு விநாயகர் இந்துக்களாலும், பௌத்தர்களாலும் வழிபடப்படுகின்றார். பௌத்தர்கள் கணபதியை " சித்தி தாதா " என்று வழிபடுகின்றனர். ஹேரம்ப விநாயகர் சிலை ஒன்று " பட்காவ்ன்" என்ற இடத்தில் கிடைத்துள்ளது.

**திபெத்:-** திபெத்தின் மேற்குப் பகுதி வாழ் மக்கள் விநாயகரை, பேய், பிசாசுகளிடமிருந்து மக்களைக் காக்கும் கடவுளாக வழிபடு கின்றனர். கோடானில் கணேசன் பிரசித்தி பெற்றிருக்கிறார்.

நமது புராணங்களில் பிரும்மதேசம் என்று குறிக்கப்படும் பர்மாவில் உள்ள கீழை பர்மாவில் ஏராளமான பிள்ளையார் சிலைகள் கிடைத்துள்ளன. ரங்கூன் மியூசியத்தில் இரண்டு அற்புதமான கணேச விக்கிரகங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சீனா:-** இங்குள்ள "துன் ஹவாங்" என்ற இடத்தில் ஏராளமாக விநாயகர் சிலைகள் கிடைத்துள்ளன. அதே போன்று "குங்சியான்" என்ற இடத்தில் உள்ள குகைக் கோயிலிலும் விநாயகர் சிற்பம் உள்ளது. முதல் குகையில் பல இந்து தெய்வங்களோடு விநாயகரும் செதுக்கப்பட்டுள்ளார்.

**ஜப்பான்:-** இங்கு கஜேந்திரன் என்ற பெயரில் விநாயகர் வழிபடப் படுகிறார். ஜப்பானிய மன்னர்களின் அரண்மனையில் விநாயகர் வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

**மங்கோலியா:-** புத்தமதம் மங்கோலியாவில் நுழையும் போதே விநாயகரும் நுழைந்திருக்கிறார். நார்த்தானில் கண்டெடுக்கப்பட்டுள்ள 500 தெய்வங்களில் "நிருத்ய கணபதி" உள்ளார்.

**இலங்கை:-** "பொலனருவா" என்னும் இடத்தில் உள்ள சிவன் கோயில் முதல் ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. வானவன்மாதேவிச்சரம் என்று பெயர். தொல்லியல் சின்னமான இது இரண்டாம் எண் தேவாலயம் எனப்படும். விநாயகர் சிலை இடம் பெற்றுள்ளது. கதிர்காமத்தில் உள்ள முருகன் கோயிலில் விநாயகருக்குத் தனிச் சந்நிதி உள்ளது. தாய்லாந்தில் விநாயகர் பிரபல தெய்வமாக விளங்குகிறார். பாங்காக்கில் உள்ள இந்துக் கோயிலில் கணேசரின் வெண்கலச் சிலை ஒன்றுள்ளது.

**சம்பா:-** போ-நகரில் கணேசருக்கு என்று தனிக் கோயில்கள் இருந்தன. மை சோன் என்ற இடத்தில் உள்ள சிவன் கோயிலில் விநாயகரின் சிற்பம் ஒன்று கிடைத்துள்ளது.

**கம்போடியா:-** கம்போஜம் என்று அழைக்கப்பட்ட கம்போடியா, இந்தியாவுடன் நீண்ட காலமாகவே பண்பாட்டு தொடர்பு கொண்டிருந்தது. ஏராளமான கணேச விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. "ஆங்கோர் பரே" கல்வெட்டுகள் மூலம் கோயில்களில் வழிபடப் பட்ட மூர்த்திகளில் விநாயகரும் இருந்தார் என்பது தெரியவருகிறது.

**ஜாவா மற்றும் பாலி:-** சைவ சமயம் இந்த நாட்டில் பிரபலமாகப் பரவியிருந்தது. சிவன் கோயில்கள் அனைத்திலுமே விநாயகருக்கு தனித்தனி சந்நிதிகள் உள்ளன. வெண்கலத்தினாலான கணேச விக்கிரகம்-ஜாவாவில் கண்டெடுக்கப்பட்டு தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது. டியாங் பீடபூமியில் கண்டெடுக்கப்பட்ட கணேசரின் கற்சிலை ஒன்று ஜாவாவின் பழமையான கணேச விக்கிரகம் என்று கருதப்படுகிறது. சண்டி சிங்கஸோரி என்ற இடத்தில் நின்ற கோலத்தில் உள்ள விநாயகர் கபால அணிகலன்கள் அணிந்துள்ளார்.

இது போன்று இந்தியாவில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பல நாடுகளிலும் பரவி காட்சியளித்து வரும் விநாயகரை நாமும் தொடர்ந்து வழிபட்டு மேன்மை பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹா அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரைகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரஹரி

ஞானதேவரின் சீடர்களில் ஒருவராக விளங்கியவர் நரஹரி. ஆனால், இவர் சிவபக்தர். தப்பித் தவறிக்கூட ஸ்ரீ கிருஷ்ணனையோ ஸ்ரீ ராமபிரானையோ வணங்க மாட்டார்.

அது மட்டுமில்லை. வைணவக் கோயில் இருக்கும் பக்கம் தலைவைத்துப் படுக்க மாட்டார். பெருமாள் விக்கிரகங்கள் எங்காவது பார்க்க நேரிட்டால் ஏதோ பார்க்கக் கூடாததைப் பார்க்க நேரிட்ட மாதிரித் தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு விடுவார் நரஹரி. அப்படி ஒரு வெறித்தனமான சிவபக்தி.

நரஹரி வசித்து வந்ததோ ஸ்ரீ பாண்டுரங்கன் அருளும் பண்டரிபுரத்தில். அதுவும் அந்த விட்டலன் அருளும் ஆலயத்துக்கு வெகு அருகில் அந்த ஆலயத்தின் கோபுரத்தைக்கூடப் பார்க்க மாட்டார். அந்த ஆலயத்தின் வழியே செல்ல வேண்டி இருந்தால், வேறு வழியைத் தேடிக் கண்டுபிடித்துச் செல்வார்.

பாண்டுரங்கனின் ஆலயத்தில் திருவிழா நடக்கின்ற நேரத்தில் ஊரில் தங்காமல், வேறு எங்காவது புறப்பட்டுப் போய்விடுவார். திருவிழா முடிந்த பிறகுதான் ஊர் திரும்புவார். தினந்தோறும் நதிக்கரையில் ஸ்நானம் செய்து விட்டு, எண்ணற்ற பக்தர்கள் விட்டலன் நாமத்தைச் சொல்லியபடியே பாண்டுரங்கன் ஆலயத்துக்குள் செல்வார்கள். ஆனால், இவரோ ஊரில் உள்ள பக்தர்கள் அதிகம் வராத மல்லிகார்ஜூனர் கோயிலுக்குத் தினமும் செல்வார். குளித்துவிட்டு நெற்றியில் திருநீறு பூசி, சிவநாமத்தை உச்சரித்தபடி சிவன் கோயிலுக்குச் செல்வார். வில்வத்தையும் இதர பூக்களையும் அந்தச் சிவன் திருமேனிக்கு வைத்து வணங்குவார்.

பண்டரிபுரத்தில் வசித்தவர்கள் நரஹரியை வித்தியாசமாகப் பார்த்தனர். இருக்காதா பின்னே.... தினமும் நூற்றுக் கணக்கான பக்தர்கள் எந்தெந்த ஊரில் இருந்தோ புறப்பட்டு வந்து நெருக்கியடித்துத் தரிசனம் செய்து மகிழும் பண்டரிநாதன் ஆலயத்துக்குள் நுழையாத இவரும் ஒரு பக்தரா என்று அவர்கள் நரஹரியின் மீது கோபப்பட்டார்கள்.

நரஹரி ஒரு பொற்கொல்லர். பரம்பரை பரம்பரையாக நகை செய்யும் தொழிலில் இருந்து வருபவர். தொழிலில் நரஹரிக்கு நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் உண்டு. யாரையும் ஏமாற்றமாட்டார். குறித்த நேரத்தில் சொன்னபடி நகைகளைச் செய்து கொடுத்து விடுவார். பிறர் பொருளுக்கு என்றுமே ஆசைப்படமாட்டார். இதனால் தொழில் ரீதியாக நரஹரிக்கு உள்ளூரிலும் வெளியூரிலும் நல்ல பெயர்.

ஒருமுறை வெளியூர் வியாபாரி ஒருவர் பண்டரிபுரம் வந்து ஸ்ரீ பாண்டுரங்கனை வழிபட்டார். அவர் செல்வந்தர். ஆனால். ஒரே ஒரு குறை; குழந்தை இல்லை. எத்தனையோ கோயில் குளம் ஏறி இறங்கியும் அந்தப் பாக்கியம் அமையவில்லை. எனவே, இந்தப் பிரார்த்தனையை முன்வைத்து தன் மனைவியுடன் பண்டரிபுரம் வந்து விட்டலன் திருமேனி முன்னே நின்று கண்ணீர் மல்கப் பிரார்த்தித்துக் கொண்டார். தனக்குக் குழந்தை பிறந்தால், விட்டலனின் இடுப்புக்கு தங்கத்தில் அரைஞாண் கயிறு செய்து போடுவதாக வேண்டிக் கொண்டார்.

பிரார்த்தனை முடிந்து ஊர் திரும்பிய அவருக்கு அதிசயம். அடுத்து வந்த ஓரிரு வாரங்களில் அவரது மனைவி கர்ப்பம் ஆனாள். பணக்காரருக்குக் கொண்டாட்டம். 'விட்டலன் மகிமையே மகிமை' என்று மனைவியிடமும் மற்றவர்களிடமும் சொல்லிக் கொண்டே இருந்தார். உரிய காலத்தில் அந்தத் தம்பதிக்கு அழகான ஆண் குழந்தையும் பிறந்தது.

பிரார்த்தனையை நிறைவேற்ற வேண்டும் என்கிற விருப்பத் துடன் பண்டரிபுரம் வந்தார். தங்க அரைஞாண் கயிறு செய்வதற்கான ஆசாரியைப்பற்றி விசாரித்தபோது ஊரில் இருந்த அனைவரும் நரஹரியை அடையாளம் காட்டினார்கள். எனவே, அவரது வீட்டுக்குப் போனார் வியாபாரி.

நெற்றி நிறைய விபூதியுடன், 'நமசிவாய' எனும் பஞ்சாட்சர நாமத்தை உச்சரித்தபடி வரவேற்றார். 'தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்' என்று பணிவுடன் கேட்டார்.

வியாபாரி, 'தங்கத்தில் ஒரு அரைஞாண் கயிறு செய்ய வேண்டும். எத்தனை தங்கம் செலவானாலும் பரவாயில்லை' என்றார்.

'தாராளமாக, அரைஞாண் கயிறு செய்வதற்கு அளவிட வேண்டிய குழந்தையைக் கூட்டி வந்திருக்கிறீர்களா? " என்று கேட்டார் நரஹரி.

வியாபாரி சிரித்தார். "ஐயா... தங்க அரைஞாண் கயிறு என் குடும்பத்தில் உள்ளவருக்கு அல்ல. இதே ஊரில் குடிகொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீபண்டரி நாதனுக்கு. அந்தப் பெருமானுக்குத் தங்கத்தில் அரைஞாண் கயிறு செய்து அணிவிக்க வேண்டும் என்பது என் பிரார்த்தனை" என்று அவர் சொன்ன அடுத்த விநாடி, நரஹரியின் முகம் மாறியது. "ஐயா வியாபாரியே.... தயவு செய்து எழுந்திருங்கள்... கண்டவனுக்கு எல்லாம் என்னால் நகை செய்ய முடியாது புறப்படுங்கள்" என்றார் ஆத்திரமாக.

வியாபாரி அதிர்ந்து போனார். அப்போது நரஹரியின் வீட்டில் இருந்த இன்னொருவர் அவரது சிவ பக்திபற்றி வியாபாரியிடம் சொன்னார். ஆனால் வியாபாரியோ விடுவதாக இல்லை.

"ஐயா நரஹரியாரே... உம்மை விட்டால். வேறு எவரும் சுத்தமாக இந்த ஆபரணத்தைச் செய்ய மாட்டார்கள் என்று அறிந்தேன். எப்படியாவது தாங்கள் செய்து கொடுத்தால்தான் என் மனம் திருப்தி அடையும்" என்றார் கெஞ்சலாக.

தன் மீது இந்த அளவுக்கு நம்பிக்கை கொண்டுள்ள காரணத்தால் அவர் கேட்க தங்க அரைஞாண் கயிறைத் தயார் செய்து தருவதாக வாக்குறுதி தந்தார். செய்த பிறகு, 'சரி... தங்களுக்காக அந்த நகையை நான் செய்து தருகிறேன். ஆனால். அந்தக் கோயிலுக்குள் நான் வர மாட்டேன். அவனையும் பார்க்க மாட்டேன். அளவைக் கொண்டு வாருங்கள், நேர்த்தியாகச் செய்து தருகிறேன்" என்றார்.

அதன்படி பாண்டுரங்கன் ஆலய அர்ச்சகர்கள் கொடுத்த அளவைக் கொண்டு அரைஞாண் கயிறு தயார் செய்து, வியாபாரியிடம் கொடுத்தார் நரஹரி. விட்டலனுக்கு அதை அணிவித்துத் தன் பிரார்த்தனையை நிறைவேற்றுவதற்காகக் கோயிலுக்கு ஓடோடிச் சென்றார்.

அதை விட்டலனுக்கு அணிவித்த அர்ச்சகர்கள். 'ஒரு அங்குலம் குறைவாக இருக்கிறது. எனவே, பொற்கொல்லரிடம் போய் ஒரு அங்குலத்துக்கு நீட்டிக் கொண்டு வாருங்கள் " என்றனர்.

நரஹரியின் வீட்டுக்கு வந்த வியாபாரி விஷயத்தைச் சொன்னார். அந்த அரைஞாண் கயிற்றை ஒரு அங்குலத்துக்குக் கச்சிதமாக நீட்டிக் கொடுத்தார்.

ஆலயத்துக்கு விரைந்தார் வியாபாரி. அர்ச்சகர்கள் வாங்கி அணிவித்தபோது முகம் சுழித்தனர். என்னய்யா இது.... இப்போது ஒரு அங்குலம் கூடுதலாகப் போய்விட்டது."

அரைஞாண் கயிறு விட்டலன் இடுப்பில் இருந்து கீழே நழுவி விழும்போல் இருக்கிறது. ஒரு அங்குலம் குறைத்துக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாருங்கள். இல்லாவிடில் ஆசாரியை நேரில் வந்து அளவெடுத்துச் செல்லச் சொல்லுங்கள்." என்றனர்.

நரஹரியின் வீட்டுக்கு வந்து வியாபாரி விஷயத்தைச் சொன்னதும் நரஹரி வானத்துக்கும் பூமிக்கும் குதிக்க ஆரம்பித்தார். "என்ன இப்படி என்னை அலைக்கழிக்கிறீர்... எனது இத்தனை ஆண்டு தொழிலில் இது போன்ற பிரச்சினையை நான் சந்தித்ததே இல்லை. அந்தக் கோயிலுக்கு எல்லாம் நான் வரமாட்டேன்." என்றார் எரிச்சலாக.

வியாபாரி மீண்டும் கெஞ்சவும், நரஹரி மனம் இரங்கினார். தன்னை நம்பி வந்த ஒருவரை ஏமாற்றுவது தொழிலுக்குத் தர்மம் அல்ல என்பதை உணர்ந்தார்.

பிறகு, "ஐயா... என் கண்களைக் கட்டி அந்தக் கோயிலுக்குள் அழைத்துச் செல்லுங்கள். விக்கிரகத்தின் முன்னால் நின்று அள வெடுத்துக் கொள்கிறேன்." என்றார்.

அதன்படி நரஹரியின் கண்களைக் கட்டி கூட்டிப் போய் மூலவர் திருமேனிக்கு முன்னால் நிறுத்தினார். அளவெடுப்பதற்காக பண்டரிநாதனின் திருமேனியைத் தொட்டபோது துணுக்குற்றார் நரஹரி. உச்சந்தலையில் கை வைத்தால், கங்கை நதிப் பிரவாகம் போல் குளிர்ச்சி, கழுத்திலே கை வைத்தால் நாகமும், ருத்திராட்ச மாலையும், இருபக்கமும் கை வைத்தால், மானம் மழுவும், இடுப்பிலே கை வைத்தால் புலித்தோல் ஆடை, 'சிவன் திருமேனியோ' என்று குழம்பி சட்டென்று தன் கண்களைக் கட்டி இருக்கும் துணியை அவிழ்த்தார்.

எதிரே பாண்டுரங்கன் விக்கிரகம். தனக்கு ஏதோ பிரமை போலிருக்கிறது என்று மீண்டும் கண்களை கட்டியபடி கை வைத்தால். அதே அனுபவம். இப்படி மூன்று நான்கு முறை நடந்தது.

பிறகுதான், 'சிவன் வேறு... நான் வேறு இல்லை... எல்லாம் ஒன்றுதான் இதைப் புரிந்து கொள் நரஹரி' என்று பண்டரிநாதன் இவருக்கு உணர்த்த... கண்கட்டை அவிழ்த்து அளவெடுத்துச் செய்த நகை துல்லியமாகப் பொருந்தியது. எல்லாரும் பாராட்டினர்.

பின்னாட்களில் பண்டரிநாதனின் மிகச் சிறந்த பக்தராக ஆனார். பாடல்கள் எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாலட்சுமியும் நந்தி மங்கையும்

ஆற்றல் - செல்வம் - அறிவு மனிதரின் மேன்மைக்கு வழிவகுப் பன. ஆற்றலைத் துர்க்கையாகப் போற்றினார்கள். செல்வத்துக்குத் திருமகள் வடிவம் தந்தார்கள். கல்விக் கடவுளாகச் சரஸ்வதி தேவியை வழிபட்டார்கள். முப்பெரும் தேவியருக்கும் வழிபாடு செய்யும் நாட்கள் நவராத்திரி நாட்கள். எல்லா நாட்களும் உமையன்னையை வழிபடுவதுடன் முதல் மூன்று நாட்கள் துர்க்கையை வழிபட்டபின் அடுத்த மூன்று நாட்கள் மகாலட்சுமி வழிபாட்டுக்குரிய நாட்களாக அமைவன. சாக்த சம்பிரதாயப்படி நான்காம் நாளில் சப்த மங்கைத் தலங்களில் வைஷ்ணவி வழிபட்ட நந்தி மங்கையை வழிபட வேண்டும்.

## மகாலட்சுமியின் மகிமை

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்பார் வள்ளுவர். செல்வம் உலக வாழ்க்கைக்கு மிகத் தேவை. பணத்துக்கு மட்டுமான கடவுளல்லள் மகாலட்சுமி. நிறைவான வாழ்க்கைக்கு வழிவகுப்பவள் அவள். செல்வம் மட்டும் இருந்து நல்ல மனைவி அமையாவிட்டால் பிள்ளைப்பேறு கிட்டாவிட்டால். வாழ்க்கை இனிக்கவே இனிக்காது. எட்டு வகையான - நலங்களை விளைவிக்கும் மகாசக்தியே மகாலட்சுமி எனப் பெரியோர்கள் வகுத்துத் தந்திருக்கிறார்கள்.

லட்சுமி அஷ்டலட்சுமிகளாகப் போற்றப்படுபவள். எல்லா வளங்களையும் தருபவள் ஆதிலட்சுமி. பசுமையை விளைவிப்பவள் தான்யலட்சுமி. துணிவைத் தருபவள் தைரியலட்சுமி. ஆளுமையை அளிப்பவள் ராஜ்ய லட்சுமி. பிள்ளைப்பேற்றைக் கொடுப்பவள் சந்தான லட்சுமி. வெற்றிகளைக் கொடுப்பவள் விஜயலட்சுமி. கல்வியும் ஞானமும் அருள்பவள் வித்யாலட்சுமி. இப்படி உலக வாழ்க்கை நன்கு அமைய எல்லாம் நல்கும் தெய்வமே மகாலட்சுமி.

## திருவுரு உணர்த்தும் தத்துவம்

ஆதியில் கிருஷ்ணரின் அம்சமாக அவதரித்த மகாலட்சுமி என்கிறது தேவி பாகவதம். இவளே பின்னர்த் திருப்பாற்கடலில் தோன்றினாள். ஐஸ்வர்ய லட்சுமியாகத் தோன்றினாள். திருமாலின் துணைவியானாள். அரசரிடம் ராஜலட்சுமியாய், வீட்டில் கிருக லட்சுமியாய், வீரரிடம் தைரிய லட்சுமியாய் விளங்குபவள் இவளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம், பதவி, ஆட்சி, அதிகாரம் தருபவள் மகாலட்சுமி. செல்வம் பெருகும்போது சுகம் ஒரு பக்கம் வரும்; கூடவே கவலைகளும் கூடி விடும். கவலை வராமல் இருக்க வேண்டுமானால் மனச்சஞ்சலம் இருக்கக் கூடாது. இதையே மகாலட்சுமியின் திருவுருவம் உணர்த்துகிறது.

தண்ணீரில் உள்ள தாமரைப்பூ தள்ளாடிக் கொண்டிருக்கும். ஆழ்கடலில் உள்ள தாமரை மலரில் எழுந்தருளியிருக்கிறாள் மகாலட்சுமி. அது ஆடுவதில்லை. அசைவதுமில்லை. சஞ்சலமில்லாத நிலையில் நம்மை ஆக்கிக் கொண்டால் ஸ்ரீதேவி நிலைப்பாள். அத்தகைய மனம் வேண்டித் தாமரையாளை வேண்ட வேண்டும்.

**சிவாலயங்களில் மகாலட்சுமி**

பழமையான சிவாலயங்கள் எல்லாவற்றிலும் லட்சுமி தேவிக்கு தனிச் சந்நிதி இருக்கும். கருவறையை ஒட்டி அமையும் முதல் பிரகாரத்தின் வடமேற்கு மூலையின் லட்சுமிதேவி இருப்பாள். நேர் எதிரில் வைரவர் இருப்பார். சில தலங்களில் முப்பெரும் தேவியரும் இருப்பதுண்டு. திருப்பனந்தாள் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இங்குள்ள அருணசடேஸ்வரர் ஆலயத்தில் மகாலட்சுமிக்கு இருபுறமும் இரு தேவியர். இப்படி முப்பெரும் தேவியராக உள்ள தலங்கள் நவராத்திரி நான்காம் நாளில் வழிபடுவதற்கு உரியவை. அருகில் உள்ள பெருமாள் கோயிலுக்குச் சென்று தாயாரை வழிபட்டாலே போதும். குறைவிலா நிறைவும் அளவிலாத செல்வமும் கிட்டும்.

**வைஷ்ணவி வழிபட்ட நந்திமங்கை**

சப்த மாதருள் நான்காம் நாளில் வைஷ்ணவிதேவி வழிபட்ட தலம் நந்திமங்கை. இந்நாளில் நல்லிச்சேரி என்று பெயர். புள்ளமங்கையில் உள்ள பரகேசரிவர்மன் காலக் கல்வெட்டு ஒன்று இவ்வூரை நடுவிற் சேரி எனக் குறிப்பிடுகின்றது. இங்கே காளபிடாரி கோயில் இருந்ததாக அந்தக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் கோயில் இந்நாளில் இல்லை. பிடாரித் தோப்பு என்ற பெயரில் பகுதி மட்டுமே உண்டு. அகிலாண்டேஸ்வரி உடனான ஜம்புநாதேஸ்வரர் கோயில் நல்லிச் சேரியில் உள்ள ஆலயம். தஞ்சைச் சாலையில் மாத்தூர் வளைவில் இருந்தும் பசுபதி கோயிலில் இருந்தும் நல்லிச் சேரிக்குச் செல்லலாம். நவராத்திரி நான்காம் நாளில் வழிபட வேண்டிய தலத்தை சதுர்த்தி திதிகளிலும் வழிபடலாம்.

**நந்தி பெற்ற பேறு**

கயிலை மலை சிவபெருமான் உறையும் மலை. கயிலைக் கடவுளைத் தரிசிக்க விரும்புவோர் திருநந்திதேவரின் இசைவு பெறுதல் அவசியம். பிரதோஷ காலத்தில் மட்டுமன்றி எல்லா நாட்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநந்திதேவர் வழிபாடு முக்கியமானது. நந்தியெம் பெருமான் திருவையாற்றில் அவதரித்ததும் சுயம்பிரகாசையை மணந்ததும் சபேசர் புராணத்தில் உள்ள தகவல்கள். திருநந்திதேவர் அகிலாண்டேஸ்வரி உடனான ஜம்புநாதேஸ்வரரை வழிபட்டார். ஐந்தெழுத்தினை இடைவிடாது ஓதித் தவமிருந்தார். இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பது ஸ்தல மான்மியம்.

நந்திதேவர் வழிபட்டமையால் இத்தலம் நந்திமங்கை எனப்பட்டது. நந்திதேவர் வழிபடும் நிலையில் புடைப்புச் சிற்பமும் இங்கு உள்ளது.

**ஆலயச் சிறப்புக்கள்**

அளவால் சிறியது, சிறந்த முறையில் பராமரிக்கப் பெறும் ஆலயங்களில் ஒன்று. கோபுரம் இல்லை. சாலாத்வார வாயில். இடப்புறம் இரட்டைப் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். அம்மன் தெற்கு நோக்கி இருக்கிறார். மேற்கு நோக்கி சுவாமி சந்நிதி. வவ்வால் ஒட்டி மண்டபத்தை அடுத்து அர்த்த மண்டபத்துடன் சுவாமி சந்நிதி அமைந்துள்ளது. 2006இல் திருப்பணி கும்பாபிஷேகம் நடைபெற்ற ஆலயம் இது.

**அரிய திருமேனிகள்**

சுவாமி சந்நிதி அர்த்த மண்டப வெளிப்புறத்தில் அமைந்துள்ள விஷ்ணு, துர்க்கை அழகிய திருவுரு. மிகத் தொன்மையான திருவுருவம். சுவாமி சந்நிதி எதிரில் சூரிய சந்திரர் உள்ளனர். எட்டுக் கைகளுடன் அமைந்துள்ள விஷ்ணு, துர்க்கையையும் சனீஸ்வரனையும் வைரவரையும் வழிபடக் கிரகதோஷங்கள் அனைத்தும் விலகுதல் உறுதி. தட்சிணாமூர்த்தி சந்நிதிக்கு எதிரே உள்ள ஸ்ரீ ஆதிசங்கரர் பின்னிணைப்பாவார். நாகமரம் என்றும் அரிய மரம் ஸ்தல விருட்சமாகும்.

**திருக்கழல் தரிசனம்**

சிவபெருமானின் திருவடிகளைத் தரிசிப்பது மகாபாக்யம். வைஷ்ணவி வழிபட்ட நந்திமங்கையின் பெருமை அறிந்து பார்வதிதேவி வழிபாடாற்றினாள். அவளுக்கு இத்தலத்தில் சிவபெருமான் திருவடிகளை திருக்கழல்களைத் தரிசிக்கும் பேறு கிட்டியது என்பது ஸ்தல மான்மியம். பதினான்கு முதல் பத்தொன்பது வரையிலான மங்கைப் பருவத்தைச் சேர்ந்த பெண்கள் தவறாமல் தரிசிக்க வேண்டிய தலமாகும்.

நந்திக்கும், உமாதேவிக்கும், வைஷ்ணவிதேவிக்கும் அருளிய நல்லிச்சேரி ஜம்புநாதர் நான்காம் திதி நாளில் சிறப்பாக நவராத்திரி நாளில் வழிபடுவதற்குரியவராவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதுர்த்தி திதி - சில குறிப்புகள்**

சதுர்த்தி திதி - விநாயக வழிபாட்டுக்குரிய திதி நாள். சதுர்த்தியில் செய்யும் வழிபாடு சந்தோஷமான வாழ்க்கை தரும். சங்கடங்களைப் போக்கும். நவராத்திரி சதுர்த்தி நாளில் மகாலட்சுமியை வழிபட வேண்டும். நவராத்திரி சதுர்த்தி அன்று சப்தமாதருள் ஒருத்தியான வைஷ்ணதேவி நந்திமங்கை என்ற தலத்தை வழிபட்டாள். நவராத்திரி நான்காம் நாள் அல்லது இயன்ற சதுர்த்தி திதி நாளில் இத்தலத்தை வழிபடுவது நல்லது.

ஒரே நாளில் சப்தமங்கை தலங்கள் எல்லாவற்றையும் வழிபட விரும்புவோர் 7ஆவது திதி நாள் அல்லது வெள்ளிக்கிழமைகளில் வழிபடலாம்.

**வடக்கே இது வழக்கம்**

நவராத்திரி நாட்களில் இடையில் உள்ள மூன்று நாட்களில் மகாலட்சுமியை வழிபடுவது தமிழ்நாட்டு வழக்கம். வங்காளத்தில் எல்லா நாட்களிலும் துர்க்கா பூஜை தான். வடக்கே குறிப்பாக உத்தரப் பிரதேசத்தில் நவராத்திரி நாட்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வடிவில் பார்வதிதேவியை வழிபடுவர். நான்காம் நாளுக்குரிய பார்வதி தேவியின் வடிவம் கூஷ்மாண்டா எனப்படும். காசியில் நான்காம் நாளில் கூட்டம் அலை மோதும்.

**பிரார்த்தனை எல்லோருக்கும் உதவட்டும்**

பலர் கோவிலுக்குச் சென்றால், தனக்காகவும், தனது குடும்பத்துக் காகவும் மட்டுமே வேண்டிக்கொள்வார்கள். மிகச் சிலர்தான் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று தாராள மனதுடன் வேண்டிக் கொள்வார்கள். வள்ளலார் ராமலிங்க அடிகளாரும் இதே கருத்தையே வலியுறுத்துகிறார். எல்லோரும் பிரார்த்தனை செய்யும்பொருட்டு ஒரு பாடலையும் அவர் எழுதி இருக்கிறார். அந்தப் பாடல்

**"பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருட்**
**ஜோதி அளித்தென் உள்ளகதே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்**
**நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை**
**ஓதி முடியாது என்போல் இவ்வுலகம் பெறுதல் வேண்டுவனே...."**

"நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது உங்களுக்காக மட்டுமின்றி, எல்லோருக்காகவும் வேண்டிப் பிரார்த்தனை செய்யுங்கள். இந்த உலகம் எல்லாம் வாழும்படி வேண்டுங்கள். இப்படி பிரார்த்தனை செய்வதால், தனியொரு மனிதனுக்கு வேண்டியவையும், அதில் அடங்கிவிடுகின்றன" என்கிறார் வள்ளலார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகரின் மகிமை

பிள்ளையாரின் முகம் யானை முகமாகக் காட்சியளிப்பதற்கு என்ன காரணம் என்பதை சிவபுராணத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். மிகுந்த பாசத்தோடு மனித உருவத்தை உருவாக்கினாள். பார்வதிதேவி. சிவகணங்களுடன் ஏற்பட்ட போரில் பிள்ளையாரின் தலை வெட்டுண்டு கிடந்ததாக சிவபுராணத்தில் கூறப்படுகிறது.

பார்வதிதேவி மகனான பிள்ளையாருக்கு இரண்டு சக்திகளைக் கொடுத்துப் போர் புரியச் செய்தாள். பிள்ளையார் சிவகணங்களோடு கடுமையாகப் போரிட்டார். விஷ்ணு தனது சக்தியால் பிள்ளையாருக்கு துணையாக இருந்த இரண்டு சக்திகளை மறைத்தார். இவ்வேளையில் பிள்ளையார் மயக்கமடையப் பிள்ளையாரின் தலை துண்டிக்கப் பட்டது. தனது மகனின் தலை துண்டிக்கப்பட்டதை அறிந்து பார்வதி தேவி மிகுந்த கோபத்துடன் பல்வேறு சக்திகளை ஏவி தேவர்களையும், முனிவர்களையும் அழிக்கக் கூறினாள். பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிவதைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் பார்வதி தேவியை வழிபட்டு மன்னிக்கும்படி கூறினார்கள். ஆனால் பார்வதி தேவியோ தனது மகன் உயிருடன் வந்தால் தான் தனது கோபத்தை நிறுத்துவதாகக் கூறினாள்

பார்வதிதேவி கூறியதைக் கேட்ட சிவபெருமான் தனது கணங்களையும் படைகளையும் கூப்பிட்டு வடக்குத் திசை நோக்கி பயணம் செய்யுமாறும் அப்போது எதிரில் தெரியும் ஜீவராசியின் தலையைக் கொய்து வருமாறு கட்டளையிட்டார். வடக்கு நோக்கிப் பயணம் செய்தனர். சிவகணங்கள் அவர்களுக்கு எதிரில் ஒற்றைத் " தந்தம்" உள்ள யானை ஒன்று வந்தது. உடனே அதன் தலையைக் கொய்து சிவபெருமானிடம் அளித்தனர்.

சிவகணங்கள் கொடுத்த தலையை தலை துண்டிக்கப்பட்டிருந்த பிள்ளையாரின் உடலில் பொருத்தி உயிர் கொடுத்தார். பார்வதிதேவி தன் மகனைக் கண்டு மகிழ்ந்தார். பின்பு தேவர்களும், முனிவர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரைப் போற்றி மகிழ்ந்தனர். நாம் விநாயகர் முன் வலது காதினை இடது கைகளாலும் இடது காதினை வலது கைகளினாலும் பிடித்துக் கொண்டு தோப்புக் கரணம் போடுவதில் அடிப்படைத் தத்துவம் என்ன தெரியுமா?

நமது அகந்தையும் ஆணவமும் குறைந்து பரம்பொருளின் வடிவமாகக் காண்கின்ற மனப்பக்குவத்தை அடைந்து விடுகிறோம் என்பதை உணர்த்தவே தோப்புக்கரணம் போடுகிறோம். விஞ்ஞான ரீதியாகவும் தோப்புக்கரணம் போடுவதில் உள்ள பலன் விளக்கப்பட்டுள்ளது. காதுகளைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து எழுந்து தோப்புக் கரணம் போடுவதால் காதுகளிலும் கை விரல்களிலும் தொடர்புடைய பிட்யூட்டரி, பீனியல் போன்ற சுரப்பிகளையும், மூளை நரம்பு, கழுத்து நரம்பு, முதுகெலும்பு, மூட்டுப் பகுதிகள் ஆகியவை களுக்கு ஒருவித அமுக்கத்தை உண்டாக்கி சீரான நிலையில் இயங்கச் செய்கிறது. மனிதனுக்கு "தான்" என்னும் அகந்தை தேங்காய் ஓட்டி னைப் போல மிகவும் உறுதியான நிலையில் உள்ளது. தேங்காயை உடைத்து சிதறும் போது சுவையான நீரும், வெண்மையான தேங்காயும் இருப்பது போல மனிதனின் ஆணவம் அகலும்போது ஞானமும் முத்தியும் ஏற்படுகிறது.

விநாயகரை முதலில் வழிபட்ட பின்புதான் எந்தச் செயலையும் தொடங்க வேண்டும். எந்தவொரு பூஜையைச் செய்யத் தொடங் கினாலும் விநாயகர் பூஜை செய்த பின்பே மற்றத் தெய்வங்களுக்குப் பூஜை செய்ய வேண்டும். விநாயகரை வழிபட்ட பின்னர் தான் தெய்வங்களுக்கும் சங்கடங்கள் நீங்கியதாகப் புராணங் களில் கூறப்படுகிறது. எல்லாத் துன்பங்களையும் விநாயகர் வழிபாட்டால் நீக்கி விடலாம் விநாயகரை வழிபட்டால் கல்வி வளத்தையும் செல்வத்தையும் அள்ளி தருவார்.

விநாயகர் அகவல், விநாயகர் கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்வதால் பலவித நன்மைகளும் உண்டாகும். விநாயகர் வழிபாட்டுக்கு சதுர்த்தி திதி மிகவும் உகந்த நாளாகும். வளர்பிறையிலும் தேய்பிறையிலும் வரும் 4ஆவது திதி நாளை சதுர்த்தி எனக் கூறுவர். தேய்பிறையில் வரும் சதுர்த்தி சங்கடஹர சதுர்த்தியாகும். வளர்பிறையில் வரும் சதுர்த்தி விநாயகருக்கு சிறப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரை வழிபடும்போது எருக்கம் பூவினால் மாலை தொடுத்து விநாயகருக்கு அணிவிப்பது தொன்று தொட்டு வரும் வழக்கம். எருக்கஞ் செடியின் வேர், தண்டு, பட்டை, இலை, பூ, காய், மற்றும் பால் ஆகிய அனைத்தும் பல மருத்துவ குணம் உள்ளது. எருக்கஞ் செடியில் ஈயச் சத்தும், பாதரசச் சத்தும் அடங்கியுள்ளது. விஷத் தன்மையைப் போக்கும் குணம் கொண்டது.

நல்ல காரியம் ஒன்றினைத் தொடங்கும் போதும் வழிபாட்டின் போதும் மஞ்சளில் பிள்ளையாரைப் பிடித்து வைத்து அதன் அருகே அறுகம்புல் வைத்து வழிபடுவது வழக்கம். தொடங்கவுள்ள காரியம் நல்ல முறையில் நிறைவுபெற மஞ்சளில் விநாயகர் செய்து வணங்கினால் காரியம் வெற்றி பெறும்.

மஞ்சள் கிருமிகளைக் கொல்லும் சக்தி வாய்ந்தது. மஞ்சள் நிறம் மங்கலத்தைக் குறிக்கும். விநாயகருக்குப் படைக்கும் நிவேதனப் பொருட்கள் மோதகம் என்ற கொழுக்கட்டை சிறப்பு வாய்ந்தது. கொழுக்கட்டை விநாயகருக்குப் பிடிக்கும் என்பது ஐதீகம். பிரம்மம் இந்த அண்டத்தில் எங்கும் நிறைந்துள்ளது என்பதை உலக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் கண்டம் என்ற அர்த்தத்தில் வெள்ளை மாவினால் செப்பு செய்து பிரம்மம் எல்லாவிடங் களிலும் பூரணமாக நிறைந்துள்ளது என்ற அர்த்தத்தில் உள்ளே அமிர்தமயமான பூர்ணத்தை வைத்து வசிஷ்டரிடம் அளித்து விநாயகருக்குப் படைக்குமாறு கூறினார். அருந்ததி தனது தத்துவத்தை உணர்ந்து அதை உலகுக்கு வெளிப்படுத்தும் வகையில் தயாரித்து அளித்த மோதகத்தை மனமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். உலக மக்கள் காணும் வகையில் தத்துவம் நிறைந்த மோதகத்தைத் தனது கையில் வைத்திருக்கின்றார்.

ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் வீற்றிருக்கும் பிள்ளை யாரை வழிபட வருபவர்கள் குளித்துவிட்டு விநாயகரை வழிபடும் பொழுது இயற்கையாக கிடைக்கும் ஓசோன் நிறைந்த காற்றைச் சுவாசிப்பதால் உடல் ஆரோக்கியத்தை உண்டாக்குகின்றது. மரங்களுக் கெல்லாம் அரசமரம் அரசன் என்ற பெருமை மிக்கது. அரசமரத்துப் பிள்ளையாரைத் தினமும் சுற்றி வரும்போது உடல் நலம் பெறுகின்றது. அரசமரத்தில் பல மருத்துவத் தன்மைகள் அடங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட ஆண்டுகளாகக் குழந்தைப் பாக்கியம் இல்லாத பெண்கள் அரச மரத்தைச் சுற்றி வந்தால் குழந்தைப் பாக்கியம் தரும் சக்தி மிக்க மரமாக அரசமரம் கருதப்படுகின்றது. அரச மரத்திலிருந்து உண்டாகும் காற்று சுவாசத்தின் வழியே உட்புகுந்து கர்ப்பப்பை நோய்களைக் குணப்படுத்துகின்றது. மரத்தினைச் சுற்றி வரும்போது நாளமில்லாச் சுரப்பிகள் தூண்டப்படக் காரணமாக அமைகிறது. மலட்டுத்தன்மை உள்ள பெண்களின் சூலகம் தூண்டுவதால் குழந்தைப் பாக்கியம் பெறுகின்றார்கள்.

ஒவ்வொரு தமிழ் வருடத்திலும் ஆவணி மாதம் வளர்பிறையில் நான்காம் நாள் விநாயகர் சதுர்த்தி விரதம் கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி குறித்த கதைகள் பல்வேறு வகையில் வழங்கப்படு கின்றது. பார்வதிதேவி தட்சனின் மகள் தாட்சாயணியாக அவதரித்து சிவபிரானைத் திருமணம் செய்து கொண்டாள். தனது மகள் தாட்சாயணியைப் பார்ப்பதற்காக தந்தை தட்சன் வந்தான். அப்போது மருமகனான சிவபிரான் எழுந்து நின்று வரவேற்கவில்லை என்று கோபம் கொண்ட தட்சன் சிவனை விடத் தான் உயர்ந்தவன் என்பதை நிரூபிக்க வேள்வி நடாத்தினான். அனைவரையும் அந்த வேள்விக்கு அழைத்த தட்சன் சிவபிரானையும் தாட்சாயணியையும் அழைக்க வில்லை. அழைப்பு விடுக்காமல் இருப்பினும் பாசத்தால் கட்டுண்ட தாட்சாயணி தந்தை நடாத்தும் வேள்விக்குச் சென்றாள்.

வேள்வியின் போது அவரது தாயும் தந்தையும் தாட்சாயணியை வேள்வி நடக்குமிடம் சுடுகாடாக மாறட்டும் என்று சாபமிட்டாள். தாட்சாயணி நடந்தவற்றை சிவபெருமானிடம் கூறியதும் சிவன் ருத்ர தாண்டவமாடி வீரபத்திரனிடம் சென்று அனைவரையும் கொன்று விட்டு வருமாறு கட்டளையிட்டார். வீரபத்திரனோ அனைவரையும் கொன்று விட்டுத் திரும்பினார். கோபம் தணிந்த சிவபெருமான் அனைவருக்கும் உயிர் உண்டாக்கி மன்னிப்பு அளித்தார்.

அகம்பாவத்தால் சுயபுத்தியை இழந்த தட்சனின் தலையை மாற்றி ஆட்டுத்தலையை அவனது உடலின் மீது பொருத்தினார் சிவபிரான். பார்வதிதேவி பர்வதராஜனின் மகளான வேறு உருவத்தில் அவதரித் தார். மணப்பருவத்தை அடைந்த பார்வதிதேவி பர்வதராஜனிடம் சிவபிரானைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும் அந்த எண்ணம் ஈடேற, தான் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுரையையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பர்வதராஜா பார்வதிதேவியிடம் விநாயகரின் "சதுர்த்தி விரதத்தைக் குறித்து கூறினார். நினைத்தது நடக்க விநாயகரின் சதுர்த்தி விரத பூஜை சிறப்பானதாகும். தடைப்படும் காரியங்கள் தடங்கல் இன்றி நிறைவேறும். ஆவணி மாதம் வளர்பிறையில் வரும் 4ஆம் நாள் விநாயகர் சதுர்த்தி விரதம் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். பார்வதி தேவி, தனது தந்தையார் கூறியபடியே விநாயகர் சதுர்த்தி விரதத்தைக் கடைப்பிடித்து சிவபெருமானைத் திருமணம் புரிந்து கொண்டார்.

**ஷோடச (16) திருநாமங்கள்**

| | | |
|---|---|---|
| ஓம் | சுமுகாய | நம |
| ஓம் | ஏகதந்தாய | நம |
| ஓம் | கபிலாய | நம |
| ஓம் | கஜகாணகாய | நம |
| ஓம் | லம்போதராய | நம |
| ஓம் | விகடாய | நம |
| ஓம் | விக்னராஜாய | நம |
| ஓம் | கணபதி பதயே | நம |
| ஓம் | தூமகேதவே | நம |
| ஓம் | கணாத்யட்சாய | நம |
| ஓம் | பாலசந்திராய | நம |
| ஓம் | கஜநநாய | நம |
| ஓம் | வக்ரதுண்டாய | நம |
| ஓம் | சூர்ப்பகர்ணாய | நம |
| ஓம் | ஹேரம்பாய | நம |
| ஓம் | ஸ்கந்த பூர்வஜாய | நம |

**விநாயகரின் ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களைக் குறிக்கிறது.**

| | | |
|---|---|---|
| அங்குசம் | - | அழித்தல் |
| பாசம் | - | படைத்தல் |
| மோதகம் | - | அருளல் |
| எழுத்தாணி | - | காத்தல் |
| தும்பிக்கை | - | மறைத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவிலூர் தபோவனம்

**குருவின் துணை இல்லாமல் இறைவனை அறிவது இயலாது** என்று சீக்கிய வேதாகமம் கூறுகின்றது. " என்னையே ஒரே புகலிடமாகக் கருதி வாழும் என் பக்தர்களுடன் எனது கல்லறையே பேசும். அவர்களுடன் நடமாடுவேன். கல்லறைக்குள் இருந்து கொண்டே வீரியத்துடன் செயல் புரிவேன்" என்றார் ஷீர்டி சாய்பாபா.

வடக்கே ஓர் ராமகிருஷ்ண பரமஹம்சர், ஆந்திராவில் பொத்த லூரி வீரப்ரம்மையகாரு, தமிழகத்தில் பூண்டி மகான், வள்ளலார் போன்ற மகான்கள், சித்தர் பெருமக்கள் காட்சியளித்து வருகின்றனர். பாரத கண்டம், ஒரு புண்ணிய பூமி. இமயம் முதல் குமரி வரை எத்தனையோ சித்தர்கள் வாழ்ந்தனர்; வாழ்கின்றனர். ஜீவசமாதி ஆகியும் கூட காட்சியளிக்கின்றனர். தமிழகத்தில் சித்தர்கள் நடமாட்டம் உள்ள தலம் திருவண்ணாமலை. "தபோவனர்களை வா என்று தன்னிடம் அழைத்துக் கொள்ளும் மலை திருவண்ணாமலை" என்கிறார் குகை நமசிவாயர்.

எங்கே பிறந்தார், என்ன குலம், எத்தனை வயது என்று தெரியாத நிலை. ஷீர்டியில் வந்து தனது இருப்பிடத்தை ஏற்று ஜீவசமாதியானவர் சாய்பாபா. தமிழகத்தில் புவனகிரியில் பிறந்து, துங்கபத்ரா நதிக்கரையில் தவமிருந்து, ஜீவ சமாதியானார். ஸ்ரீ ராகவேந்திரர். அந்த இடம் மந்த்ராலயம். அந்த வரிசையில் இன்னொரு மகான். அவர் ஞானானந்தகிரி சுவாமிகள்.

"திருக்கோவிலூர் தபோவனம்" என்றழைக்கப்படும் அவர் அருள்புரிந்த ஆன்மீக பூமி. வட கன்னட மாவட்டத்தில் பிறந்து இளமையிலேயே ஆன்மீக நாட்டம் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியவர் சுப்ரமணியம். கால் போன திக்கிலே நடந்தார். வடக்கு நோக்கிப்புறப்பட்டார். அப்போது அவருக்கு வயது பதினைந்து. இதயத்தில் பூர்ண வைராக்கியம். யாத்திரையாக அவர் சென்று கொண்டிருந்த போது ஒரு தெய்வீக ஜோதி வானில் கண்டார். ஜோதியைப் பின் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னாளில் அந்தச் சிறுவன் மகானாகப் போவதை அறிந்தோ என்னவோ அந்த ஜோதி அந்த மாமனிதரை காடு, மலை, கிராமங்கள், ஷேத்திரங்கள் வழியாக அழைத்துச் சென்றது. பண்டரிபுரம், வந்தது. ஜோதி வழிகாட்ட, தன்னை நாடி வந்த பாலகனை ஸ்ரீ பாண்டுரங்கன் அழைத்துக் கொண்டான் போலும்! அங்கே,

ஆதிசங்கரர் உருவாக்கிய உத்திர நாட்டின் மடத்தின் தலைவர் ஸ்ரீசிவரத்னகிரி பீடாதிபதி பண்டரிபுரத்தில் முகாமிட்டிருந்தார். பாலகன் சுப்ரமணியன், சுவாமிகள் தங்கியிருந்த முகாமிற்குப் பரவசம் பொங்க ஓடினான். ஆச்சார்ய சுவாமிகளின் பாதங்களில் விழுந்து நமஸ்கரித்து, கரம் கூப்பித்தொழுதான். கண்களில் தாரை, தாரையாகக் கண்ணீர்! பாலகனின் ஆன்மிகத் தேடலை சுவாமிகள் புரிந்து கொண்டார். அடைக்கலம் தந்து ஏற்றுக்கொண்டார். குருநாதர் மடத்தில் சுப்ரமணியன் வாசம் செய்ய அனுக்கிரகிக்கப்பட்டான்.

"பரக்ஞான பிரம்மச்சாரி", என சுப்ரமணியனுக்கு சுவாமிகள் பெயர் சூட்டி, சாஸ்திரங்கள் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார். பல ஆண்டுகள் குருகுல வாசம். வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, பிரம்மசூத்திரம் இவற்றைக் கற்றுத் தேர்ந்ததுடன், சிஷ்யர்களில் சிறந்தவனாகவும் விளங்கினான்! குரு மகராஜின் சமாதிகாலம் நெருங்கியது. சுப்ரமணியனுக்குத் தீட்சை அளித்து வேத விதிப்படியான துறவறம் மேற்கொள்ள வைத்தார். மகாவாக்ய உபதேசமும் தந்து,"ஞானானந்தகிரி" என தீட்சாநாமமும் தந்தார் சிவரத்னகிரி சுவாமிகள்.

குரு சமாதியான பின்பு, ஞானானந்தர் இமயமலை சென்று விட்டார். ஷீர்டியில் பாபாவைத் தரிசித்தார் என்று சுவாமிகள் வரலாறு தெரிவிக்கின்றது. சுவாமிகள் இமயத்தில் பனிக்குகைகளில் பலகாலம் தவமியற்றி உள்ளார். பிற்காலத்தில் கதிர்காம சுவாமிகள் என்று தமிழக மக்கள் போற்றிய அந்தண பிரம்மச்சாரியின் தொடர்பு நேபாளத்தில் கிடைத்தது. இருவரும் நடந்தே திபெத், பர்மா, இலங்கை நாடுகளுக்கு விஜயம் செய்து தவமியற்றியுள்ளார்கள். இலங்கையில் வாழ்ந்த போது தமிழைக் கற்றுக்கொண்டதாக சுவாமிகள் வரலாறு கூறுகின்றது.

தமிழகத்திற்கு வந்த சுவாமி ஞானானந்தர் சில மாதங்கள் வடலூரில் ராமலிங்க அடிகளுடன் தங்கியிருந்துள்ளார். காலையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு தயாரித்து வைத்த பின்பு, வள்ளலார், தமது யோக சக்தியினால் வானவெளியில் சஞ்சரித்து கேரளாவில் உள்ள ஒட்டபாலம் சென்று சத்தியஞான கட்டிட வேலைக்காக மரங்கள் வாங்க ஏற்பாடு செய்து விட்டு, மாலையில் திரும்பி வருவார் என்று ஞானானந்தகிரி சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலைக்கு இரவோடு இரவாக நடந்து சென்று விருட் பாட்சி குகையில் ரமண மகரிஷியைச் சந்தித்து நீண்ட நேரம் உரையாடி விட்டுத் திரும்புவார் ஞானானந்தகிரி சுவாமிகள். ரமணர், ஞானானந்த கிரி சுவாமிகள் பற்றி இப்படிச் சொல்கிறார்; "இருவருக்கும் நாம ரூபங்கள் வேறு. ஆனால், இருவரும் ஒருவரே"

தமிழகத்தில் பல ஊர்களில் சஞ்சரித்து இறுதியாக திருவண்ணா மலையை அடுத்து திருக்கோவிலூரைச் சார்ந்த தென்பெண்ணை ஆற்றின் வடக்குப்பகுதியைத் தேர்ந்தெடுத்து அதற்குத் தபோவனம் என்று பெயரிட்டு, அங்கேயே தமது சமாதிகாலம் வரை தங்கினார்.

பல அற்புதங்களைச் செய்து தம்மை நாடி வந்த பக்தர்கள் குறைகளைத் தீர்த்தும், தீராத நோய்களையும் சித்த மருத்துவ முறையில் குணப்படுத்தியும் உள்ளார். அவர் வாழ்ந்த தபோவனம் பூலோக சொர்க்கம் மட்டுமல்ல; பக்தர்கள் நினைத்ததைத் தரும் கற்பக விருட்சமாக விளங்குகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ போதகாசிரியருக்கு
வஸ்திரஉபசாரம் வழங்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய விக்கிரகங்கள்



சனீஸ்வரன் சந்நிதி



நாகதம்பிரான் சந்நிதி



மஹா விஷ்ணு சந்நிதி



மஹா லக்ஷ்மி சந்நிதி



முருகன் சந்நிதி



வைரவர் சந்நிதி



சண்டேஸ்வரர் சந்நிதி



வீரபத்திரர் சந்நிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவம் பறக்கும் தோஷங்கள் அகலும்

பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காது என்பது பழமொழி. பொய்யாமையைக் கடைப்பிடித்தால் பிற அறங்களைக் கூடச் செய்ய வேண்டியதில்லை என்பார் வள்ளுவர். பஞ்சமா பாதகங்களைக் காட்டிலும் கொடிய பாவம் பொய் பேசுவது என்கிறார் செஞ்சடை வேதிய தேசிகர் என்ற புலவர்.

"நான் உம் சடைமுடியைத் தரிசித்தேன்" என்று சிவ சந்நிதானத்தில் பிரம்மன் பொய் பேசினான். விளைவு என்ன ஆயிற்று தெரியுமா? அவன் பலம் குன்றியது. செயல்களில் சோர்வு சேர்ந்தது. படைப்புத் தொழிலில் தடுமாற்றம் நேர்ந்தது. தக்கவர் வழிகாட்டத் தாலவனத்தை அடைந்தான். தாலவனம் - திருப்பனந்தாள். இங்குள்ள செஞ்சடையப்பர் கோயிலுக்கருகில் பொய்கைக்குளம் எனப்படும் பிரமதீர்த்தத்தை அமைத்தான். அதில் நீராடி சிவ வழிபாடு செய்தான். அதே நேரத்தில் இந்திரனுடைய வெள்ளை யானையான ஐராவதமும் வழிபட்டது.

எனவே பிரம்மன் யானையேறா மாடம் கொண்ட புதுக்கோயில் அமைத்து அதனையும் வழிபட்டான். அஜனீச்வரம் அதன் பழைய பெயர். ஊருடையப்பர் கோயில் என்று இந்நாளில் இதற்குப் பெயர். பிரம்மனின் வழிபாட்டுக்கு இரங்கிச் செஞ்சடையப்பர் ஆவணி மாதம் அமாவாசை நாளில் பிரம்மனுக்குச் சாப விமோசனம் தந்தார். வரும் 15ஆம் தேதி ஆவணி அமாவாசையில் காலை 9 மணியளவில் பிரம்ம சாப விமோச்சன திர்த்தவாரி நடக்கும்.

பின் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பால் குடம் எடுத்து அஜனிச்வரரை அபிஷேகிப்பர். இது இங்குமட்டும் நடக்கும் விழா. பிரம்மன் நவக்கிரகங்கள் அனைத்தும் உருவாகக் காரணகர்த்தா. இச்சம்பிரதாய விழாவில் பங்கேற்கக் கிரக தோஷங்கள் விலகும். பொய் சொன்ன தோஷங்கள் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்க அப்பாவை 4 நாளாகக் காணவில்லை. எங்களுக்குப் பயமாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டோம். அகத்தியர்தான் அவர் இருக்கும் இடத்தை அடையாளம் காட்ட வேண்டும்" என்று வந்தார்கள் 2 இளம் வாலிபர்கள். அவர்களது முகத்தில் கடுமையான வாட்டம், தூக்கமும் இல்லை, குளிக்கவும் இல்லை என்று தோன்றியது.

"போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்தீர்களா?"

"கொடுத்தோம்".

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"சொந்தக்காரர், நண்பர்கள் வீட்டில் நன்றாகத் தேடிப் பாருங்கள். ஆஸ்பத்திரிக்கும் சென்று பாருங்கள். டி.வி. யில் விளம்பரம் கொடுத்துப் பாருங்கள். நாங்களும் எங்கள் பங்கிற்குத் தேடிப்பார்க்கிறோம் என்று சொன்னார்கள். இருந்தாலும், அகத்தியரிடம் ஒரு வாக்குக் கேட்டுப் போனால் திருப்தியாக இருக்குமே என்று வந்திருக்கிறோம்" என்று முடித்தார்கள். "அகத்தியர் ஒரு சித்தர். வழி காட்டுவார். அவ்வளவுதான். நான் உங்களுக்காக அருள்வாக்குக் கேட்டுப் பார்க்கிறேன். நாடியில் நல்ல செய்தி வந்து உங்கள் தந்தையும் கிடைத்து விட்டால் எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் அகத்தியர் சொல்லியும் நடக்காமல் போனால் அதோடு விட்டுவிடுங்கள். அகத்தியரையோ என்னையோ திட்டாதீர்கள்." என்றேன்.

"நாங்கள் முழுமையாக நம்புகிறோம்; இல்லையென்றால் காக்கிநாடாவில் இருந்து இங்கு வந்திருப்போமா? என்று ஏக குரலில் நல்ல தமிழில் சொன்னார்கள்." அவர்களுடைய நம்பிக்கை ஜெயிக்க வேண்டும் என்பதற்காக அகத்தியர் நாடியைப் புரட்டினேன். "இவர்களது தந்தை காக்கிநாடாவைச் சேர்ந்தவன் என்றாலும், ஒரு புகழ்பெற்ற வைணவக் கோவிலின் நிர்வாக அதிகாரியாக வேறு இடத்தில் பணியாற்றி வந்தான். மிகவும் நேர்மையானவன். இருப்பினும், குடும்பத்தை விட்டுப் பிரிந்து 13 வருடங்களாக தனியாகக் கோவிலைச் சேர்ந்த வளாகத்தில் இருந்து வந்தான். அந்தக் கோவிலுக்கு அரசு துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி சமீபத்தில் நியமிக்கப்பட்டான். இவன் அரசியல்வாதி. இதற்கு முன்பு பல கோவில்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தவன். துணிச்சல் மிக்கவன். பணத்திற்காக எதையும் செய்யக்கூடியவன். அந்த அதிகாரி இவர்களது தந்தையிடம் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டியலில் 30 சதவீதம் பங்கு கேட்டுத் தொல்லை பண்ணினான். இவர்களது தந்தை அதிகாரிக்குச் சிறிதும் மசியவில்லை. இதனால் கோபம் அடைந்த அதிகாரி, தன் அடியாட்களை வைத்து இவர்களது தந்தையை ஒரு பாழடைந்த வீட்டில் வைத்து சித்திரவதை செய்து கொண்டிருக்கிறான். இதுதான் உண்மை" என்று எனக்குமட்டும் முதலில் சொன்ன அகத்தியர், பின்னர் தொடர்ந்தார்....

"உங்கள் தந்தை உயிரோடுதான் இருக்கிறார். எங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறாரோ அதிலிருந்து தென் கிழக்காக இருபது காத தூரம் சென்றால் சிறு கிராமம் வரும். அந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்தால் கிராமத்து சுடுகாட்டுக்குப் பக்கத்தில் ஒரு பாழடைந்த வீடு வரும். அந்த வீட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார். தக்க பாதுகாப்போடு சென்றால் தந்தையை மீட்டு விடலாம். அதற்கு முன்னால் சில பிரார்த்தனைகளைச் செய்து விட்டுச் செல்க. அவசரப்பட்டுச் செல்லாமல் விவேகத்துடன் நடந்து கொள்க. இல்லையெனில், உங்கள் தந்தையை ஒரு மன நோயாளியாகத்தான் கடைசிவரை பார்க்க வேண்டியிருக்கும்" என்று அகத்தியர் சொன்னபோது நானே வியந்து போனேன்.

இந்த வாக்கைக் கேட்டதும் இந்த இளைஞர்களுக்கு ஒரு நிமிடம் கூட இருப்புக் கொள்ளவில்லை. உடனே தந்தையைப் பார்க்கத் துடித்தார்கள். அப்போதுகூட, எதற்காகத் தங்கள் தந்தையை அங்கு அடைத்து வைத்திருக்கிறார்கள் என்று என்னிடம் கேட்கவில்லை. அவர்கள் மிகவும் பதற்றமாகவே காணப்பட்டனர். ஒரு மாதம் வரை அந்த வாலிபர்கள் என்னிடம் வரவில்லை. உள்ளூர எனக்கும்கூட பயம்தான். ஒருவேளை இவர்கள் அந்தக் கிராமத்தை நோக்கிச் செல்ல முடியாமல் ஆகிவிட்டதா? இல்லை... தகுந்த பாதுகாப்போடு செல்லாமல் வசமாக மாட்டிக் கொண்டார்களா? இல்லை... இவர்கள் அந்தக் கிராமத்தை நோக்கிச் செல்வதற்குள் இவர்களது தந்தையை வேறு எங்கேயாவது இடம் மாற்றிவிட்டானா? அந்த அரசியல்வாதி என்று எனக்குள் நானே கற்பனையில் நினைத்துக் காத்திருந்தேன்.

எதற்கும் அகத்தியரிடம் அவர்களைப்பற்றியும், அவர்களது தந்தையைப் பற்றியும் கேட்டுப் பார்க்கலாமே என்று தன்னார்வத்தால் நாடியைப் புரட்டினேன். "அரசியல்வாதியான அந்த அதிகாரி, தனக்குக் குறுக்கே நின்ற நேர்மையான அதிகாரியை ஒளித்துவைத்து மிரட்டிக் கொண்டிருந்தாலும், தனக்கு வேண்டிய சில அடியாட்களோடு அனுமன் கோவில் உண்டியலையும் நரசிம்மர் சந்நிதிக்கு முன்பு வைத்திருந்த உண்டியலையும் ஸ்ரீ ராமர் கோவில் உண்டியலையும் உடைத்து, அதில் கிடந்த ஏராளமான தங்க, வைர நகைகளையும், பணத்தையும் சுருட்டி விட்டான்." பொதுமக்கள் தன்னைச் சந்தேகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படக்கூடாது என்பதற்காக, நிர்வாக அதிகாரி விடுமுறையில் ஊருக்குச் சென்றிருக்கிறார் என்று கதையும் கட்டிவிட்டான். இதைப்பற்றி மேலும் விளக்க இன்னும் பத்து நாட்கள் கழித்துக் கேள்..." என்று துப்பறியும் கதையில் வரும் கிளைமாக்ஸ் போல் சொல்லி விட்டு நிறுத்திக் கொண்டார் அகத்தியர். ஆனால் அந்த நிர்வாக அதிகாரி உயிரோடு பையன்களால் மீட்கப்பட்டாரா? என்பதைப்பற்றி எந்த வார்த்தையும் சொல்லவில்லை. இது எனக்கு ஏமாற்றமாகவே இருந்தது. ஒருவேளை அந்த நிர்வாக அதிகாரி மனநிலை பாதிக்கப்பட்டிருப்பாரோ அல்லது இறந்திருப்பாரோ என்றுதான் நினைக்கத் தோன்றியது.

பத்து நாட்களும் கழிந்தது. அகத்தியர் சொல்வதற்குள் அந்த இளைஞர்கள் வந்து விட்டால் நன்றாக இருக்குமே என்று என் உள்மனம் உறுத்தியது. இதற்கிடையில், நாடி பார்க்கவந்த ஒருவர் தீட்டோடு அகத்தியர் ஓலைச்சுவடியைத் தொட்டுவிட்டதால் 16 நாட்களுக்கு அகத்தியர் அருள்வாக்குக் கொடுக்க மறுத்து விட்டார். அப்போதுதான் காக்கிநாடாவைச் சேர்ந்த அந்த இரு இளைஞர்கள், தங்களது தந்தையையும் அழைத்துக்கொண்டு சந்தோஷமாக என்னிடம் வந்தனர். பரவாயில்லை...அகத்தியர் வாக்கு நல்லபடியாக நிறைவேற்றி விட்டது என்று ஆனந்தப்பட்டேன். அவர்களிடம் நடந்த கதையைக் கேட்டேன். "அகத்தியர் சொன்னபடி பாதுகாப்பாக வேறு சில இளைஞர்களையும் அழைத்துக் கொண்டு அந்தப் பாழடைந்த கிராம வீட்டிற்குப் போனோம். வீட்டிற்குள் எங்கள் தந்தை கை, கால்கள் கட்டிப் போடப்பட்டிருந்தார். தாகத்திற்குக் கூட அவருக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை.

எதுக்காக இந்தச் சித்திரவதை என்று தந்தையை ஆசுவாசப்படுத்தி நிதானமாகக் கேட்டோம். கோவிலுக்கு வந்த புதிய அதிகாரி உண்டியல் பணத்தில் பங்கு கேட்டார். என் தந்தை கொடுக்க மறுத்தார். இவர் இருந்தால் தனக்குக் காரியம் நடக்காது என்று எண்ணி எங்கள் தந்தையை மறைத்து வைத்து உண்டியலைத் திருடிக் கொண்டார் அந்த அதிகாரி. அது மட்டுமல்ல; திருடிய பணத்தைத் தான் எடுத்துக் கொண்டு பழியை என் தந்தையின் மீது போட்டுக் கொண்டிருக்கிறார். இதையறிந்த நாங்கள் முறைப்படி அலுவலக மேலதிகாரிகளிடம் நடந்ததைச் சொன்னோம். காவல்துறையிடமும் புகார் கொடுத் திருக்கிறோம். ஆனாலும் அந்த அதிகாரியின் அரசியல் செல்வாக்கால் எதுவும் நடக்கவில்லை. இதற்கிடையில், எங்கள் தந்தையும் திடீரென்று சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். இதனால் அவருக்கு மன உளைச் சல் ஏற்பட்டிருக்கிறது. இப்போது சற்றுப் பித்துப் பிடித்ததுபோல் ஆகிவிட்டார். டாக்டரிடம் சிகிச்சை செய்து பார்த்தோம். முழுப்பயன் கிடைக்கவில்லை. அகத்தியர் எப்படி எங்கள் தந்தையின் உயிரைக் காப்பாற்றினாரோ, அதேபோல் அவரது மனநிலையைக் குணப்படுத்தித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர வேண்டும். மறுபடியும் அதே கோவிலில் ஒரு நாளாவது நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி நல்ல பெயரோடு வெளி வரவேண்டும் என்று கண்ணீர் மல்கக் கைகூப்பிக் கேட்டனர். அவர்களது தந்தையைப் பார்த்தேன். பித்துப் பிடித்தவர் போல்தான் காணப்பட்டார். பேச்சு எதுவும் வரவில்லை. கண்கள் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தன. "தம்பி, இன்னும் 13 நாட்களுக்குப் பின்புதான் அகத்தியரிடம் வாக்குக் கேட்க முடியும். நிச்சயம் உங்களது பிரார்த்தனை நல்லபடியாக நடக்கும் என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தேன்.
பதினெட்டு நாட்கள் கழிந்தன.

அந்த இரு இளைஞர்களும் வந்தார்கள். அகத்தியர் நாடியைப் புரட்டினேன். "எப்போதைக்கு எப்போது நரசிம்மரின் உண்டியலையும், அனுமானின் உண்டியலையும் உடைத்து நகைகளையும், பணத்தையும் கொள்ளை அடித்தானோ, அன்றைக்கே அந்த அரசியல்வாதி அதிகாரி இன்னும் மூன்று மாதத்தில் பைத்தியமாகி நடுவீதியில் தான் திரிவான். யாருக்காக இவ்வளவு சொத்துக்களைச் சேர்க்கிறானோ அந்த நபரின் ஒரே மகன் விபத்தில் சிக்கிக் காலொன்றை இழப்பான். அல்லது, கடைசிவரை நிரந்தரமாக பேச்சு மூச்சின்றி சவம்போல் படுக்கையில் வீழ்வான். உனது தந்தையின் மூளை நரம்பு மண்டலம் பாதிக்கப் பட்டிருப்பதால் இன்னும் இரண்டு ஆண்டுக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும். முன் செய்த கர்மாவின்படி, உன் தந்தை மீண்டும் அதே கோவிலில் பணிபுரியும் வாய்ப்பு உண்டு. இதற்குச் சிலகாலம் ஆகும். இந்தத் தண்டனையை அகத்தியன் வழங்கவில்லை. அதற்கு அகத்தியனுக்கு அதிகாரமும் இல்லை. எல்லாம் விதி செயல். கோவில் சொத்தைக் கொள்ளையடித்தால் சம்பந்தப்பட்டவர்களது குடும்பம், வாரிசு பிற்காலத்தில் இப்படித்தான் ஆகும். அதிலும் நரசிம்மர், அனுமன் கோவில் உண்டியலில் கை வைப்பவர்களுக்கு இப்படிப்பட்ட தண்டனைகள் நிச்சயம்" என்று சொன்னார் அகத்தியர்.

இந்தச் சம்பவம் நடந்து ஏறத்தாழ 8 ஆண்டுகள் ஆகிறது. எனக்குக் கிடைத்த அந்த தகவலின்படி அரசியல்வாதி அதிகாரி அத்தனை சொத்துக்களையும் இழந்து, மனைவியை இழந்து காக்கிநாடா ரெயில்வே ஸ்டேசனில் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி. சொந்தக்காரர்கள் அனைவரும் கைவிட்ட நிலையில் அந்த அரசியல் வாதி அதிகாரியின் மகன் ஏதோ ஒரு அநாதை விடுதியில் சேர்ந்து நொண்டி, நொண்டி வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். கேட்கவே கஷ்டமாக இருந்தது. மேலும், இந்த அரசியல் வாதியால் பாதிக்கப்பட்ட, சஸ்பெண்டு செய்யப்பட்ட நேர்மையான நிர்வாக அதிகாரி சித்த மருத்துவத்தால் ஓரளவு குணமானதும் அதே வைணவக் கோவிலில் சிலமாதம் பணிபுரிந்து விருப்ப ஓய்வில் சென்று விட்டாராம். இது காலம் தாழ்ந்து நடந்தாலும், அகத்தியர் வாக்கு நிதானமாக வெற்றியடைந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபூர்வ கோலத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

தீண்டா திருமேனியான ஜலநாதீஸ்வரர் கோயில் தக்கோலத்தில் உள்ளது. இக் கோயிலில் அபூர்வ கோலத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி காட்சி தருகிறார். இந்த ஸ்தலம் 3ஆவது குரு பரிகார ஸ்தலமாக விளங்கு கிறது. தலை சாய்த்து உட்கார்ந்த நிலையில் இருக்கும் தட்சிணாமூர்த்தி பக்தர்களின் குறைகளை செவிசாய்த்து கேட்டுத் தீர்த்து வைக்கிறார் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது.

**உத்குடி ஆசனத்தில்**

இக் கோயிலில் கோஷ்டத்தில் யோக தட்சிணாமூர்த்தி இருக் கிறார். இவர் கல்லால மரத்தின் கீழ், இடது காலை மடித்து பீடத்தில் இருத்திக் கொண்டு, வலது காலை கீழே தரையில் வைத்து உத்குடி வீராசன நிலையில் அமர்ந்துள்ளார். ஒரு கையில் ருத்ராட்ச மாலையும், மற்றொரு கையில் அக்னி ஜூவாலையும் உள்ளது. வலது கையில் சின்மய முத்திரை, இடது கையில் புத்தகம் வைத்துள்ளார்.

தலைக்கு மேல் கல்லால விருட்சம் உள்ளது. காலடியில் முனிவர்கள் இல்லை. கீழே காலடியில் நாகம், மான் இருக்கும். ஒரு காதில் மட்டும் குண்டலம் இருக்கிறது. இவர் தலையை இடதுபுறம் சாய்த்து வளைந்த பாவனையில் இருக்கிறார். இந்த அபூர்வ கோலத்தை வேறெங்கும் காண முடியாது.

**நிறம் மாறும் சிவலிங்கம்**

இங்குள்ள மூலவர் ஜலநாதீஸ்வரர் உத்ராயன புண்ணிய காலத்தில் (தை முதல் ஆனி வரை) இளம் சிவப்பு நிறமாகவும், தட்சிணாயன காலத்தில் (ஆடி முதல் மார்கழி வரை) வெள்ளையாகவும் காணப்படுவார். இது போன்ற வித்தியாசமாக நிறம் மாறும். லிங்கத்தைக் காண்பது அபூர்வம். இது மணல் லிங்கம் என்பதால் அபிஷேகம் கிடையாது. மஞ்சள் காப்புதான் சாத்தப்படுகிறது. தீண்டா திருமேனி எனப் பெயர் பெற்ற ஜலநாதீஸ்வரரை யாரும் தொட்டுப் பூஜை செய்வது கிடையாது. இதுவும் இந்தக் கோயிலின் ஒரு தனிச்சிறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடக்கு சந்நிதி அம்பாள்**

சிவன் சந்நிதியில் இருந்து அபிஷேக தீர்த்தம் வெளியேறும் கோமுகை, பூதகணத்தின் முகமாக சிற்ப வேலைப்பாட்டுடன் உள்ளது. வெளிப்பிரகாரத்தில் நின்ற நிலையில் காட்சி தரும் கிரிராஜ கன்னி காம்பாளைத் தரிசித்து விட்டுத்தான் சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்பது ஐதீகம். அம்பாள் சந்நிதியின்அமைவிடமும் விசேஷமே. பௌர்ணமி, அஷ்டமியில் தரிசனம் செய்தால் விசேஷம்.

சிவன் சந்நிதி கோஷ்டத்திலுள்ள துர்க்கை சாந்தமே வடிவமாக அருள் செய்கிறாள். இத்தலத்தை திருவூறல் என நாவுக்கரசரும், சுந்தரரும் பாடியுள்ளனர். இவ்வூரில் ஏழு சிவாலயங்கள், ஏழு விநாயகர் கோயில்கள், ஏழு கிராம தேவதை கோயில்கள் உள்ளன. அமைவிடம் : இக்கோயில் அரக்கோணத்தில் இருந்து 14 கி.மீ. தூரத்திலும், சென்னையில் இருந்து பூந்தமல்லி வழியாக 64 கி.மீ. தூரத்திலும், காஞ்சிபுரத்தில் இருந்து 27 கி.மீ. தூரத்திலும் உள்ளது. ரயில் பயணிகள் அரக்கோணத்தில் இறங்கி, அங்கிருந்து தக்கோலத்திற்குப் பஸ்சில் செல்லலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேக மகத்துவம்

மக்களது சமய வாழ்விலே என்றும் மாறாத பேரின்பத்தை அளிப்பதுடன் வழிபாட்டிற்குரிய உயர் நிலையமாய் விளங்குபவை ஆலயங்கள். ஆலயம் என நாம் குறிப்பிடும்போது கோபுரம், திருமதில், திருச்சுற்று முதலான வரையறைகளையுடையதாய் இடவரம்புக் குட்பட்டதென்பதை நாம் உணரலாம். இவ்வாலயத்தில் கருவறையும் அதன்மீது விளங்கும் விமானமும் தெய்வீகப் பொலிவுடன் விளங்குவன. இவ்வாலயத்தில் பாரெங்கணும் நீக்கமற நிறைந்து விளங்கும் பரம் பொருள் ஆன்மாக்களின் உய்வுக்காக எழுந்தருளி, அருள் சுரக்கின்றான். பூவின்கண் மணம் போலவும், தீயின்கண் சூடும் ஒளியும் போலவும் சிறந்து விளங்கும் இறைவனை நாம் உணர்ந்து வழிபட இவ்வாலயங்கள் பெரிதும் உதவுவன. இறைவழிபாட்டிற்கென புதிதாக ஆலயங்களை உருவாக்குவதும், உருவாகிய ஆலயங்கள் "பழுதடையும் போது அவற்றைத் திருப்பணி செய்து மீளப் புதுப்பித்தலும் எமது பண்பாட்டிலே காலங்காலமாக நிகழ்ந்து வரும் பணிகளாகும். இத்தகைய திருப் பணிகளைத் தொடர்ந்து உருப்பெறும் ஆலயத்தில் ஸ்தாபிக்கப்படும் பிம்பத்தில் தெய்வீக சாந்நித்தியம் கொண்டருள வேண்டும் வண்ணம் இறைவனை அவாவி நிகழ்த்தப்படுவதே கும்பாபிஷேகம் எனப்படு கின்ற பெருஞ்சாந்தியாகும். கும்பாபிஷேகத்திற்கான முன்னோடிக் கைங்கரியங்களில் ஈடுபடுவதும் உதவுவதும் பங்குகொள்வதும் மற்றும் கும்பாபிஷேகம் நிகழ்வதைத் தவிர்ப்பதும் சிறந்த பேற்றினை நல்கும் சிவ புண்ணியச் செயல்களாகும்.

திருக்கோயில்களில் நிகழும் கிரியைகள் மூவகைப்படுவன. நித்தியக் கிரியைகள், நைமித்தியக் கிரியைகள், காமியக் கிரியைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. நித்தியக் கிரியைகளின்போது நிகழும் குறைகளைப் போக்குவதற்கு நைமித்தியக் கிரியைகள் நிகழ்த்தப் படுகின்றன. திருக்கோயில்களில் பார்த்த நிலையில் பூசைகள் நிகழு மிடத்து தெரிந்தோ தெரியாமலோ விளையும் மந்திரக்குறைவு, கிரியைக் குறைவு, கரணக்குறைவு, திரவியக் குறைவு, சிரத்தைக் குறைவு போன்ற வற்றை நீக்கி நிறைவுபெறச் செய்யும் வண்ணமும் இறையருள் பரிபூரண மாகப் பிரகாசிக்கவும் நைமித்தியங்கள் நிகழ்கின்றன. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழாக்கள் இவற்றிலும் விளையும் குறைகளைப் போக்கிக்கொள் வதற்குச் செய்யப்பெறுவன பெருஞ்சாந்தியாகிய கும்பாபிஷேகங்கள். எனவே திருக்கோயில் வழிபாட்டு மரபில் கும்பாபிஷேகம் மிகவும் முக்கியத்துவம் பெற்ற கிரியையாக விளங்குகின்றது.

கும்பாபிஷேகம் நிகழவிருக்கும் ஓர் ஆலயம் எல்லா நிலை களிலும் புதுப்பொலிவுபெற்று விளங்குவதோடு ஆலயச் சூழலிலும் தூய்மையடைகின்றது. எனவே கும்பாபிஷேகத்தினைத் தரிசிக்கும் அடியவர்களுடைய உள்ளமும் புனிதமடைவது குறிப்பிடத் தக்கதாகும். அகப்புறத் தூய்மையைத் தருவது இந் நைமித்தியக் கிரியை.

கும்பாபிஷேகத்திற்குரிய சாதனங்களுள் மண்டபம், கலசங்கள், குண்டங்கள், நெய், சமித்து, தானியம், அன்னம், நைவேத்தியம், போன்றவை மிகவும் இன்றியமையாதவை. இத்தகைய சாதனங்களைப் பயன்தரச் செய்வதற்கும் சிவத்தன்மை இவற்றினிடத்தில் விளங்கச் செய்வதற்கும் உதவும் சாதனங்கள் நான்கு. ஆசாரியன், கும்பம், பிம்பம், அக்கினி கும்பாபிஷேகத்தில் முக்கிய இடத்தைப் பெறுவதை நாம் அவதானிக்கலாம். சோதி வடிவாய் விளங்கும் எல்லாம் வல்ல இறைவனை கும்பத்திலும் அதிலிருந்து பிம்பத்திலும் நிலைபெறச் செய்பவன் சிவாச்சாரியன் ஆவான். கும்பாபிஷேகத்தின்போது இறைவன் ஒளிப்பிழம்பாகக் குண்டத்தில் எழுந்தருள்வான். அக்கினி என்ற நிலையில் குண்டத்தில் இறைவன் ஆராதிக்கப்படுகின்றான். தீயானது தேயு என்ற பூத வடிவானது. உருவுடையது. அருவான ஆகாயத்திலுள்ள பரசிவத்தை ஒளியான உருவாக எழுந்தருள வேண்டிக் கொள்வதே அக்கினி வழிபாடு.

அதனை மேலும் பருப்பொருளாக்கித் தருவதே கடஸ்தாபன மாகும். ஒளியாய் கட்புலனாக விளங்கும் கடவுளை நீராகக் கண்ணுக் கும் புலன்களுக்கும் உருக்கொள்ளச் செய்து, அந்நீரில் பிறவி வினை களின் வெப்பத்தைப் போக்கும் இயல்பினதாய மந்திர ஒலிகளால் கலந்து நிற்கச்செய்வதே கடஸ்தாபன வழிபாடு. இங்ஙனம் கடத்தில் விளங்கும் இறைவனை, திருவுருவத்தில் விளங்கச் செய்வதே கும்பாபிஷேகம். ஆலயத்தில் கும்பாபிஷேகத்தின் போது தெய்வமூர்த்திகள் எழுந்தரு ளும் கர்ப்பக்கிருகம், மற்றும் ஏனைய இடங்களின் மேல் விளங்கும் விமானம், கோபுரம் ஆகியவற்றுக்கும் அபிஷேகம் நிகழ்த்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. விமானம், கோபுரங்களுக்குச் செய்யும் கும்பாபிஷேகம் மக்கள் ஆலயங்களையும் அரனெனத் தொழுவதற்காகச் செய்யப்படு வனவாகும்.

கும்பாபிஷேகம் நிகழும் காலங்களில் யாகசாலையில் எழுந்தருளி யுள்ள இறைவனுக்கு ஆறுகால வழிபாடு நிறைவேறும்போது இடம் பெறும் கிரியையாகிய நாடிசந்தானம் முக்கியத்துவமுடையது. மின் சத்தி கம்பியின் வழியே சென்று பயன்படுவது போன்று, தருப்பைக் கயிற்றின் உதவியினால் ஆசாரியனுடைய அடியார்களுடைய தியான தரிசன விசேடத்தினால் சிவத்துவ சக்தி குண்டத்தினின்றும் கும்பத் திற்கும் அதனின்று பிம்பத்திற்கும் அதனின்று கோபுர விமானங்களுக்கும் வியாபித்து விளங்கச் செய்யப்படுகின்றது. குண்டத்தின் தெய்வீகச் சக்தியை கும்பம் விம்பம் ஆகியவற்றில் இணைக்கச் செய்வதற்கு நாடி சந்தானம் பெரிதும் துணைபுரிகின்றது. யாகசாலையில் எழுந்தரு ளியுள்ள இறைவனுக்கு அனைத்து உபசாரங்களும் வழிபாட்டின் போது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். வேத பாராயணம், திருமுறை பாராயணம் போன்றவை சிறப்பிடம் பெறுவன.

கும்பாபிஷேகக் கிரியை பிறிதோர் வகையில் இயற்கை வழிபாட் டின் சிறப்பினையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறைவனை வழிபட நிறுவப்படும் மண் அம்சம் வாய்ந்த விக்கிரகத்தில் எழுந்தருளச் செய்வதற்காக விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நிலையைக் குறிக்கின்றன.

கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வதற்கு அமைக்கப்படும் யாக சாலை ஆகாயவெளியில் அமைவது குறிப்பிடத்தக்கது. இங்கு அமைக்கப்படும் குண்டங்களில் அக்கினியும் வாயுவும் ஒன்றிணைந்து விளங்குகின்றன. யாகசாலையின் மையத்தில் விளங்கும் வேதியில் அமைவது கும்பமாகும். அதில் நீர் நிறைந்து விளங்கும். இவ்வாறு பஞ்சபூதங்களின் ஒடுக்கம் இறுதியில் பூமி அம்சம் வாய்ந்த திருவுரு வத்தில் நிறைவுறுகின்றது. திருவுருவத்தைக் கும்பநீரால் அபிஷேகம் செய்த மாத்திரத்தில் அது இறை அம்சத்துடன் தெய்வீகப் பொலிவு பெற்று வழிபாட்டிற்கும் உபசாரத்திற்கும் உரியதாக விளங்குகிறது. பிம்பம் என்ற பெயர் நீங்கி அத்திருவுருவம் வழிபாட்டிற்குரிய தெய்வத்தின் திருநாமத்தைேயே பெற்று விடுவது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சத்தில் உள்ள பொருள்களில் இறைவன் விரவியுள்ள காரணத்தால் அட்டமூர்த்தி எனச் சிறப்பிக்கப்படுகின்றான். ஐம்பூதங் களோடு இவற்றுக்குப்புறம்பாய் இருந்து அவற்றின் ஆற்றல் பெருக்கும். சூரியனும் சந்திரனும் இவ்வேழு அம்சங்களின் வேறாய் நின்று உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இதில் அடங்குகின்றன. இவ் எட்டு அம்சங்களில் இறைவனை உணர்ந்து வழிபடுதலே கும்பாபிஷேகக் கிரியையின் உயர் நோக்கமாகும். நவ குண்டங்களில் அக்கினியைப் பல்வேறு நிலைகளிற் பூசித்து, அந்தக் குண்டங்களுக்குரிய சமித்து வகைகள், விசேட ஓமங்கள், பூர்ணாகுதி முதலியன இடம் பெற்று யாகம் பூரணப் பொலிவு பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகக் கிரியையின் பின்னர் இறைவன் ஆலயத்தில் சாந்நித்தியம் பெற்று அடியவர்களின் பக்திக்கு உரியவனாகின்றான். இறைவனுக்குப் பல்வகை உபசாரங்களும் அபிஷேகம் , அலங்காரம், நிவேதனம், அர்ச்சனை, தோத்திரம் போன்றவையும் முறையாக இடம் பெறுவன. இறைவனுக்கு நிகழும் உபசாரத்திலும் பஞ்ச பூத அம்சங்களே விரவியுள்ளன. சந்தனம், பழம், புஷ்பம், போன்றவை கொண்டு நிகழ்வது பார்த்திப உபசாரமாகும். இவை மண்ணோடு தொடர்புடையன. பால், தயிர், தீர்த்தம் போன்றவை. நீரின் உபசாரமாக அமைவன தீபம், நவரத்தினம் போன்றவை. ஆக்னேய உபசாரம், அக்கினியின் தொடர்பைச் சுட்டுவன. தூபம், சாமரை போன்றவை. வாயு உபசாரங்களாவன மணி, கானம், வாத்தியம் முதலியன ஆகாய சம்பந்தமான உபகாரங்களாகும். எனவே இறைவனுக்கென வழங்கப் படும் அனைத்து உபதலங்களும் ஐம்பூத ஆக்கமாக விளங்குகின்றன. தென்னாட்டில் விளங்கும் பஞ்சபூதத் தலங்கள் இயற்கைச் சக்திகளையே குறிப்பதோடு இறைவனின் மகிமையை உணர வழிவகுக்கின்றன. இவ்வகையில் திருவாரூர் பிருதிவித் தலமாகவும் திருவானைக்கா அப்புத்தலமாகவும், திருவண்ணாமலை தேயுத் தலமாக வும், திருக்காளத்தி வாயுத் தலமாகவும், சிதம்பரம் ஆகாயத் தலமாகவும் சிறப்பிக்கப்படுகின்றன.

இயற்கை வழிபாட்டோடு தொடர்புறும். இத்தகைய கும்பாபி ஷேகத்தில் மந்திரம், கிரியை, பாவனை, ஆசாரியனது கிரியா நுட்பத்தின் வழியால் சிறப்படைகின்றன. மூர்த்தி விசேடத்தை உண்டாக்க இவை பெரிதும் உதவுவன. கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் ஆசாரியான் ஆகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிலும் கிரியா நுட்பத்திலும் தேர்ச்சி பெற்றவனாகவும் மதிநுட்பம் மிக்கவனாகவும் விளங்குதல் அவசியம், பிரதான சிவாச்சாரியாருக்கு அனுசரணையாக சர்வபோதகர், சர்வசாதகர் மற்றும் மூர்த்திகளுக்குரிய குருமார் பெரிதும் துணைபுரிவர். கும்பாபிஷேக ஒழுங்குகளுக்குச் சிவாச்சாரியரே பெரிதும் பொறுப்புடையவர். எனவே அவரது வேகத்தினாலும் வழிகாட்டலினாலுமே கும்பாபிஷேகக் கிரியைச் சிறப்புறும் என்பதில் ஐயமில்லை. சிவாச்சாரியார் மந்திரம் மற்றும் கிரியா முறைகளில் தேர்ச்சி பெற்றவராகவும் அனுபவம் மிக்கவராகவும் தூய ஒழுக்கத்தினராகவும் சதா சிவசிந்தனை மிக்கவராகவும் தன்னலங் கருதாதவராகவும் விளங்குதல் வேண்டும். சிவாச்சாரியர் ஆத்மார்த்த நிலையில் பெறுகின்ற தெய்வீக அனுபவமே பரார்த்த நிலையில் சிறப்புப் பெறுகின்றது. கும்பாபிஷேக வேளையில் அமைதி, ஒழுங்கு, தூய்மை ஆகியவற்றை நிலைபெறச் செய்வதில் சிவாச்சாரியாருக்குப் பெரும் பங்கு உண்டு. ஆலயத்தின் எசமானனும் இதற்கு உறுதுணையாக விளங்குதல் வேண்டும்.

ஆலயங்கள் இல்லாத இடங்களில் ஆகம மரபின்படி ஆலயங் களைப் புதிதாக அமைத்து இறைவனைப் பிரதிஷ்டை செய்தல் அநாவர்த்தன பிரதிஷ்டை எனப்படும். பல காலத்திற்கு முன் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நிறைவேறி வரும்வேளை எதிர்பாராதவாறு காடுபடர்தல் மண்மாரி தீபரவுதல் முதலியவை நிகழ்ந்து ஆலயம் மறைக்கப்படின் அதனை வெளியாக்கியோ அல்லது ஆலயத்தை முன்போல புதிதாக நிர்மாணித்தோ நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனப் பெயர் பெறும். நித்திய நைமித்தியங்கள் நடைபெற்று வரும் ஆலயத்தில் விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம் ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் பழுதடைந்தால் பாலஸ்தாபனம் செய்து முன்போல அழகாகவும் உறுதியாகவும் அமைத்து பிரதிஷ்டை செய்தல் புனராவர்த்தனப் பிரதிஷ்டை என வழங்கப்படுகின்றது. திருடர் பிரவேசித்தல், மக்கள் எவரேனும் இறத்தல் முதலானவை நிகழின், உடனே பிரதிஷ்டை நிகழ்த்தப்படும். இதற்கு நாள், நட்சத்திரம் பார்க்கத் தேவையில்லை. உடன் செய்யப்படுவதே இப்பிரதிஷ்டை.

இவ்வாறாக, மந்திரம், கிரியை, ஜபம், தியானம், ஹோமம், பாராயணம் முதலியவைகளால் பொலிவு பெற்று நிகழும் கும்பாபி ஷேகக் கிரியையினால் ஆலயத்தில் தெய்வீக சாந்நித்தியம் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மக்கள் ஞானம் கைவரப் பெற்று நலமுடனும் செல்வச் சிறப்புடனும் வாழ்வர். கிராமத்திலும் உலகத்திலும் அமைதியும் சீரும் சிறப்பும் மேலோங்கும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நிகழ்வது மண்டலாபிஷேகம். கும்பாபிஷேகம் செய்த பலனை அடையும் பொருட்டு இன்றியமையாது செய்யப்படுவது மண்டலாபிஷேகமாகும். ஒரு மண்டலம் 45நாட்களைக் கொண்டது. சிலர் 48 நாட்கள் என்றும் கொள்வர். மண்டலாபிஷேகத்தை அரை, கால் என்ற கணக்கிலும் இடம் பெறுவன. கும்பாபிஷேகம், மஹா கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், ஆகியவற்றால் தெய்வீகப் பொலிவு பெற்ற கோயில்களில் நித்திய பூசைகள் எத்தகைய தடங்கலுமின்றி ஒழுங்காக நிகழ்த்தப்பட்டால் தான் கும்பாபிஷேகத்தினால் எமக்குப் பூரணமான பயன் கிட்டுவதாகும்.

எனவே கும்பாபிஷேகம் நிகழ்ந்த கோயில்களில் நித்திய நைமித்தியங்கள் எதுவித இடையூறுமின்றி நிகழ்வதற்கு அடியார்கள் பெருந்துணை புரிதல் வேண்டும். கும்பாபிஷேகத்தினால் பெறப்பட்ட தெய்வீக சாந்நித்தியத்தைப் பேணிப் பாதுகாப்பது அடியவர்களுடையதும் சிவாச்சாரியாரதும் ஆலய எசமானனினதும் பெருங்கடனாகும். இத்தகைய தெய்வீகக் கைங்கரியம் சிறந்த சிவ புண்ணியமாகப் போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பம் தரும் தாருகாவனேஸ்வரர் !

கங்கைக்கு இணையாக புனிதமாகக் கருதப்படுவது தென்னிந்தியாவில் பாயும் காவிரி. இந்த காவிரியாற்றின் தென் கரையில் அமைந்துள்ளதுதான் திருப்பராய்த்துறை என்ற ஊர்.

திருச்சியில் இருந்து கரூர் செல்லும் சாலையில் 16ஆவது கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது இந்த ஊர். இங்குள்ள தாருகாவனேஸ்வரர் என்ற சிவன் கோவில் மிகவும் புகழ்பெற்றது. இது, காவிரியாற்றின் தென் கரையில் உள்ள 127 சிவ ஸ்தலங்களில் ஒன்றாகும்.

முதலாம் ராஜராஜன், மாறவர்மன், சுந்தரபாண்டியன், விஜயநகரம் வீரகம்பண்ண உடையார், கிருஷ்ணதேவராயர், விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கர் ஆகியோரது காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோவிலில் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் கல்வெட்டுக்களில் இருந்து இக்கோவில் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது தெரிய வருகிறது.

தற்போது கோவில் அமைந்துள்ள இடம் முந்தைய காலத்தில் பராய் மரங்கள் நிறைந்த காட்டுப்பகுதியாக இருந்தாலும், காவிரியாற்று துறையில் இருப்பதாலும் 'பராய்த்துறை' என்று பெயர் ஏற்பட்டதாக கூறுகின்றார்கள். பராய் மரங்கள் நிறைந்த இப்பகுதியில் தவம் செய்த முனிவர்கள் கடவுளைப் பற்றிய சிந்தனையில்லாமல் கடமை செய்வதே போதும் என்று எண்ணி வாழ்ந்தனர். இதனால் அவர்களுக்கு அகந்தை ஏற்பட்டது.

இந்த முனிவர்களின் ஆணவத்தைத் தடுத்து நிறுத்த முயன்ற சிவபெருமான் பிச்சை ஏற்கும் பிச்சாடணார் கோலத்தில் உருவெடுத்து முனிவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றார். பிச்சாடணார் உருவத்தில் வந்திருப்பது இறைவன் என்று அறியாமல் முனிவர்கள் இருந்தனர்.

முனிவர்களின் மனைவிகள் இறைவனுடைய பிச்சாடணார் கோலத்தில் மயங்கினர். தங்களை மறந்து பிச்சாடணார் பின்னால் செல்லத் தொடங்கினர். இதனைக் கண்ட முனிவர்கள் பிச்சாடண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியை அழிக்க அபிசார வேள்வி என்ற யாகத்தைச் செய்தனர். யாகத்தில் தோன்றிய புலியை இறைவன் மேல் ஏவினர். இறைவன் புலியைக் கொன்று புலித்தோலை ஆடையாகக் கட்டிக் கொண்டார்.

அதன் பிறகு முனிவர்கள் மானை ஏவினார்கள். இறைவன் அதை அடக்கி இடக்கரத்தில் ஏந்திக்கொண்டார். அதன் பிறகும் ஆத்திரம் கொண்ட முனிவர்கள் பாம்புகளை ஏவினர். சிவபெருமான் அவற்றைத் தனக்குரிய அணிகலன்களாக மாற்றி இடுப்பிலும், கழுத்திலும் அமைத்துக் கொண்டார். அதன்பிறகு முனிவர்கள் பூத கணங்களை ஏவினர். அவற்றை சிவபெருமான் தன்னுடைய படையில் சேர்த்துக் கொண்டார்.

இறுதியாக மிகப் பெரிய யானைகளை ஏவி விட... இறைவன் இந்த யானைகளின் தோலை உரித்து அதைத் தன்மீது போர்த்திக் கொண்டார். இதன் பிறகுதான் முனிவர்களின் ஆணவம் அடங்கியது. அவர்கள் பக்திக் கண்களால் இறைவனைத் தேடினர். இறைவன் முனிவர் களுக்கு தாருகாவனேஸ்வரராகக் காட்சியளித்து அவர்களின் செருக்கை அடக்கினார். இந்தச் சம்பவம் இந்தத் திருத்தலத்தில் நடைபெற்றது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவி பசும்பொன் மயிலாம்பிகை என்று அழைக்கப் படுகிறார். வட மொழியில் ஹேம வர்ணாம்பிகை என்று அழைக்கப் படுகிறார்.

இந்தத் தலத்திற்குரிய தீர்த்தம் காவிரி. தினமும் காலையில் காவிரியாற்றில் இருந்து கொண்டு வரப்படும் தீர்த்தத்துடன் திருமஞ்சன பூஜை நடைபெறுகிறது. காமிகா ஆகம முறைப்படி நாள் தோறும் நான்கு காலை பூஜைகள் நடைபெறுகின்றன.

## திருமணத்தடை நீக்கும் பரிகாரம்

தாருகாவனேஸ்வரர் கோவிலின் தல விருட்சமாக பராய் மரமே விளங்குகிறது. இந்தப் பராய் மரத்தை செவ்வாய்க்கிழமை காலை காவிரியாற்றில் குளித்து விட்டு வழிபட்டு வந்தால் மனிதனுக்கு ஏற்பட்ட எந்த நோயினாலும் சரியாகிவிடும் என்கிறார்கள். மேலும் இந்தக் கோவிலில் உள்ள சப்த கன்னிமார் உடன் சேர்ந்துள்ள வராகி அம்மனுக்கு ஒருகால மண்டல பூஜை செய்து வந்தால் திருமணம் ஆகாதவர்களுக்கு மண்டல பூஜை முடிவதற்குள் நிச்சயமாக திருமணம் நடைபெறும் என்றும் கூறுகிறார்கள். பராய் மரத்தின் இலைகளையும் மரத்தின் பட்டைகளையும் சாப்பிட்டு வந்தால் தோல் நோய், மற்றும் தீராத நோய்கள் தீரும் என்பதும் இங்கு வரும் பக்தர்களின் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணம் தரும் நாராயணன்

பாரம்பரியம் மிக்க காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பெயர் பெற்ற ஊர் சிறுவந்தாடு. ஒரு நகரமாகவும் அல்லாமல். கிராமமாகவும் அல்லாமல், வணிக முக்கியத்துவம் வாய்ந்த ஊராக சிறப்புற்று விளங்கியிருக்கிறது.

இத்தகைய பழம் பெருமை வாய்ந்த சிறுவந்தாட்டில் லட்சுமி நாராயணப் பெருமாள் எழுந்தருளியிருக்கிறார். திருவஹிந்திரபுரம் தேவநாதசுவாமி ஆலயத்திற்கு வடமேற்கிலும், திருக்கோவிலூர் உலகளந்தப் பெருமாள் கோயிலுக்குக் கிழக்கிலும், தென்பெண்ணை ஆற்றுக்கு வடக்கிலும், தற்போது புகழ் பெற்றுள்ள பூவரசங்குப்பம் லட்சுமி நரசிம்மப் பெருமாள் கோயிலுக்குச்செல்லும் பாதையில், அவ்வூருக்கு முன்னதாக லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில் அமைந்துள்ளது.

சில கல்வெட்டு சான்றுகளின் அடிப்படையில் இக்கோயில் 750 ஆண்டுகள் பழமையானது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும் மூலவரின் சிற்ப அமைப்பு முதலிய அம்சங்களைக் கொண்டு பார்த்தால் விஜயநகர மன்னன் அச்சுதராயன் ஆட்சியில் இக் கோயில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிய வருகிறது. எனவே 500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கோயிலின் தற்போதைய அமைப்பு 19ஆம் நூற்றாண்டின் கட்டிடக்கலை அமைப்பைக் கொண்டது. கோயில் முழுவதும் கருங்கல் லால் கட்டப்பட்டு , விமானம் மட்டும் சுதை வேலைப்பாடுடையதாக உள்ளது. மூலவர் விமானம் ஏகதள விமானம் இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், முக மண்டபம், கருட மண்டபம், பலிபீடம், தீபஸ்தம்பம் என்று ஆகம விதிகளைப் பின்பற்றி முழுமை யான கோயில் அமைப்புக்களுடன் விளங்குவது சிறப்பு. நாற்புறமும் கருங்கல் பாதி, கட்டிடம் பாதியாக பெருமதிற்சுவர் கொண்டு கிழக்கு நுழைவாயிலுடன் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறையில் மூலவர் லட்சுமி நாராயணப் பெருமாள், பீடத்தின் மீது வலது காலை ஊன்றி, இடது காலை மடித்து "சுகாசனம்" என்ற அமர்ந்த நிலையில் உள்ளார். பெருமாளின் வலது பின்கரத்தில் சக்கரமும், இடது பின்கரத்தில் சங்கும் அமைந்துள்ளது. மடியில் இடது பக்கமாக லட்சுமி அமர்ந்த நிலையில் இருக்க, வலது முன் கரத்தால் லட்சுமியின் இடையை அணைத்தவாறும், சாந்தமான முகபாவத்துடன் அருள்பாலிக்கும் நிலையிலும் சேவை சாதிப்பதால் லட்சுமி நாராயணராகப் பூஜிக்கப்படுகிறார். லட்சுமி தன் வலக்கையால் பெருமாளை அணைத்தபடியும், இடக்கையில் தாமரை மொட்டை ஏந்தியும் சேவை சாதிக்கிறார். இந்த ஈடிணையற்ற அழகுத் தோற்றம் காணக் காணத் திகட்டாத தரிசனமாகும்.

கோயிலில் தென்மேற்கு மூலையில் தாயார் சந்நிதி அமைந் துள்ளது. கனகவல்லித் தாயார் என்ற திருநாமத்துடன் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் அன்னை. ஆதி முதலே கருங்கற் கட்டிட சந்நிதியாக அமைந்திருக்கிறது. சந்நிதிக்கு முன்பாகத் தற்போது அர்த்த மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது. முகப்பு மண்டபத்தின் வடக்காக கோதண்டராமருக்கு என்று தனிச் சந்நிதி உள்ளது. இச் சந்நிதி 1884-இல் இணைப்பு சந்நிதியாகக் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் தெரி விக்கின்றன. வில்லேந்திய ராமர், வில்லேந்திய லட்சுமணர், சீதா பிராட்டி, கைகூப்பி வணங்கும் நிலையில் ஆஞ்சநேயர் என்று கொள்ளை அழகோடு அமைந்துள்ளனர். துவாரபாலகர் சிலைகள் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Harikanan, Jaffna.

பிள்ளையார்பட்டி, தமிழ்நாடு, இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org